# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 26 புதன்கிழமை (11.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 258


# மஹிந்த - ரணில் நேற்றுத் திடீர் சந்திப்பு

# மீண்டும் பேச இணக்கம்; ஐ.தே.கவில் அதிருப்தி

## இன்றைய செயற்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும்

கொழும்பு, ஓகஸ்ட் 11

அரசமைப்புத் திருத்தம் மற்றும் தேர்தல்கள் மறுசீரமைப்பு தொடர்பாக அரசுடன் பேச்சு நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இணக்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற திடீர் சந்திப்பின்போது இந்த இணக்கம் எட்டப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதியுடனான சந்திப்பில் தொடர்ந்து பேசுவதற்கான இணக்கத்தை ரணில் தெரிவித்திருக்கிறார் என்றும் இன்று நடக்கவிருக்கும் கட்சிச் செயற்குழுக்கூட்டத்தில் இந்த விவகாரம் பூதாகாரமாக உருவெடுக்கும் என்றும் ஐ.தே.க. உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன. (23ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் வெப்பநிலை நாளுக்குநாள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.11

குடாநாட்டின் வெப்பநிலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது என்று வளிமண்டலத் திணைக்களத்தின் யாழ். அலுவலக அதிகாரி எஸ்.புஸ்பநாதன் தெரிவித்தார்.

நேற்று 36.3 செல்ஸியஸ் வெப்பநிலை பதிவாகியது என்றும் இன்றும் அதேயளவு வெப்பநிலை இருக்கும் என்றும் அவர் கூறினார்.அடுத்த சில தினங்களில மழை பெய்யும் சாத்தியம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஓ- ஐ)

## இலங்கைக் கடற்படையைக் கண்டித்து சென்னையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஓக. 11

தமிழக மீனவர்கள் மீது, இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதைக் கண்டித்து சென்னையில் மீனவர் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்னால் மீனவர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறலுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும் இலங்கைக் கடற்படைக்கு எதிராக (24ஆம் பக்கம் பார்க்க)

## பஸில் குழுவினரின் இந்திய விஜயம் குறித்து விளக்கவே சென்றாராம் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, ஓக. 11

பஸில் ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்டக்குழு ஒன்று இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்வது தொடர்பில் சீனாவுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கிலேயே அமைச்சர் பீரிஸின் சீனப்பயணம் அமைந்திருக்கிறது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மூன்று நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு சீனாவுக்குச் சென்றுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது சீனாவின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் அந்நாட்டின் முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்தும் ஏனைய முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் பேச்சு நடத்தும் நோக்கில் பீரிஸின் பயணம் அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும், பஸில் தலைமையிலான உயர்மட்டக்குழு ஒன்று இந்தியா விற்கு பயணிக்கவுள்ள நிலையில் அது தொடர்பில் சீனாவுக்கு தெளிவுபடுத்தும் நோக்கிலேயே அவரது சீனப்பயணம் அமைந்திருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## இலங்கைப் போர்க்குற்ற சர்வதேச விசாரணைக்கு ஆஸ்திரேலியா உரத்துக் குரல் கொடுக்க வேண்டும்

### அந்நாட்டு வேட்பாளரான யாழ். தமிழ்ப்பெண் கோரிக்கை

கொழும்பு, ஓக. 11

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்து சர்வதேச மட்டத்தில் விசாரணை நடத்த சர்வதேச சமூகத்துடன் சேர்ந்து ஆஸ்திரேலியா உரத்துக் குரல் கொடுக்க வேண்டும் - என்று எதிர்வரும் ஆஸ்திரேலிய செனட் சபை தேர்தலில் கிறீன் கட்சியின் சார்பாகப் போட்டியிடுகின்ற யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண் பிராமி ஜெகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈழத் தமிழர்களின் பேரவலங்களைப் புரிந்துகொள்வதற்கு ஆஸ்திரேலிய அரசு போதுமான முயற்சிகளை எடுக்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டி உள்ளார்.

அந்நாட்டு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவற்றைத் (24ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் முதல் அமர்வு இன்று கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 11

கடந்த காலப் படிப்பினைகளை கண்டறியும் ஜனாதிபதி நல்லிணக்க ஆணைக் குழுவின் முதலாவது அமர்வு இன்று ஆரம்பமாகின்றது.

கொழும்பு - 07, ஹோட்டன் பிளேஸ், 24 ஆம் இலக்கத்திலுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தில் இந்த அமர்வு நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து, எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் வவுனியாவில் பொது (24ஆம் பக்கம் பார்க்க)

## பிரதியமைச்சர் மேர்வினின் பதவியை பறித்தெடுத்தார் ஜனாதிபதி மஹிந்த!

கொழும்பு, ஓக. 11

பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் பதவி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அதிரடியாகப் பறிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும் மேர்வின் சில்வாவை நீக்குவது என்று கட்சி ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நேற்று மாலை அலரிமாளிகையில் நடைபெற்ற ஆளும் கட்சியின் முக்கிய தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்திலேயே ஜனாதிபதி இந்த அறிவித்தலை வெளியிட்டார். (24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் லக்ஷ்மன் செனிவிரத்ன ஜெனரல் பொன்சேகாவுக்கு எதிராகச் சாட்சி

### இராணுவ நீதிமன்றில் வழங்கியதாகத் தகவல்

கொழும்பு, ஓக. 11

ஜெனரல் சரத் பொன்சேகா மீதான வழக்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரத்ன அவருக்கு எதிராகச் சாட்சியளித்தார் என்று இராணுவ ஊடகப் பிரிவு அதிகாரி கேணல் துமிந்த கமகே தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா மீதான விசாரணைகளுக்கு என நிறுவப்பட்ட முதலாவது இராணுவ நீதிமன்ற விசாரணைகள் நேற்றுக் (24ஆம் பக்கம் பார்க்க)

## சன் - சீ கப்பல் தொடர்பில் கனேடிய அரசு கரிசனை

ஒட்டாவா, ஓக. 11

கனடா வான்கூவர் துறைமுகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் சன் - சீ கப்பல் குறித்து நடவடிக்கை எடுக்க கருதவில்லை என கனேடிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் விக் டோவ்ஸ் தெரிவித்துள்ளார்.

கனடாவை நோக்கி 219 இலங்கையர்களுடன் பயணித்துக்கொண்டிருக்கும் சன் சீ - கப்பல் குறித்து கனடா அரசு கரிசனை கொண்டுள்ளது என டொரண்டோ பொருளாதாரக் கழக வைபமொன்றில் உரையாற்றும் போது அவர் தெரிவித்தார்.

சன் - சீ கப்பலை தமது அதிகாரிகள் பல வாரங்களாக அவதானித்து வருகின்றனர் எனத் தெரிவித்த அவர், ஆள்கடத்தலுக் (24ஆம் பக்கம் பார்க்க)




அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட்டின் சேவைகள் யாழ் மக்களுக்கு, சுன்னாகம் கிளையில் 12.08.2010 முதல்

அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்திற்கமைவாக இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் நிதிக் கம்பனியாக பதிவு செய்யப்பட்ட அபான்ஸ் குழுமத்தின் ஓர் அங்கமாகும்.

எமது சேவைகள்
★ நிலையான வைப்பு
★ சேமிப்பு வைப்பு
★ குத்தகை, வாடகைக் கொள்வனவு
★ தவணைக் கடன்
★ சொத்து வியாபாரம்
★ ஏனைய நிதிச் சேவைகள்

Abans FINANCE

தொடர்புகளுக்கு : 160 1/1 & 1/2, கே, கே, எஸ் வீதி, சுன்னாகம். தொ.பே: 021 3207686 தொ.ந: 021 224 1124


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விசேட தேவையுடைய சிறுவர் முகாம்

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் விசேட தேவை உடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட மாணவர்களை அழைத்துவருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஒ-10)


ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

An ISO 9001:2000 Certified Company

**Spoken English** பயிற்சி மையம்

veta®

Experts in English Training



நெல்லியடி நகரிலும்

Foundation, First Step க்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி |
|---|---|
| Sat,Sun 8.30 a.m. | Tue,Thu 9.00 a.m. |
| Sat, Sun 3.30 p.m. | Sat, Sun 5.30 p.m. |
| Mon,Wed 5.00 p.m. | |

நவீன நுட்பங்களுடன் அடிப்படையில் இருந்து இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலலாம்.

**DMI COMPUTER EDUCATION**

No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403

M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel.: 021 - 320 7700


## மரண அறிவித்தல்

### கந்தையா தருமலிங்கம்

(இளைப் பாறிய கிராம சேவையாளர், சித்தன்கேணி),



சங்கரத்தை, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தருமலிங்கம் (இளைப் பாறிய கிராம சேவையாளர், சித்தன்கேணி), 09.08.2010 திங்கட்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஏரம்பு தம்பதியினரின் (மண்டைதீவு) பாசமிகு மருமகனும் பெரியநாயகியின் அன்புக் கணவரும் வதனியின் பாசமிகு தந்தையும், ரமணேசின் அன்பு மாமனாரும் ரம்மினா, வக்சாந் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான தங்கராசா, பொன்பாக்கியம், பத்மநாதன் மற்றும் இராசலட்சுமி, யோகநாதன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் கார்த்திகேசு, சோதிலிங்கம், திருநாவுக்கரசு, சிதம்பரநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுவிற்சர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*சுவிற்சர்லாந்து.* (சி-569783) **வதனி ரமணேஸ் (மகள்).**

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஓக 11

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2277ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "P" என்ற ஆங்கில எழுத்தும் 6/2/9/2/4/1 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 6/2/9/2/4/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/9/2/4/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/2/4/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 142 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/4/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1364 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

4/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13408 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

1 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 132847 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 6/2/9/2/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/2/9/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 136 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

6/2/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1334 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

6/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13214 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"P" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 53155 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

(ஒ-10)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் பொன்னம்பலம்



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கரந்தன், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் பொன்னம்பலம் 06.08.2010 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சறோஜினிதேவியின் பாசமிகு கணவரும், சசிகலா (கனடா), சந்திரகலா (பிரான்ஸ்), சத்தியகலா (லண்டன்), சத்தியபிரியா (இயக்குநர், சக்திகலா கேந்திரா நடனப்பள்ளி, கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனபாலசிங்கம் (கனடா), கிருபாகரன் (பிரான்ஸ்), நந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், அருந்தவமலர், காலஞ்சென்றவர்களான துரைராஜா, அன்னபூரணம் மற்றும் வேலாயுதபிள்ளை அமரர் தர்மலிங்கம் மற்றும் நாகலஷ்மி, பாலசிங்கம், அருளானந்தம் (இத்தாலி), பரமேஸ்வரி, வசந்தாதேவி, வசந்தகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் ராசமணி மற்றும் சுந்தரலிங்கம் மனோன் மணி (சிங்கப்பூர்), அமரர் ராசலிங்கம் மற்றும் பவளராணி (ஜேர்மனி), விஜயலக்சுமி (சுவிஸ்), தர்மலிங்கம் (J.P) ஆகியோரின் மைத்துனரும் சஜிந்தன், சஜீபா, சனோஜன், வித்தியா, விதுஷன், வினோத், வினித், சரணியா, சரவணன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.08.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரந்தன் வீதி,*
*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*

(சி-569784)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27.04.1968

மறைவு 23.07.2009

### இராசையா திருச்செல்வம்

ஒரு கொடியில் மலர்ந்த பூக்கள்
உள்ளத்தால் சிறந்த பூக்கள்
ஒன்று கருகி விழ்ந்ததே
உள்ளம் உருகி அழுததே
கூடப் பிறந்த எம் குலக் கொழுந்தே
அன்பு காட்டி எமையெல்லாம்
அரவணைத்த எம் சகோதரனே
வன்பு பேசாது என்றும்
வாழ்வின் இனிய எம் சகோதரனே
எமக்கு முன்பு நீ சென்று
எம் இதயம் நோக விட்டு
ஏன் சென்றாய் பெற்றவரை இழந்தபோதும்
பற்றுடன் உமை வளர்த்தேன்
காலமெல்லாம் எம்மைக் கண்ணீரில் மிதக்கவிட்டு
கடவுள் அடி சேர்ந்தாயே
மறு பிறப்பில் நாமெல்லாம்
மறுபடியும் ஒன்று கூடி
ஒரு செடியில் பூத்து
உவகையுடன் வாழ பாணாவிடைச்சிவன்
திருவடியைப் போற்றுவோம்.

அன்னாரின் நினைவாக புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தானத்தில் இன்று (11.08.2010) புதன்கிழமை விசேட பூசையும் பகல் அன்னதானமும் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*7 ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.*

(101849)

சகோதரம்
**இ.கந்தசாமி.**


## பொது அறிவித்தல் (Public Notice)

**Cable TV Operators**

Sun Tv, K TV, Sun Music

ஆகிய சௌனல்களின் கேபிள் டிவிக்கு வழங்கும் ஏக முகவர்களாக

**LBN**

**Lanka Broadband Network (Pvt) Ltd.**

நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேற்குறிப்பிட்ட செனல்களை இன்றுமுதல் (11.08.2010) எங்களின் அனுமதியின்றி DTH அல்லது வேறு வகையில் கேபிள் டிவியில் ஒளிபரப்புவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

மேலதிக விவரங்களுக்கு:

**Lanka Broadband Network**
**241/32, Kirula Road, Narahenpita, Colombo 05.**
**Tel: 5 300 300, Fax: 4517220**
**E-mail: indika@lbn.lk**

*OR*

*Micro World*
*136, Dam Street, Colombo 12.*
*Tel: 2473744, 2478163. Fax: 2478172. Direct: 0777 412483*
*E-mail: shivacmb@hotmail.com*

*OR*

*Jaffna District Distributor*
*A.Dusyanthan*
*874, Hospital Road, Jaffna.*
*077 3105921/ 021 5677779/ 0775590493*
*E.mail: u.s.guesthouse@gmail.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## உலகின் மூத்த தலைவர்களே, நீங்கள் சப்பாத்தின் அளவுக்குக் காலை வெட்டுவீர்களா?

✱ இனரீதியான, சிறுபான்மையினரின் நீண்ட கால அரசியல் ஓரங்கட்டலுக்கு முடிவு காணப்படவேண்டும்.

✱ காணிப் பிரச்சினைகள், பொருளாதார அபிவிருத்திப் பணிகள் மற்றும் அரசமைப்புச் சீர்திருத்தம் போன்ற விடயங்களில் நாட்டின் வடக்கு-கிழக்கு மக்களுடன் அர்த்தமுள்ள விதத்தில் கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவேண்டும்.

✱ சந்தேகத்தின் பேரில் முன்னாள் போராளிகளாகக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உடனடியாக ஐ.சி.ஆர்.சி. நிறுவன உதவிகள் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

✱ அரசியல் சார்ந்த நோக்கமில்லாமல் சாட்சிகளின் அடிப்படையிலேயே வழக்கு விசாரணைகளை நடத்துவதை உறுதிப்படுத்த, நீதித்துறையில் அரசியல் தலையீட்டை நிறுத்தவேண்டும்.

உலக மூத்த தலைவர்கள் சில நாள்களுக்கு முன்னர் இலங்கை குறித்து விடுத்த அறிக்கை தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தொட்டு காட்டியவற்றில் மேற்கண்டவையும் சிலவாகும். ஜனநாயகத்துக்கும் நல்லாட்சிக்கும் ஒவ்வாத பல கருமங்களில் இலங்கை அரசு ஈடுபட்டு வருவது குறித்த நீண்ட அறிக்கை அது.

அரசாங்கத்தின் அநீதியான, ஜனநாயக விரோதமான, சகிப்புத்தன்மையற்ற விவாதங்கள், அரசோடு இணைந்திருப்பவர்கள் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ளுதல் மற்றும் பல சீர்கேடுகள் குறித்து உலகின் மூத்த தலைவர்கள் தமது அறிக்கையில் கனதியாகவும், எச்சரிக்கும் தொனியிலும், காத்திரமாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையை இலங்கை அரசு இரண்டாம் தரத்தில் வைத்து நடத்தியதையும் உலக மூத்த தலைவர்கள் அமைப்புக் கண்டித்துள்ளது.

இப்போது, முன்னாள் ஆர்ச் பிஷப் டெஸ்மண்ட் டுட்டுவைத் தலைவராகக் கொண்டு உலகின் முது பெருந் தலைவர்கள் பன்னிருவர் அங்கம் வகிக்கும் உலக மூத்த தலைவர்கள் மன்று, இலங்கையில் எவரும் துணிச்சலுடன் பேச முடியாத பல அநீதிகளையும் எடுத்து வெளிப்படுத்தி, விவரித்துள்ளது.

இனரீதியான சிறுபான்மையினரின் நீண்டகால அரசியல் ஓரங்கட்டலுக்கு முடிவு காணப்படவேண்டும் என்பதனை உலகின் முதுபெரும் தலைவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அறுபது வருடங்களுக்கு மேலாக நீண்டு வளர்ந்து, இப்போது அகோர வடிவம் பெற்றுள்ள இனப் பிரச்சினைக்கு முதலுரிமை கொடுத்துத் தீர்க்கப்படவேண்டும் என்பதில் 'ஒரு சதத்துக்கேனும்' அக்கறையில்லாமல், அதனை அடிப்பெட்டியில் அடுக்கி வைத்திருக்கிறது இந்நாட்டு அரசு.

அதனைத் தீர்ப்பதில் உணர்வுபூர்வமான விருப்பம் எதுவும் இன்றி, தமிழர் தாயகத்தில் உள்ள நிலங்களைப் பறிப்பதிலும் அவற்றில் சிங்களக் குடியேற்றங்களை நடத்துவதிலும், இலங்கையின் பத்து மாகாணங்களில் சிங்களவரும் பௌத்தமும் ஒன்றித்து நிலைத்திருந்தனர் என்ற எடுகோளுடன் மீண்டும் அதே நிலையைத் தோற்றுவிப்பதிலேயே அரசும், அதன் பிரதானிகளும் தமது சக்தியையும் நேரத்தையும் ஓய்வு ஒழிச்சலின்றிச் செலவிட்டு வருகின்றனர்.

ஆகையால் உலகின் மூத்த பெருந்தலைவர்களின் சொல் இங்கு இலங்கை அரசினது காதில் ஏறும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஐக்கிய நாடுகள் சபையுடன் மோதும் தமக்கு இவர்கள் யார் புத்தி சொல்ல, என்ற மமதையுடன் அரசு தட்டிக்கழித்து விடும்.

இனப்பிரச்சினை என ஒன்று இந்த நாட்டில் உண்டு என்பதனை மறந்தும் மறைத்தும் செயற்படும் போக்கு வெளிக்காட்டப்படும் இன்றைய சூழ்நிலையில் -

எவரும் எங்களைத் தட்டிக் கேட்கவோ அல்லது அறிவுரை கூறவோ தகுதி அற்றவர்கள். நாம் நினைத்ததையே செய்து முடிப்போம் -

எங்களது பிரச்சினைகளையும் விவகாரங்களையும் நாமே கையாள்வோம்; யாரும் அறிவுரையோ வழி நடத்தல்களோ காட்டத் தேவையில்லை -

அயலில் உள்ள இந்தியாவுடனேயே தமிழர் விவகாரத்தில் - பிரச்சினையில் - சடுகுடு ஆடும் வல்லமையும் ஓர்மமும் எங்களுக்கு இருக்கிறது என்ற மிதப்புடன் -

ஜனநாயகம், மக்கள் உரிமைகள், மனிதாபிமானம் குறித்து, எவர் எதனை எடுத்துச் சொன்னாலும் -

எங்கள் காதில் போட்டுக்கொள்ளமாட்டோம், எந்தக் 'கொம்பன்' சொல்லும் எங்கள் காதில் ஏறாது -

இது எங்கள் நாடு. அதனை ஆட்சி செய்பவர்கள் நாம். அதற்கான அதிகாரத்தை மக்கள் ஜனநாயக வழி நின்றுதான் தந்திருக்கிறார்கள் -

எவரையும் தயவு பண்ண வேண்டும் என்று எமது செல்நெறியில் இல்லை.

இத்தகைய தார்மீகத்தையும் தத்துவத்தையும் மீறி எதுவும் எங்களிடம் பலிக்காது என்று அடம்பிடிக்கும் இலங்கை அரசினருக்கு இனப்பிரச்சினை விடயத்தில் அதன் நண்பர்கள் எடுத்துக் கூறினாலும் கூட, அவர்களுக்கு அது ஒவ்வாமையாகவே மாறும்.

இலங்கை அரசின் இந்த ஒட்டுமொத்தச் சித்தாந்தம் உலகின் மூத்த தலைவர்கள் குழாமுக்குப் புரிந்திருக்க நியாயமில்லை. யாரால் என்ன செய்ய இயலும்....? இதனை மனதில் வைத்தே வெளி உலகத்தின் செயற்பாடு அமையவேண்டும். சப்பாத்துக்கு ஏற்றமாதிரி காற்பாதத்தை வெட்டிக்கொள்ளும் முயற்சி எவ்வாறு இருக்கும்....?

# மாநகரசபைத் தேர்தலின் போது வழங்கிய அனுமதியை வைத்தே குருநகர் கடல் பகுதியில் தொடர்ந்தும் 'றோலர்' மீன்பிடி

## நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்கிறார் தவரட்ணம்

யாழ்ப்பாணம், ஓக. 11

கடந்த மாநகரசபைத் தேர்தல் காலத்தின் போது வழங்கப்பட்ட அனுமதியைத் தொடர்ந்தே குருநகர்ப் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்கள் 'றோலர்' படகின் உதவியுடன் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். கடல் வளத்தை அழிக் கும் இந்த 'றோலர்' படகு பயன் படுத்துவதனை தடுத்து நிறுத்து வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் துறைசார் அதிகாரிகள் மட்டத்தில் அசமந்தப் போக்கு காணப்படுகின்றது.

இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்தார்.

குருநகர்ப் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்கள் 'றோலர்' படகு மூலம் கடற்றொழில் மேற்கொண்டு வருவதாக வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் நவமோடி தெரிவித்துள்ள குற்றச்சாட்டு தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே தவரட்ணம் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது கடல் வளத்தைப் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. கடல் வளத்தைத் தமது ஜீவனோபாயமாகக் கொண்டு யாழ்.மாவட்டத்தில் 22 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

கடல் வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக துறைசார் அதிகாரிகளால் 2004 ஆம் ஆண்டின் இறுதியில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் 'றோலர்' படகு, தங்கூசி வலை என்பன கடற்றொழிலின் போது பயன்படுத்துவதற்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டது. இவற்றைக் கொண்டு கடற்றொழில் மேற்கொண்டவர்களுக்கு மாற்றுத்தொழில் மேற்கொள்ளவென நிதியுதவியும் வழங்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம், கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ண யாழ்ப்பாணம் வந்த போதும் இந்த உபகாரணங்களின் உதவியுடன் கடற்தொழில் மேற்கொள்வ தைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டி ருந்தது. அப்போது அமைச்சரும் அவற்றுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என அறிவித்திருந்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச சமாசங்களும் இந்த விடயத்தில் அக்கறையுடன் 'றோலர்' படகு பயன்படுத்துவதனைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த மாநகரசபைத் தேர்தல் காலத்தின்போது குருநகர் கடற்தொழிலாளர்களுக்கு 'றோலர்' படகு பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிவகைகள் குறித்து நாம் சிந்தித்து வருகின்றோம். உரிய தரப்பினரிடம் பலமுறை இந்த விடயம் தொடர்பாகக் கவனத்துக்குக் கொண்டு வந்தோம். எனினும் தீர்வு கிடைக்க வில்லை.

இந் நிலையில் வல்வெட்டித் துறைப் பகுதி கடற்தொழிலாளர்கள் 'றோலர்' படகினைப் பயன்படுத்துவது என்பது மனவருத்தத்தை ஏற்படுத்தும் செயலாகும். அவர்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு கடல் வளத்தைப் பேண ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (த-14)

# கொழும்பு - வவுனியா 'இன்ரர் சிற்றி எக்ஸ்பிரஸ்' 15 ஆம் திகதி முதல் யாழ்தேவியாக மாற்றம்

வவுனியா, ஓக 11

கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையில் இடம்பெற்று வந்த 'இன்ரசிற்றி எக்ஸ்பிரஸ்' ரயில் சேவை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் யாழ்தேவி ரயில் சேவையாக மாற்றமடைகின்றது.

இன்ரசிற்றி எக்ஸ்பிரஸ் ரயில் தினமும் கொழும்பிலிருந்து அதிகாலை 5.45 மணிக்கு புறப்பட்டு மு.ப. 11.15 மணிக்கு வவுனியாவைவந்தடைந்து அங்கிருந்து பி.ப. 3.30 மணிக்கு புறப்பட்டு இரவு 10.20 மணிக்கு கொழும்பைச் சென்றடைந்து வந்தது. இந்த ரயில் சேவையில் பயணம் செய்ய மூன்றாம் வகுப்புக்கு 270 ரூபா கட்டணமாக அறவிடப்பட்டது.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் யாழ்தேவி சேவையாக இடம்பெறும் இந்த ரயில் சேவை, கொழும்பிலிருந்து அதிகாலை 5.45 மணிக்கு வவுனியாவை நோக்கியும், நண்பகல் 12.45 மணிக்கு வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கியும் புறப்பட்டுச் செல்லும்.

யாழ்தேவி ரயில் கொழும்பு - வவுனியா பயணத்திற்கு மூன்றாம் வகுப்பு டிக்கட்டுக்கு 185 ரூபா கட்டணமாக அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-236)

# குடாநாட்டில் 9 பொலிஸ் பிரிவுகளிலும் சுற்றிவளைப்புகளில் 66 பேர் சிக்கினர்

## குற்றச்செயல்களைத் தடுக்க அதிரடி நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் அதிரடி நடவடிக்கையில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட 66 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கையின் கிழக்கு மற்றும் தென்மாகாணங்களில் நடத்தப்படுவது போன்ற விசேட அதிரடி நடவடிக்கைகளின் போது தற்போது குநாட்டிலும் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

அதன் ஒரு கட்டமாக கடந்த மாதமும் சுற்றிவளைப்பில் நூற்றுக்கும் மேற்பட்டோர் இனம்காணப்பட்டனர்.

அதேபோல இம்மாதமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள ஒன்பது பொலிஸ் பிரிவுகளையும் சேர்ந்த பொலிஸார் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு சுமார் 66 பேரை இனங்கண்டுள்ளனர்.

இவர்களில் கஞ்சா, சட்டவிரோத சாராயம், கசிப்பு, லேகியம் போன்ற குற்றச்செயல்களில் தொடர்புபட்டவர்கள், போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான வழக்குகள் சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் போன்றவர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் யாழ். குடாநாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கவுள்ளோம் - என்றார்.

# அபிவிருத்திப் பணிகளைச் சிறப்பாக நிறைவேற்ற சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## கோப்பாய் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் உதயன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஓக.11

கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்த்திரி அலெண்டின் (உதயன்) தலைமையில் நேற்று காலை செயலகப் பிரிவு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்த்திரி அலெண்டின் (உதயன்) உரையாற்றுகையில்:-

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சார்ந்த மூன்று உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமை யாழ்.மாவட்ட அபிவிருத்தியில் கணிசமான அளவு பங்காற்றக் கூடிய நிலையை உருவாக்கியுள்ளதாகவும், தமது வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் நன்றியையும் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் ஆலோசனைக்கமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவினால் யாழ். மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளில் 10 பிரதேச அபிவிருத்திக் குழுக்களுக்கு தான் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தமக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

கடந்த கால யுத்த சூழலில் எமது மக்களுக்குத் தேவையான உதவிகளை மக்களோடு மக்களாக நின்று ஈ.பி.டி.பியினராகிய நாம் சேவையாற்றி வந்ததை அனைவரும் அறிவார்கள். அதேபோல நாம் என்றும் மக்களோடு மக்களாக இருந்து மக்களுக்குச் சேவை ஆற்றுவதற்கு தயாராக இருக்கின்றோம் எனவும் உதயன் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கோப்பாய் பிரதேச செயலர் திரு. மோகன்றாஸ், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் பிரதேச பொறுப்பாளர் ஐங்கரன், அச்சுவேலி பிரதேசப் பொறுப்பாளர் தர்மராஜா, திணைக்களத் தலைவர்கள், கிராமசேவையாளர்கள் உட்பட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (ஒ)

### நாளை

| | |
|---|---|
| ஆடி27 | 12.08.2010 வியாழக்கிழமை |
| திதி: | : திருதியை பி.இ. 01.57 வரை |
| நட்சத்திரம் | : பூரம் பி.ப. 05.32 வரை |
| சுபநேரம் | : 07.34-09.04 வரை |
| ராகுகாலம் | : 01.34-03.04 வரை |

# கைதடி தெற்கில்இன்று ஆண்டுவிழா நிகழ்வுகள்

கொழும்புத்துறை,ஓக.11

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு விழாவையொட்டி விளையாட்டு, கலை, இரத்ததான நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. காலை 6 மணிக்கு வடமாகாண ரீதியான ஆண்கள் வீதியோட்டமும் 8 மணிக்கு பெண்கள் சைக்கிள் ஓட்ட மும் நடைபெறும்.

நாளை காலை 6 மணிக்கு வடமாகாண மட்டத்தில்ஆண்கள் சைக்கிள் ஓட்டமும் 8 மணிக்கு அங்கத்தவர்களுக்கிடையிலான மரதன் ஓட்டமும் இடம்பெறும்.

நாளை மு.ப. 10 மணிக்கு ஆண்டு விழா ஞாபகார்த்த இரத்ததான நிகழ்வு இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு நிலைய அரங்கில் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக நிலைய செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளை கோட்டப் பாடசாலைகளுக்கு நாமல் குழுவினர் நேற்றுச் சென்றனர்

கிளிநொச்சி, ஓக. 11

கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ள ''இளைஞர்களுக்கான நாளை'' அமைப்பின் தலைவரும் எம்பியுமான நாமல் ராஜபக்ஷ குழுவினர் இரண்டாம் நாளான நேற்று கண்டாவளை கோட்டப் பாடசாலைகளைச் சென்று பார்வையிட்டுள்ளதுடன், மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்களையும் வழங்கியுள்ளனர்.

இந்தக் குழுவில் உரித் லொக்குப் பண்டார, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி உட்பட உயர் அதிகாரிகள் பலரும் அடங்கியிருந்தனர்.

இவர்களுடன் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, கண்டாவளைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் வி.இராஜகுலசிங்கம் ஆகியோரும் சென்றிருந்தனர்.

பரந்தன் இந்து ம.வி., கண்டாவளை ம.வி., பிரமந்தனாறு ம.வி., புன்னைநீராவி அ.த.க. பாடசாலை, உமையாள்புரம் அ.த.க. பாடசாலை, கட்டைக்காடு அ.த.க. பாடசாலை, கல்மடுநகர் அ.த.க. பாடசாலை, தர்மபுரம் இல.1 அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு குழுவினர் நேற்றுச் சென்றிருந்தனர்.

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் சென்ற இவர்கள் பாடசாலைகளின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுவினர் இன்று பூநகரிக் கோட்டப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர். (ஓ-10-405)

## திருவருள் மிகு ஸ்ரீமகாமுத்துமாரி அம்பாள்



**வருடாந்த இரதோற்சவம் (2010)**
**கோப்பாய் மத்தி**

ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் வருடாந்த மஹோற்சவ 9 ஆம் நாள் தேர்த்திருவிழா இன்று (11.08.2010) புதன்கிழமை காலை 6 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி, 7 மணிக்கு கொடித் தம்பப் பூசையும், 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெற்று 9 மணிக்கு இரதோற்சவம் நடைபெறும்.

இரதோற்சவம் சிறப்புற வாழ்த்தும்
**மாஸ்ரர் போட்டோ & வீடியோ,**
*கோப்பாய் மத்தி.* (101840)

## கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வழிபடுவோர் மகாசபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் எதிர்வரும் (29.08.2010) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.30 மணிக்கு சபைத் தலைவர் திரு.சி.மாதவகுமார் அவர்களின் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

அத்தருணம் அங்கத்தவர்களைத் தவறாது சமுகம் தரும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிரேரணைகள் இருப்பின் முன்கூட்டியே செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

சி.மாதவகுமார்
தலைவர்.

சி.ஜெயபாலசிங்கம்
செயலாளர்.

(101841)

## முக்கிய அறிவித்தல்

### 2010.05.31இல் உறுதிப்பத்திரம் கோருதல்

முல்லைத்தீவு மாவட்ட சி.க.கூ. சமாசத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்ட யாவரும் 2010.05.31இல் உறுதிப்பத்திரங்களை, தலைவர் மு.மா.சி.க.கூ. சங்க சமாசம், ஒட்டுசுட்டான் என்னும் முகவரிக்கு கிடைக்கும் பொருட்டு 2010.08.20ஆம் திகதிக்கு முன்பு அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்விடயம் சார்பாக 2010.07.13, 2010.07.28ஆம் திகதிய உதயன் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

சி. இரவீந்திரகுமார்,
தலைவர்,
மு.மா.சி.க.கூ. சமாசம்,
ஒட்டுசுட்டான்.

திரு. க.சசிகரன்,
கூ.அ. அலுவலர்,
கூட்/திணைக்களம்,
முல்லைத்தீவு.

(101837)

## இவரைக் காணவில்லை

### ஜெகேந்திரன் விஸ்ணுதரன் (விஸ்ணு)

(மலைவேம்படி, அளவெட்டி மேற்கு.)



*1996ஆம் ஆண்டு பிறந்த (14 வயது) இவரை 10.07.2010 அன்று காலையில் இருந்து காணவில்லை. இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து எங்கிருந்தாலும் எம்முடன் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு மிக மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

தந்தை: வை.ஜெகேந்திரன்
மலைவேம்படி, அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.
தொ.பே.: 021 3006648
077 6941682

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி அபிராமசுந்தரி – தாமோதரம்

*அவர்கள் 09.08.2010 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை,
சாவகச்சேரி.

(சி/569780)

## தேர்த்திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், ஓக. 11

கொக்குவில் ஸ்ரீவீரமாபிடாரி அம்பாள் தேவஸ்தானப் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

காலை 8 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று முற்பகல் 10.30 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து அருட்காட்சி வழங்குவார். நாளை முற்பகல் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(சிறப்பிதழ் 8ஆம் பக்கத்தில்) (ஐ)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 11

ஏழாலை புங்கடி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகை ஆலயப் பெருந்திருவிழாவில் இன்று காலை தேர்த்திருவிழா இடம் பெறும்.

காலை முதல் அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று, அம்பாள் தேரில் ஆரோகணித்து அருட்காட்சி வழங்குவார். நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(சிறப்பிதழ் 18ஆம் பக்கத்தில்) (ஐ)

## திருத்துநர் தேவை

பண்ணை - யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை றோட் திருத்தும் வேலைத் தளத்துக்கு நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துவதற்கு திருத்துநர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு :-
தொ.பே.இல. : 0718668225

## தேவை

- ★ Pharmacy அனுபவம் உள்ளவர்கள்
- ★ பயிற்சிபெற்ற தாதிகள்
- ★ தாதிப்பயிற்சி பெறவிரும்புபவர்கள்.

**கோபிசாந் ஹெல்த் சென்ரர்,**
191, முதலாம் குறுக்கு வீதி,
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகே)
யாழ்ப்பாணம்.

## தமிழ்த்துறையில் இன்று கருத்தரங்கு

யாழ். பல்கலைக் கழகத்தில் ''ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் இலக்கிய வரலாறு எழுது முயற்சிகள்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறை விரிவுரை மண்டபத்தில் இடம் பெறும்.

தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் யாழ். பல்லைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன் கருத்துரை வழங்குவார்.

(ஓ-3[illegible])

## திலகநாயகம் போலின் இசை இறுவட்டுக்கள்

திரு. L. திலகநாயகம் போல் அவர்கள் பாடிய இசை வேள்விகள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு உகந்ததாகப் பாடிய கர்நாடக இசை, செவ்விசை அடங்கிய ஒலி, ஒளி இறுவட்டுக்கள் (CD & DVD) விற்பனையாகின்றன.

**Shan Recording & Video Center,**
**421/A, Point Pedro Road, Nallur, Jaffna.**
**T.P. : 021-222-6507**

(101845)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை ஜெயராஜா



யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஜெயராஜா நேற்று (10.08.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - காசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற துரைராஜா மற்றும் கணேசலிங்கம் (அவுஸ்திரேலியா), கிருபாநந்தன் (பிரான்ஸ்), ராஜதுரை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகதீஸ்வரன் (டென்மார்க்), ஜெயக்குமார் (சுவிஸ்), ஜெயசீலன் (கனடா), காலஞ்சென்ற ஜெயசுதா மற்றும் ஜெயறஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவராணி (டென்மார்க்), தக்ஷாயினி (சுவிஸ்), அனுஷா (கனடா), அம்பிகைபாகன் (I.S.A. தீவக கல்விவலயம்), ஜெயந்தன் (காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை) ஆகியோரின் மாமனாரும் நிதுர்ஷா, நிபிவிதா, வர்ஷன், நிகாஷ், நிக்கிஷா ஆகியோரின் பேரனும் நாகராசா, அன்னலட்சுமி, சோதிநாயகி, வளர்மதி, ஜெயமதி ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (12.08.2010) வியாழக் கிழமை நண்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''சுதா பவனம்'', பாடசாலை வீதி,
நெல்லுநுபதி பிள்ளையார் கோயிலடி,
தாவடி தெற்கு, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(101846)

### திருமதி அன்னபூரணம் முத்துச்சாமி

(முத்துச்சாமி ரீச்சர், இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை)



காங்கேசன்துறை, பிரதான வீதியைச் சேர்ந்த தற்பொழுது பதுளையில் வசித்துவரும் திருமதி அன்னபூரணம் முத்துச்சாமி (முத்துச்சாமி ரீச்சர், இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை, காங்கேசன்துறை நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம்) நேற்றுமுன்தினம் (09.082010) திங்கட் கிழமை பதுளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி முத்துச்சாமியின் அன்பு மனைவியும், திருமதி சிவயோகம் வைத்தியநாதன் (சிவா - காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட்டில் கடமையாற்றியவர்), சிவகுமார் (கனடா), திருமதி பரிமளம் முருகேசு (ஆசிரியை - பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், செ.வைத்தியநாதன் (கிராம உத்தியோகத்தர், குப்பிளான்), வசந்தி (கனடா), மா.முருகேசு (ரவி - கணக்காய்வாளர், பதுளை) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுபாங்கி, வித்தாரன், விதுஷன், பிரணவகானன், திவியாவந்தி, திருயம்பகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2010) புதன் கிழமை பதுளை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மாலை 4 மணிக்கு பதுளை மாநகரசபை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

151/4, புவக்கொடமுல்ல,
பதுளை.

தகவல் :
குடும்பத்தினர்.
தொ.பே.இல.: 055-222-3305

(101843)

## மரண அறிவித்தல்

### திருமதி அபிராமசுந்தரி சரா.தாமோதரம்



சங்கத்தானையை வதிவிடமாகக் கொண்ட திருமதி அபிராமசுந்தரி சரா.தாமோதரம் 09.08.2010 அன்று காலமானார்.

அன்னார் சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த சரா.தாமோதரத்தின் அன்பு மனைவியும் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்வநாயகம் - சின்னம்மா தம்பதியரின் மூத்தமகளும் சங்கத்தானை தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற தாமோதரம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சோமேஸ்வரி, திலகவதி, காலஞ்சென்ற திருச்செல்வம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் சுரேஸினி, விஸ்வன் ஆகியோரின் அருமைத் தாயாரும் சிறீஸ்குமாரின் அருமை மாமியாரும் நாஸ், சிறீகாந்தா, விவியன், காலஞ்சென்ற கமலாவதி, பத்மாவதி மற்றும் மீனா மாணிக்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் யதீஸா, சாயிசுப்பிரியா, அகிலன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.08.2010) புதன் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல் :
சரா.தாமோதரம்.
(இளைப்பாறிய ஆசிரியர், யாழ். பரியோவான் கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேசத்தில் 10 வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக11

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பத்து வீதிகள் தார் ஊற்றிப் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

பிரதேச சபை இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

சபாபதி வீதி,பரமேஸ்வரா வீதி, சம்பியன் குறுக்கு வீதி, சீக்கோ வீதி, அருளம்பலம் வீதி, 'பாலியார் கிணற்றடி வைரவர் கோயில் வீதி, கருவப்புலம் குறுக்கு வீதி, இராமலிங்கம் குறுக்கு வீதி, பலாலி குறுக்கு வீதி, நாவலர் வீதி, போன்றவையே தார் ஊற்றிப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதேவேளை கொக்குவில் கொல்களத்தையும் புனரமைப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(த-26)

# உயர் பாதுகாப்பு வலயத்தில் நெற்செய்கை மேற்கொள்ள விவசாயிகளை அனுமதிக்குக!

## யாழ். இராணுவத் தளபதியிடம் அரச அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஓக.11

உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் பெரும்போக நெற்செய்கைக்கு விவசாயிகளை அனுமதிக்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், இராணுவத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக யாழ்.அரச அதிபரிடம் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மிக விரைவில் இராமாவில் நலன்புரி நிலையத்தை மூடக்கூடிய வகையில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளைத் தாம் செய்யவுள்ளதாகவும் இது தொடர்பான நடவடிக்கைகளைத் தற்போது மேற்கொண்டு வருவதாகவும் இராணுவத் தளபதி அரச அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் மக்களை மீளக்குடியேற்றுவதற்கு இராணுவத் தளபதி சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மக்களைக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் தான் கோப்பாய் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர்கள், உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடியதாகவும் மக்களை மீளக்குடியேற்றும் உயர்பாதுகாப்பு வலய பிரதேசங்களை முன்னிலைப்படுத்தித் தருமாறு அவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் அரச அதிபர் மேலும் கூறினார்.

பிரதேச செயலர்கள் பிரதேசங்களை முன்னிலைப்படுத்தித் தந்த பின்னர் அது தொடர்பாகத் தான் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்கவிடம் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-319)



நீண்டகாலமாகத் தடைப்பட்டிருந்த யாழ்.மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தின் கட்டுமானப் பணிகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. கட்டடப் பணிகள் முழு வீச்சில் இடம்பெற்றுவருவதைப் படத்தில் காணலாம். (படங்கள்:சுகந்தன்)

# பலாலி வீதியூடாக பருத்தித்துறை செல்லும் பஸ் சேவை சீரில்லையென ஆர்ப்பாட்டம்

## கோண்டாவில் டிப்போவுக்கு முன்னால் பயணிகள் திரண்டனர்

யாழ்ப்பாணம்,ஓக.11

கோண்டாவில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் டிப்போவுக்கு முன்பாக நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டுப் பலாலி வீதியூடாக யாழ்ப்பாணம் செல்லும் 764 வழி இலக்கப் பேருந்தில் பயணிக்கும் பயணிகளே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

நேற்றுக்காலை கோண்டாவில் டிப்போவுக்குச் சொந்தமான 764 வழி இலக்க சேவையில் ஈடுபடும் பஸ், அச்சுவேலி புறாப்பொறுக்கிவரையே பயணிகளை ஏற்றியதாகவும், அதன் பின்னர் பயணிகளை ஏற்றவில்லை எனவும் கூறப்பட்டது.

இந்தப் பேருந்தில் பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்லூரி ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்கள் ஆகியோரே அதிகளவில் பயணம் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலி புறாப்பொறுக்கியின் பின்னர் பஸ்ஸில் பயணிகளை ஏற்றாமைக்கு அதில் பயணித்தோர் கடும் எதிர்ப்புக் காட்டவே பஸ் சாரதி கோண்டாவில் டிப்போவில் பஸ்ஸை நிறுத்தியுள்ளார்.

இதன் பின்பு கோண்டாவில் டிப்போ அதிகாரிகளுடன் பஸ்ஸில் இருந்த பயணிகள் கதைக்கச் சென்றபோது அங்கு உயர் அதிகாரிகள் எவரும் அவர்களைச் சந்திக்க வரவில்லை எனவும், கீழ் நிலை அதிகாரிகளே தம்முடன் கலந்துரையாடியதாகவும் பயணிகள் தெரிவித்தனர். இதன்போது டிப்போ பாதுகாப்பு ஊழியர்கள் தம்மீது தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டதாகவும், டிப்போ அதிகாரிகள் இராணுவம் மற்றும் பொலிஸாரை அழைத்துத் தம்மை டிப்போ வளாகத்தை விட்டு வெளியேற்றியதாகவும் அவர்கள் மேலும் கூறினார்கள்.

இதனையடுத்து இந்தப் பயணிகள் டிப்போ வாயிலுக்கு முன்னால் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பயணிகள் இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையில் -

இதுவரை காலமும் பருத்தித்துறை டிப்போவிலிருந்து இரண்டு பஸ்கள் 764 இலக்க சேவையில் ஈடுபட்டன. கடந்த 3 வாரகாலமாக ஒரு பஸ்சேவையே இடம்பெறுகின்றது. பருத்தித்துறை டிப்போவுக்குச் சொந்தமான பஸ் ஒன்றும், கோண்டாவில் டிப்போவுக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் சேவையில் ஈடுபட்டு வந்தன. முதலாவது பஸ் காலை 6.45 மணிக்கும், அடுத்த



பஸ் காலை 7.15 மணிக்கும் பருத்தித்துறை டிப்போவிலிருந்து புறப்படுகின்றன. இந்த 764 இலக்க பேருந்தில் பயணிப்பவர்கள் பெரும்பாலும் மாணவர்கள், உத்தியோகத்தர்கள் ஆகையினால் அவர்கள் கூடுதலாகக் காலை 6.45 மணி பஸ்ஸிலேயே பயணிக்கின்றனர். தற்போது இந்த பஸ் சேவை நிறுத்தப்பட்டதால் சகலரும் அடுத்த பஸ்ஸிலேயே பயணிக்க வேண்டி ஏற்படுகின்றது. கிட்டத்தட்ட அந்த பஸ்ஸில் 300 பேர் வரை பயணிக்கின்றனர். இதனால் இந்த பஸ் தாமதமாகவே யாழ்.நகரை வந்தடைகின்றது. எனவே மற்ற பஸ்ஸையும் சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் பயணிகள் நெருக்கடியைக் குறைப்பதுடன் குறித்த நேரத்திற்கு உரிய இடங்களுக்குச் செல்ல முடியும் என்று கூறினார்கள்.

பொலிஸ் அதிகாரிகள், டிப்போ அதிகாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பயணிகளுடன் மீண்டும் பேச்சு நடத்தியதையடுத்து இம்மாதம் 31ஆம் திகதிவரை இரு பஸ் சேவைகளையும் நடத்துவதாகவும், அதன் பின்னர் அவை நிறுத்தப்படும் எனவும், இந்த வழி இலக்க பஸ் சேவைக்கான பருவகாலச் சீட்டு இனிமேல் வழங்கப்படமாட்டாதெனவும் அதிகாரிகளால் தமக்குத் தெரிவிக்கப்பட்டதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பயணிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் குறித்த பயணிகள் வட மாகாண ஆளுநர், அரச அதிபர் ஆகியோருக்கும் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர். (த-14-319)




## பருத்தித்துறை ஆஸ்பத்திரி வீதி புனரமைப்பு

வடமராட்சி,ஓக11

நீண்டகாலமாக மோசமாகப் பழுதடைந்திருந்த பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை முன்பாக உள்ள ஆஸ்பத்திரி வீதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதிப் புனரமைப்பைத் துரித கதியில் மேற்கொண்டிருந்தது.

குண்டும் குழியுமாக இருந்த இவ்வீதியால் நோயாளர்கள், நோயாளிகளின் வாகனங்கள் சென்று வருவதில் பெரும் சிரமங்கள் இருந்து வந்தன. தற்போது இவ்வீதி அகலமாக்கப்பட்டு கருங்கற்கள் இடப்பட்டுத் தார் ஊற்றிப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதால் நோயாளர்களின் வாகனங்கள், நோயாளர்கள் சிரமமின்றி செல்லக்கூடியதாக இருக்கின்றது. (த-236)

## அடிக்கடி தடைப்படும் மின்சாரம்: பரீட்சை எழுதும் மாணவர் நிர்க்கதியில்

யாழ்ப்பாணம்,ஓக11

கடந்த சில நாள்களாக இரவு, பகல் என்ற வேறுபாடு இல்லாமல் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் பொதுமக்களும், மாணவர்களும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரியவருகின்றது.

இரவு, பகல் வேளைகளில் எந்தவித அறிவித்தலுமின்றி அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் மின்சார உபகரணங்களைப் பாவிக்கும் பொதுமக்களும் ஜி.சி.ஈ. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக இரவு வேளைகளில் இத்தகைய மின் தடையால் பரீட்சைகளுக்குத் தயார் செய்யும் மாணவர்கள் செய்வதறியாது திகைப்பதோடு தமது பரீட்சை முடிவுகளிலும் பாதிப்பேற்படுமென கவலை தெரிவித்துள்ளனர்.

(க)

## வடக்கின் இளம் நடனக் கலைஞர்களுக்கு சென்னைப் பல்கலைக்கழகத்தில் பயிற்சி

### ஆளுநர் சந்திரசிறி ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக11

வடமாகாணத்தின் இளம் நடனக் கலைஞர்களுக்கு தென்னிந்தியாவில் குறுங்கால நடனப் பயிற்சி ஒன்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இந்த நடனப் பயிற்சி சென்னைப் பல்கலைக்கழகத்தில் மூன்று வாரங்கள் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிக்கென 1.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் வளர்ந்து வரும் நடனக் கலைஞர்களை ஊக்குவிக்கவும் புதிய நடன வகைகளையும் நடன நுட்பங்களையும் அறிமுகம் செய்யவும் சிறந்த நடனக் கலைஞர்களை உருவாக்கும் பொருட்டே இந்தப் பயிற்சி நடைபெறவுள்ளதாக வடமாகாண ஆளுநர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கென 16 ஆண், பெண் நடனக் கலைஞர்கள் வடக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் விரைவில் தென்னிந்தியாவுக்குப் பயணமாகவுள்ளனர். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சுடர்

உதயன் நாளிதழ் ஊடாக நடத்தும்

நமக்கு நாமே முன்னோடிகள்

தொடர் 02

## தரம் 05 புலமைப் பரிசில் இறுதிக் கருத்தரங்குத்தொடர் 2010

வளவாளர்:
மாணவர்களின் பாராட்டுக்குரிய எமது தேசிய
ஆசிரியர் M.I.சம்சுதீன், அம்பாறை.




| வினாத்தாள் I | 45 நிமிடங்கள் |
|---|---|
| சுட்டெண் | புள்ளிகள் |

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. தரப்பட்ட பைசிக்கல்களில் ஒன்று மட்டும் வித்தியாசமானது அதன் கீழ்க் கீறிடுக.
1) 2) 3)




02. அருகில் தரப்பட்டுள்ள படங்களை முழுமையாக உள்ளடக்கும் கருத்துள்ள மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.




1) இயந்திரவலுச் சாதனங்கள்
2) வெளிநாடுகளுக்குச் செல்லலாம்.
3) போக்குவரத்துச் சாதனங்கள்.

* 3ஆம், 4ஆம் வினாக்களின் வெற்றிடங்களுக்கு பொருந்தும் உருவைத் தெரிவு செய்து கோடிடுக.

03. 1) 2) 3)



04. 1) 2) 3)



* தாமரை மலர் பூத்துச் சிரிக்கும்
இலை மேல் நீர் முத்துக்கள் போன்று பளபளக்கும்
காற்றில் நீரலைகள் மோதும்
உள்ளத்தை ஈர்க்கும் குழத்தின் அழகு

05. மேலுள்ள பாடலுக்கேற்ப குளம் அழகாகத்தோன்றக் காரணம் யாது?
1) தாமரைப் பூ பூத்துள்ளமையும் நீரலைகளின் மோதுகையும்.
2) தாமரைப் பூக்கள் பூத்துள்ளமையும் அழகான மீன்கள் காணப்பட்டமையும்.
3) சுத்தமான நீல நிற நீர் இருப்பதும் தாமரைப் பூக்கள் பூத்துள்ளமையும்.

06. கீழ்வரும் போத்தலை ஒழுங்குபடுத்த மேலிருந்து கீழாக சரியாகப் பொருந்தும் எழுத்துக்களுக்கான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.



A B C D

1) D,B,C,A 2) C,B,A,D 3) D,B,A,C

* பின்வரும் வினாக்களிலுள்ள மூன்று சொற்களுக்கும் பொருந்தக் கூடிய ஒரு பொதுவான சொல்லைத் தெரிவுசெய்க.

07. இரும்பு - செம்பு - வெள்ளி
1) பாத்திரங்கள். 2) ஆபரணங்கள்.
3) உலோகங்கள்.


08. நெல் - குரக்கன் - கோதுமை.
1) சிற்றுண்டிகள் 2) தானியங்கள்.
3) காலை உணவுகள்.

* 9ஆம், 10ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள கூற்றுக்கு ஏற்ப உண்மை யான கூற்றைத் தெரிவுசெய்க.

09. உயர்தரம் சித்தி அடைபவர்களில் அனேகமானோர் பெண்கள்,
1) ஆண்கள் உயர்தரம் கற்பதில்லை.
2) பெண்கள் மட்டுமே உயர்தரம் கற்பர்.
3) ஆண்களும் உயர்தரம் சித்தியடைவர்.

10. திறமைசாலிகள் அதிகம் பேசுவதில்லை.
1) பேசுபவர்கள் எல்லோரும் அறிவற்றவர்கள்.
2) திறமையானவர்கள் மிகவும் குறைவாகவே பேசுவர்.
3) பேசாதவர்கள் எல்லோரும் அறிவாளிகள்.

* கூட்டங்களாக்கப்பட்ட பொருட்களுக்கு தரப்பட்ட மொத்த நிறைகளைக் கருத்தில் கொண்டு 11ஆம், 12ஆம் வினாக்களுக்கு விடை தருக.





11. சுரைக்காய் ஒன்றினதும், பலாக்காய் ஒன்றினதும் மொத்த நிறையாக அமைவது,
1) 6Kg 500g 2) 2Kg 500g 3) 1Kg 500g

12. தக்காளியின் நிறை யாது?
1) 2Kg 500g 2) 3Kg 3) 1Kg 500g

13. நேற்று தபாற்காரன் வந்தான்.
கீழே 4 வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் எந்த இரு வாக்கியங்களைச் சேர்த்தால் கட்டத்தினுள் உள்ள வாக்கியத்தின் கருத்தினைப் பெறலாம். எனக் கண்டுபிடித்து அவ்விரு வாக்கியங்களின் இலக்கங்களின் கீழ்க் கீறிடுக.
1 - இன்று புதன்கிழமை. 2 - இன்றும் தபாற்காரன் வந்தான்.
3 - செவ்வாய்க்கிழமை தபால்காரன் வந்தான்.
4 - நேற்று முன் தினம் தபாற்காரன் வந்தான்.
1) 1உம், 4உம் 2) 2உம், 4உம் 3) 3உம், 1உம்

* 14ஆம், 15ஆம் வினாக்களில் ஒவ்வொரு நிரையிலும் குறித்த ஓர் ஒழுங்கு முறை யில் அமைய வேண்டிய இரு உருவங்கள் இடம்மாறி அமைந்துள்ளன. அவற்றின் இலக்கங்களைத் தெரிவுசெய்து கோடிடுக.


14.



1) 2) 3) 4) 5)

1) 4உம், 2உம் 2) 2உம், 3உம் 3) 5உம், 2உம்


15.



1) 2) 3) 4) 5)

1) 2உம், 3உம் 2) 3உம், 5உம் 3) 3உம், 4உம்

16. ஆணியைக் காந்தமாக்கும் மின்காந்தச் சுற்று அமைப்பதற்காக கம்பி சுற்றிய இரு சந்தர்பங்களுக்கமைவாக நாம் பெறக்கூடிய தீர்மானம்.
1) A மாத்திரம் சரியானது.
2) B மாத்திரம் சரியானது.
3) A,B இரண்டும் சரியானது.





* கீழ்வரும் தகவல்களைக் கொண்டு 17ஆம், 18ஆம் வினாக்களுக்கு விடை தருக.
காந்தன் 5 கணக்குகளை கற்கும் நேரத்தில் தீபன் 6 கணக்குகளைக் கற்கிறான். தீபன் 3 கணக்குகளைக் கற்கும் நேரத்தில் விஜயன் 2 கணக்குகளைக் கற்கிறான்.

17. கணக்குகளைக் கற்பதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்வது யார்?
1) காந்தன். 2) தீபன். 3) விஜயன்.

18. கணக்குகளைக் கற்பதற்கு மிகக் குறைந்த நேரத்தைக் எடுத்துக் கொள்வது,
1) காந்தன். 2) தீபன். 3) விஜயன்.

19. இரண்டு பைசிக்கில்கள் ஒன்றையொன்று கடந்து செல்லும் சம்பவங்களை ஆரம்ப மிருந்து ஒழுங்கு படுத்தும் போது 3 ஆவதாக அமையும் சந்தர்ப்பத்தின் கீழ்க் கீறிடுக.



1) 2) 3) 4)

* பின்வரும் தகவல்களைக் கொண்டு 20ஆம், 21ஆம் வினாக்களுக்கு விடை தருக.
அமுதன், அழகன், அருணன், அமலன், அகிலன் ஆகிய 5 நண்பர்கள் நிரை யாக அமர்ந்திருந்த விதம் கீழே விவரிக்கப்பட்டுள்ளதை நன்கு விளங்கிக் கொள் ளவும்.
- ஆரம்பத்தில் அருணனும் முடிவில் அமலனும் இருந்தார்கள்.
- அகிலனுக்கு அருகில் அமலன் இருந்தான்.
- அழகனுக்கு அருகில் அருணன் இருந்தான்.

20. மத்தியில் இருந்தது யார்?
1) அகிலன். 2) அழகன். 3) அமுதன்.


21. அழகனுக்கும், அமலனுக்கும் இடையில் எத்தனை நண்பர்கள் இருந்தனர்?
1) 3பேர். 2) 2பேர். 3) 4பேர்.

* 22ஆம், 23ஆம் வினாக்களில் உள்ள எண்கள் குறித்த ஒரு கணிதச் செய் கைக்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதை அறிந்து வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 22. | 22 | 3 | 19 | 23. | 35 | 2 | 71 |
| | 21 | 15 | 6 | | 16 | 4 | 65 |
| | 40 | 24 | .......... | | 7 | 5 | .......... |

* 24ஆம், 25ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள இரு உருவங்களுக் கான தொடர்பை விளங்கி 3வது உருவுடன் தொடர்புபட்ட உருவை எதி ரேயுள்ள 3 உருக்களிலிருந்து தெரிவுசெய்க.

24.



1) 2) 3)

25.



1) 2) 3)

26. நான் பாடசாலையிலிருந்து வடகிழக்கே 100 மீற்றர் சென்று மைதானத்தை அடைந் தேன். எனது நண்பன் கோவிலிருந்து 100 மீற்றர் தென்கிழக்கேயுள்ள அந்த மைதா னத்திற்கு வந்திருந்தான். கோவிலுக்கு பாடசாலை எத்திசையில் உள்ளது?
1) கிழக்கு. 2) தெற்கு. 3) வடக்கு.

27. ஒரு குடும்பத்தில் பாட்டன், பாட்டி ஆகிய இருவரும் அவர்களுடைய புதல்வர் கள் இருவரும் அந்தப்புதல்வரின் குடும்பம் ஒவ்வொன்றிலுமுள்ள 4 பிள்ளை களும் அவர்களின் மனைவியர் இருவரும் விருந்தொன்றில் கலந்து கொண்டனர். அவ்வாறு விருந்து உண்டவர்கள் எத்தனை பேர்?
1) 10 பேர். 2) 12 பேர். 3) 14 பேர்

28. எதிரெதிர் பக்கங்களில் ஒரேநிறம் தீட்டப்பட்டுள்ள முப்பரிமாண சதுரமுகியின் அட்டையை பிரித்தால் அதில் தோன்றும் இரு பரிமாணத் தோற்றம் யாது?




1) 2) 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தருக்கான பயிற்சிநெறி இனிமேல் யாழ்ப்பாணத்திலும்

## ஆரம்ப நிகழ்வு நேற்றுக் கோப்பாயில்

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்.சிறைச்சாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான தொழில்வாண்மை விருத்திக்கான பயிற்சிநெறி முதல் முறையாக நேற்று யாழ்ப்பாணத் தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒருமாத காலத்தைக் கொண்ட இந்தப் பயிற்சி நெறியின் ஆரம்பநிகழ்வு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

சிறைச்சாலைகள் சீர்திருத்தப் பாடசாலையின் அதிகாரி எ.அப்புஆராய்ச்சி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறைச்சாலைகள் ஆணையாளர் வி.ஆர்.சில்வா கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

அத்துடன் யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன ஏக்கநாயக்க, யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் விஜயரட்ண, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், பேராசிரியர் ஈஸ்வர சர்மா, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் உள்ளிட்டோரும் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

யாழ்.சிறைச்சாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடையாற்றும் 26 பேர் இந்தப் பயிற்சியைத் தொடரவுள்ளனர். இதில் 22 ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் 4 பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் அடங்குவர்.

சிறைச்சாலைகள் சீர்திருத்தப் பாடசாலையின் விரிவுரையாளர்கள், பயிற்றுவிப்பாளர்கள் இந்தப் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.சிறைச்சாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான தொழில்வாண்மைப் பயிற்சி இதுவரை காலமும் கொழும்பு சிறைச்சாலைகள் சீர்திருத்தப் பாடசாலையிலேயே வழங்கப்பட்டு வந்தது. இந்த வருடமே முதன் முறையாக யாழ்.சிறைச்சாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் யாழ்ப்பாணத்தில் வழங்கப்படுகின்றன. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி வளாகத்திலேயே இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஆயுதப் பயிற்சி, புனர்வாழ்வுப் பயிற்சி, உடற்பயிற்சி, வழிகாட்டல் பயிற்சி உள்ளிட்டவைகள் இதன்போது வழங்கப்படவுள்ளன. (த-14)

# கடல்வான் ஆழமாக்கும் பணிகள் இன்னும் முடிவடையவில்லை

வடமராட்சி, ஓக. 11

வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்தில் கடல்வான் ஆழமாக்கும் பணிகள் இன்னும் முடிவடையவில்லை என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி உதயனில் வெளியான செய்திக்கு அனுப்பிவைத்துள்ள விளக்கத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

ஒன்பதாம் திகதி உதயனில் பிரசுரிக்கப்பட்ட செய்தியில் மேற்படி வேலைகள் யாவும் செய்து முடிக்கப்பட்டதாக உள்ளது. ஆனால் தொண்டைமானாறு, கெருடாவில், ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை ஆகிய பிரதேசங்களிலேயே இந்த வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இன்னமும் 10 கிராமங்களில் இந்த வேலைகள் செய்து முடிக்கப்பட வேண்டும். இந்த வேலைத் திட்டங்களை ஈ.பி.டி.பி அமைப்பாளர் தெய்வேந்திரன் எமது சமாசத்துடன் இணைந்து செயற்படுத்தி வருகிறார் என்றுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஊடகச் செயலாளரின் ஊடக அறிக்கையின் பிரகாரமே இந்தச் செய்தி உதயனில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# யாழ்.திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'அற்றைத் திங்கள்' கூத்துருவ நாடகம்

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் மாலை 6.45 மணிக்கு 238, பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்ற அரங்கில் 'அற்றைத் திங்கள்' என்னும் கூத்துருவ நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

முல்லைக்குத் தேரீந்த வள்ளல் பாரி மன்னனின் வீர வரலாற்றினை ஈழத்தின் பல்வேறு பிரதேச கூத்து மரபுகளை யாழ்ப்பாண தென்மோடி, வட்டுக்கோட்டை வடமோடி, மட்டக்களப்பு வடமோடி, மன் னார் தென்பாங்கு, மன்னார் வடபாங்கு, மலையக காமன் கூத்து, யாழ்ப்பாண சிந்து நடைக் கூத்து, முல்லைத்தீவு கோவலன் கூத்து, யாழ்ப்பாண வசந்தன் கூத்து போன்ற கூத்து மரபுகளை ஒன்றிணைத்து தயாரிக்கப்படும் அரங்க ஆற்றுகையாக 'அற்றைத் திங்கள்' கூத்துருவ நாடகம் அமையவுள்ளது.

இதற்கு முன்னர் 2005 காலப்பகுதியில் திருமறைக் கலாமன்றத்தால் பல்வேறு பிரதேச கூத்து மரபுகளையும் இணைத்து தயாரிக்கப்பட்டு இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்டு வரவேற்பைப் பெற்ற 'கொல் ஈனும் கொற்றம்' என்னும் கூத்துருவ நாடகத்திற்குப் பின்னர் இவ்வாறு பல பிரதேசக் கூத்து மரபுகளையும் ஒன்றிணைத்து தயாரிக்கப்படும் கூத்துருவ நாடகமே 'அற்றைத் திங்கள்' என்பது குறிப்பிடத்தக்கது.

'அற்றைத் திங்கள்' கூத்துருவ நாடகத்துக்கான ஆசனப் பதிவுகளை பார்வையாளர்கள் மன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம். (த)

# தென்னிலங்கையில் வெங்காய விலை வீழ்ச்சி; குடாநாட்டு விவசாயிகளின் ஏற்றுமதி பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

தென்பகுதிச் சந்தைகளுக்கான சின்ன வெங்காயத்தின் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதால் தற்போது வெங்காயச் செய்கையை மேற்கொண்டுள்ள குடாநாட்டு விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கம் இந்தியாவில் இருந்து பெருந்தொகையில் வெங்காய இறக்குமதியை மேற்கொண்டுள்ளது.

இந்த வெங்காய இறக்குமதியால் தென்னிலங்கைச் சந்தைகளில் வெங்காயத்தின் விலை திடீரென சரிவடைந்துள்ளது.

தென்பகுதிக்கான வெங்காய ஏற்றுமதியை நம்பி யாழ்.குடாநாட்டு விவசாயிகள் இம்முறை சிறுபோக வெங்காயச் செய்கையில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டனர். தற்போது இந்த வெங்காய அறுவடை செய்யும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் தென் பகுதிக்கான வெங்காய ஏற்றுமதி இம்முறை களைகட்டவில்லை என்றும், இதனால் அவற்றைப் பிடிகளாக கட்டிப் பாதுகாக்க வேண்டிய நிலையக்குத் தாம் தள்ளப்பட்டிருப்பதாகவும் விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

குடாநாட்டுச் சந்தைகளில் தற்போது சின்ன வெங்காயம் ஒரு கிலோ 30 ரூபா முதல் 45 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. கடந்த சில நாள்களுக்கு முன்னர் இந்த வெங்காயம் ஒரு கிலோ 100 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-26)

# யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் தேசிய பாடசாலையாகத் தரமுயர்வு



யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை தேசியப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இப்பாடசாலையை கடந்த 5ஆம் திகதி வியாழக்கிழமை முதல் இலங்கை கல்வி அமைச்சு தேசியப் பாடசாலையாகத் தரமுயர்த்தியுள்ளது.

இந்தப் பாடசாலையைத் தேசியப் பாடசாலையாகத் தரமுயர்த்த யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பங்களிப்பு முக்கியமானதென பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

ஏற்கனவே யாழ்.மாவட்டத்தில் தேசியப் பாடசாலைகளாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்.இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியன தரமுயர்த்தப்பட்டுள்ளன.

தற்போது யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடமும் தேசியப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது எனவே தற்போது யாழ்.மாவட்டத்தில் ஐந்து பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாகத் திகழ் கின்றன.

தற்போது இப்பாடசாலை அதிபராக அருட்சகோதரி மேரி தஸ்நேவிஸ் லடிஸ்லாஸ் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது. (த-16-26-135)

# பழைய பூங்கா வீதியை புனரமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 11

சுண்டுக்குழி பழைய பூங்கா வீதியைப் புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

இந்த வீதிப் புனரமைப்புக்கென தற்போது கற்கள் வீதிக்கரைகளில் போடப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பின்றி இந்த வீதி குன்றும் குழியுமாக இருந்து வருகின்றது.

இதனால் வீதியில் செல்லும் பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். (த-26)




# ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 8,766 மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 11

நாடெங்கிலும் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஐந்தாம் தரப்புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 8 ஆயிரத்து 766 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் 92 பரீட்சை நிலையங்களில் இந்தப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.


இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள், கருத்தரங்குகள் என்பன தற்போது பாடசாலைகளில் நடைபெற்று வருகின்றன. (த-26)



யாழ்.சிறைச்சாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தொழில்வாண்மை விருத்திப் பயிற்சி வழங்கலின் ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்.தேசிய கல்வியியல் கல்லூயின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டவர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை முதல் படத்திலும், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் வி.ஆர்.சில்வா, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், சிறைச்சாலைகள் சீர்திருத்தப் பயிற்சிப் பாடசாலை அதிகாரி எ.அப்புஆராய்ச்சி, யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன ஏக்கநாயக்க ஆகியோர் உரை நிகழ்துவதை அடுத்துள்ள நான்கு படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்:ரட்ணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொக்குவில்
# ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் தேவஸ்தான
# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் -11.08.2010

### மஹோற்சவ குருவின் ஆசியுரை



வண்.வடமேற்கு ஆனைக்கோட்டை கொக்குவில் ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாளின் இரத உற்சவம் இன்றாகும்.

விநாயகப் பெருமான் முருகப் பெருமான் சகிதம் அம்பாள் இரத உற்சவத்தில் வீதி உலா வருகை தந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

சர்வேஜனா சுகினோ பவந்து

அனைவரும் வருக. அம்பிகை அருள் பெறுக.

*மகோற்சவ குரு, கிரியா ரத்ன ஈசான சிவாசாரியார்,*
*தியாகராஜக் குருக்கள்.*

### அமைச்சரின் ஆசியுரை



வண்.வடமேற்கு ஆனைக்கோட்டை திருவருள்மிகு வீரமாபிடாரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா சிறப்புற நடை பெறுவதையிட்டு நாம் அகம் மகிழ்கிறோம். தேரேறி வந்து அருள்மழை பொழியும் அன்னையின் அருளால் அனைவரும் இன்புற்று எல்லா நலமும் வளமும் பெற்று வாழ்வாங்கு வாழ்வார்களாக. இந்நாளில் அன்னையிடம் அருள் வேண்டி மக்களின் அபிலாஷைகளையும், வேண்டுதல்களையும் அன்னை பிடாரி அம்பாள் நிறைவாக அருள்பாலிக்க வேண்டும் என விரும்பி நிற்கின்றோம்.

*கே.என்.டக்ளஸ் தேவானந்தா, செயலாளர் நாயகம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி,*
*பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்*

### தேரேறிய தேசநாயகி



யாழ்ப்பாணத்தின் வடபால் அம்பிகையின் அவதாரத் தலங்கள் நிறைந்த புண்ணியப்பதியே கொக்குவில் மேற்கு ஆகும்.

ஆடிமாதத்தில் அம்பாளைத் தரிசிப்பதற்குரிய காலமாகும். அதாவது உத்தராயண காலத்தில் சூரிய வெப்பம் அதிகமாக இருப்பதால் தீமைகள் அழிந்து போய்விடும். ஆனால் தட்சணாயன காலத்து வெப்பம் குறையத் தீமைகள் அதிகரிக்க அவற்றைப் போக்கும் வல்லமை நாயகியாக பராசக்தி அவதார நாயகியாக விளங்குகின்றாள். ஆடிப்பூரமும் அதனைத் தொடர்ந்து அம்மன் வழிபாடுகள் நிறைவாக வளம் பெற்று வருவதைக் காணலாம்.

அனைத்து அடியார் வாழ்வுக்கும் அஞ்ஞான இருள் அகற்றி மெஞ்ஞான வாழ்வு பெற்றுக் கொடுக்கும் வகையில் தேரேறி வந்து அருள் புரியும் பிடாரி அம்பிகையே இவ்வுலக ஜீவன்கள் உன் பிள்ளைகளாய் விளங்கிக் கொள்கின்றனர். அவர்களை அன்னையாக இருந்து ஆறுதல் அளிப்பாய் தாயே. மகிடாசுரனை சங்கரித்து மகிடாசுரமர் தனியாக சிங்கவாகனத்தில் சிம்மநாயகியாக அடியார் உள்ளம் என்னும் தேர்ப்பீடம் ஏறி திருவீதிப் பவனி வருங்காலத்து வந்ததுயர், வரும் துயர் யாவும் போக்கி'மண்ணில் நல்லவண்ணம்' நலமாக வாழ வாழ்வு தந்தருள உன் அபயகரம் அருட்கரமாய் உலகத்தின் உமையவளே அருள் புரிய நாமெல்லோரும் தேர்த்திருவிழாவில் போற்றி வணங்குகிறோம்.

*செஞ்சொல்வேந்தன்,*
*சைவப்புலவர்,சைவசித்தாந்த பண்டிதர், க.நித்தியாதசீதரன்,*
*இந்து தர்மாசிரியர், சைவப்புலவர் சங்க உப பரீட்சை செயலாளர்.*

### நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் செய்தி



யாழ்ப்பாணத்திலே உள்ள சிறப்பு வாய்ந்த திருத்தலங்களில் கொக்குவில் பிடாரி அம்பாள் திருத்தலமும் ஒன்றாகும். இந்த திருத்தலத்தில் தேர்ப்பவனி வீதி உலாவருவது இந்த பிரதேசத்தின் மங்களம் நிறைந்த நிகழ்வாகும். இந்த சிறப்பு நிகழ்ச்சியை பிரதேச மக்கள் கூடி நின்று மன மகிழ்வுடன் உகந்து ஏற்கின்றனர். மக்களின் மனங்களில் சிறப்பிடம் பெற்றிருக்கும் இத் திருத்தலத்தின் கீர்த்தி புகழ் பெற்றிருக்கின்றது. இந்த ஆலயம் மேலும் வளர்ச்சியடைந்து மக்களின் நல்வாழ்விற்கு அருள்பாலிக்க வேண்டுகிறேன். அத்துடன் எல்லோருக்கும் அம்பிகையின் அருள் கிடைக்கவும் இப்பிரதேசம் மேலும் வளரவும் எனது மனம் நிறைந்த வாழ்த்தை தெரிவிக்கின்றேன்.

வாழ்க எல்லோரும் சிறப்புடன்

*முருகேசு சந்திரகுமார்,*
*நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.*

### தேரேறிவரும் அம்மன்



யாழ்ப்பாணத்தின் பிரபல ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் வீரமா பிடாரி அம்மன் ஆலய தேர்மலரிற்கு சிறப்புச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

இந்து மக்களின் பண்பாட்டு கலாசார விழுமியங்களைப் பேணும் வழி நடத்தும் கட்டுப்படுத்தும் நிலையங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன.

கடந்த கால கொடூரப் போரின் வடுக்களை சுமந்து வாழும் மக்களை ஆற்றுப்படுத்த இத்தகைய திருவிழாக்கள் அவசியமாகின்றன. துன்பப்படும் துயரப்படும் அல்லறும் அநாதையாக வாழும் மக்களைக் காத்து உதவ ஆலயங்கள் முன்வரவேண்டும்.

அந்தவகையில் இன்று தேரேறி வரும் வீரமா பிடாரி அம்மன் திக்குத் தெரியாது தவித்துவரும் எம்மக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என இறைஞ்சி அமைகின்றேன்.

*மா.இளம்பிறையன், விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்.*

### தேர் ஏறி வந்து சீர்கேடு களையம்மா!



அம்மா தாயே பிடாரி அம்மா அகிலாண்டேஸ்வரி நீயே அம்மா உலகம் உயிர் இறைவன் ஆகியவற்றினுள்ளே ஊடுருவியுள்ள ஆற்றலே பராசக்தியாகும். அந்த சக்திதேவியே எல்லாம் வல்லவள். எங்கும் எதிலும் நிறைந்தவள் உலகத்தைப் பிரமன் உருவாக்கிப் படைக்கும் போதும் மகா விஸ்ணு உலகத்தைக் காக்கும் போதும் உருத்திரர் உலகங்களையெல்லாம் அழிக்கின்றபோதும் மூலதேவதையாக ஊடுருவி நிற்பவள் சக்திதேவியே.

சைவசமயத்தவர்களாகிய நாம் எமது கலாசார சின்னங்களையும் பண்பாடுகளையும் சைவ விழுமியங்களையும் மனிதமாண்பினையும் ஏற்றிப்போற்றுவதற்குத் தடையாக இருக்கின்ற அனைத்துத் தடைகளையும் சக்தியின் வடிவமாகிய தாயே பிடாரி அம்மா களைந்து விடம்மா! இந்த நாட்டில் அமைதிமேலோங்கி நிம்மதியான வாழ்வு அனைவருக்கும் கிட்ட தாயே உன் பாதங்களைப் பணிந்து நிற்கிறோம்.

*அ.குமாரவேல், தலைவர் பிடாரி அம்மாள் தேவஸ்தானம்.*

**பிறண்ட்ஸ்**
சிகை அலங்கரிப்பு நிலையம்
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை

**பாக்யா இசைப் பயிலகம்**
மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு.

**சுந்தர் களஞ்சியம்**
கேணியடி, கொக்குவில் மேற்கு.

**துவாரகேசன்**
பூமாலை கட்டுநனர்
பொன்னையா லேன், ஆனைக்கோட்டை.

**சிறீ அம்பாள் வெல்டிங் வேக்ஸ்**
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

**தயாளினி வீடியோ அன் பான்ஸி ஹவுஸ்**
பிடாரி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

**கணேசமூர்த்தி தேநீர்சாலை**
பிடாரி அம்மன் கோயிலடி
கொக்குவில் மேற்கு.

**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
பிடாரி அம்மன் கோயிலடி
கொக்குவில் மேற்கு.

(சி-569774)

**திஷானன் வாகன சேவை**
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**றோமியோ**
சிகை அலங்கரிப்பு நிலையம்
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

**தேரேறி வந்து தீவினைகளை அறுத்து நல்லொளி காட்டிடம்மா பிடாரி தாயே!**

**சிறி மீனாட்சி தங்கமாளிகை**
187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**றொலக்ஸ் பேக்கரி**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சந்திரா ஸ்ரோர்ஸ்**
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

**வெஸ்ற் வண் கொமினிகேசன்**
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

**பிடாரி அம்பாள் சனசமூக நிலையமும் இந்து இளைஞர் மன்றமும்**

**இலங்கைராசா ஸ்ரோர்ஸ்**
V.N.T. திறம் சுருட்டு
67,மேற்கு மாக்கட், யாழ்ப்பாணம்.

**பூரணி நகைமாடம்**
1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சானுகா நகைமாடம்**
200 ஜி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**தெய்வம் ஸ்ரோர்ஸ்**
கைப்பணி பொருள்களின் மொத்த சில்லறை

**மகாநதி ஜுவெலறி**
72ஏ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஆரணி நகைத் தொழிலகம்**
பிடாரி அம்மன் வீதி, கொக்குவில் மேற்கு.

**ஏசியன் அக்கடமி**
கேணியடி, கொக்குவில் மேற்கு.

**கீர்த்தா ரேடர்ஸ்**
கட்டடப்பொருள், பெயின்ற் வகைகள் விற்பனையாளர்
மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.

**அம்பிகை களஞ்சியம்**
பிடாரி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

**வெஸ்ரா நெல்லிக்கிறஸ்**
குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை.

**பரஞ்சோதி ஸ்ரோர்ஸ்**
தீபன் கடை
ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில்.

**பிடாரி களஞ்சியம்**
கொக்குவில் மேற்கு.

**கணேசா களஞ்சியம்**
சந்துரு தேயிலை,
இல.59, முருகமூர்த்தி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித் திருத்தங்களை எதிர்கொள்ளும் வகையில் தோட்டங்களில் முன்பள்ளிகள் உருவாக்க வேண்டும்

## பிரிடோ நிறுவனத்தின் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஓக.11

''அரச பாடசாலைகளுக்குப் பிள்ளைகள் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் முன்பள்ளிக் கல்வியைப் பெற்றிருந்தால் மட்டுமே அவர்களால் தற்போதைய கல்வித் திருத்தங்களுக்கு முகம் கொடுக்க முடியும். ஆயினும், இன்னும் மிகப் பெரும்பான்மையானத் தோட்டங்களில் முன்பள்ளிகள் இல்லாததால் பிள்ளைகள் முன்பள்ளிக் கல்வியைப் பெற முடியவில்லை. 'இந்த பின்னனியில் தோட்டங்கள் தோறும் முன்பள்ளிகள் உருவாக வேண்டும்.''

- இவ்வாறு பிரிடோ நிறுவனத்தின் தலைவர் மைக்கல் ஜோக்கிம் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை ஆக்ரோவா முன்பள்ளியில் நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் மேற்கணடவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''தோட்டங்களில் கோயில்களை அனைவரும் பொதுசொத்தாகக் கருதுவது போன்று முன்பள்ளிகளையும் பொது சொத்துக்களாகக் கருதவேண்டும் என்ற கருத்தை பிரிடோ நிறுவனம் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. இவ்வாறு செய்வதன் மூலமே அனைத்து பெருந் தோட்ட பிள்ளைகளும் முன்பள்ளிக் கல்விப் பெறுவதை உறுதிசெய்ய முடியும். இக் கருத்தை தோட்டங்களில் மக்கள் நடைமுறைபடுத்த முன்வந்திருப்பது உற்சாகம் தரும் விடயமாகும்.

அக்கரப்பத்தனையில் ஆக்ரா தோட்டத்தில் 30 குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்றனர். ஆனால், முன்பள்ளி செல்லும் வயதில் உள்ள சிறுவர்கள் நான்கு பேர் மட்டுமே உள்ளதால் ஆசிரியைக்கான கொடுப்பனவை வழங்கி முன்பள்ளியை நடத்தக்கூடிய நிலை காணப்படவில்லை. ஆனாலும், இந்த காரணத்தினால் இந்த நான்கு பிள்ளைகளும் முன்பள்ளிக் கல்வி பெறும் உரிமையை இழந்துவிடக் கூடாது எனக் கருதிய இந்த தோட்ட மக்கள் முன்பள்ளிக்கு வரும் நான்கு சிறுவரின் பெற்றார்கள் மாணவர்களுக்காக வழங்கும் கட்டணத்திற்கு மேலதிகமாக முன்பள்ளிக்கு தமது பிள்ளைகளை அனுப்பாத மற்றைய இருபத்தியாறு பெற்றார்களும் ஆளுக்கு நூறுரூபா வீதம் வழங்கி ஆசிரியை மாதாந்தம் சுமார் ஐந்தாயிரம் ரூபா கொடுப்பனவை பெறும் நிலையை உருவாக்கியுள்ளனர். இதனால், இந்த தோட்டத்தில் நான்கு பிள்ளைகளுக்காக முன்பள்ளியை நடத்தக் கூடிய நிலை உருவாகி உள்ளது. தற்போதைக்கு முன்பள்ளிக்கு வரும் நான்கு பிள்ளைகளுக்காகவும் எதிர்காலத்தில் இந்த முன்பள்ளியில் கல்வி கற்கக்கூடிய பிள்ளைகளுக்காகவும் முன்பள்ளியை ஒரு பொதுசொத்தாகக் கருதி உதவி செய்து வரும் ஆக்ரா தோட்ட மக்களின் முன்மாதிரி பெரிதும் போற்றி பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இதேபோன்று அயோனா தோட்டத்தில் முன்பள்ளிக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பாத பத்துக்கும் மேற்பட்ட பெற்றார்கள் அந்த தோட்ட முன்பள்ளிக்காக மாதாந்தம் நூறு ரூபா கொடுத்து உதவி வருகிறார்கள். தோட்டத்தில் உள்ள ஒரு பிள்ளைகூட முன்பள்ளிக் கல்வி பெறும் வாய்ப்பை இழந்துவிடக்கூடாது எனப் பெருந் தோட்ட பொதுமக்கள் சிந்திக்க ஆரம்பித்திருப்பதும் அதனை நடைமுறைப் படுத்த முன்வந்திருப்பதும் போற்றி பாராட்டப்படக்கூடிய முன்மாதிரிகையாகும்.

எங்கள் பிள்ளைகளுக்கு முன்பள்ளிக் கல்விபெறும் வாய்ப்புக் கிடைக்கவி.ல்லையே என கவலையுடன் அங்கலாய்த்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு இது உற்சாகம் தரும் செய்தியாகும். இந்த மனப்பாங்குடன் அனைத்து மக்களும் செயல்பட முன்வந்தால் தோட்டங்கள் தோறும் ஒரு முன்பள்ளி என்ற இலக்கை நாம் விரைவில் அடைவது கடினமான காரியம் அல்ல.'' இப்படி மைக்கல் ஜோக்கிம் தெரிவித்தார். (ளி)




# தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இ.தொ.கா. மகளிர் இணைப்பதிகாரிகள்

கொழும்பு, ஓக. 11

தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனம்கண்டு தீர்த்து வைப்பதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மாவட்டப் பிரதிநிதிகள், மகளிர் இணைப்பதிகாரிகள் ஆகியோர் திறமை வாய்ந்தவர்களாகச் செயற்படுகின்றனர் என இ.தொ.கா. சிரேஷ்ட உபதலைவர் ஹரி சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இ.தொ.காவும் சர்வசேதத் தொழிலாளர் மன்றமும் இணைந்து நடத்திய இரண்டு நாள் செயலமர்வு அண்மையில் கொழும்பு ரேணுகா ஹோட்டல் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் ஹரி சந்திரசேகர தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு:-

மலையக பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கவனிப்பதற்கும் அவற்றைத் தீர்ப்பதற்கும் துடிப்புள்ள இளம் இளைஞர்கள், யுவதிகள் மாவட்டப் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தோட்டங்களில் உள்ள தொழில் பிணக்குகளை நிர்வாக மட்டத்தில் தாங்களாகவே தீர்த்துக்கொள்ளும் ஆற்றல் இவர்களுக்கு உள்ளதால் பல்வேறு பிணக்குகள் இலகுவான முறையில் தீர்த்து வைக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் இ.தொ.கா. இவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி போதியத் தொழிற்சங்கப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்கியது. இந்த வகையில் ஜப்பான் சர்வதேச தொழிலாளர் மன்றம் இ.தொ.காவுடன் இணைத்து எமது பிரதிநிதிகளுக்கு அவ்வப்போது ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் வழங்கி வருவதோடு, தொழிற்சங்கத்தை வளர்ப்பதற்கு தமது ஒத்தாசையையும் வழங்கி வருகின்றது.

இந்த இளம் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தொழிற்சங்க சட்டத்திட்டங்களை தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறாகத் தெரிந்து கொள்ளும் போது தொழிற்சங்க நியதிகளுக்கேற்ப தொழிற் பிணக்குகளை கையாளும்போது இவர்களது ஆற்றலும், கௌரவமும் அதிகரிக்கும் - இப்படி ஹரி சந்திரசேகர கூறினார். (ளி)

# கண்டி எசல பெரஹரா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்

கண்டி, ஓக. 11

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி எசல பெரஹரா நேற்றுக் காலை 7.07மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

பெரஹராவை முன்னிட்டு சுகாதார ஏற்பாடுகள் மத்திய மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாநகரசபை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், குடிதண்ணீர் விநியோகம், வீதி சுத்திகரிப்பு ஆகியவற்றை கண்டி மாநகரசபை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, பெரஹராவை முன்னிட்டு பாதுகாப்புக்காக ஆறாயிரம் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அத்தோடு, இவர்கள் தங்குவதற்கு 25 பாடசாலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் முதல் கண்டி மாநகர வீதி நுழைவாயில்களின் பாதுகாப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ளி)

# கிழக்கு மாகாண சபையைக் கலைத்துவிட்டு புதிய நிர்வாகத்தைக் கொண்டுவர வேண்டும்

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர்

மட்டக்களப்பு, ஓக. 11

''கிழக்கு மாகாணசபையால் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிட்டவில்லை. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் காட்டுத்தர்பார் புரிகின்றனர். எனவே, கிழக்கு மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபைகளைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்தி புதிய மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யவேண்டும்.''

-இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

சங்கத்தின் பிரதம நிறைவேற்று முகாமைத்துவ சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த சனிக்கிழமை கல்முனையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றியபோதே லோகநாதன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இணைந்த வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்குத் தம்மைத்தாமே ஆளத்தக்க மாநில சுயாட்சி வழங்குவதன் மூலமே இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வைக் காணமுடியும். இதனோடு ஒட்டிய தீர்வுத் திட்ட மொன்றை முன்வைப்பதில் அரசு இனிமேலும் தாமதம் காட்டக்கூடாது.

நாட்டில் யுத்தம் ஓய்ந்துள்ள நிலையில் மக்கள் தமது வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுமென எதிர்பார்க்கின்றனர். எனினும், இன்று தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் நிரந்தர சமாதானம் தோற்றுவிக்கப்படுமென்று எண்ணிய தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு எட்டாக்கனியாகி விடுமோ என்ற சந்தேகம் நம் மக்களின் மத்தியில் எழுந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட மொன்றை முன்வைப்பதில் அரசு துரிதம் காட்டவில்லை.

எமது சங்கம் நீண்டகாலமாகக் கோரிவருவது போல், வடக்கு - கிழக்கு இணைந்த மாநிலத்தில் எமது மக்களுக்கு மாநில சுயாட்சி வழங்கி சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும்.

இந்த விடயத்தில் அரசு இன்னும் தாமதம் ஏற்படுத்தி தமிழ் மக்களை ஏமாற்றக்கூடாது.

13ஆவது அரசமைப்பை முழுமையாக அமுல்படுத்தி மாகாணசபைகளுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படாமையே பல பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாகும்.

குறிப்பாக இன்று வடக்கு, கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு எமது மண்ணில் எமது பெரும்பான்மையைப் பலமிழக்கச் செய்யும் சதி நடவடிக்கைகள் அரங்கேறி வருகின்றன.

இத்தகைய செயற்பாடுகள் அரசு மீதான தமிழ்பேசும் மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்கின்றன. அத்துடன் எதிர்காலத்தில் எமது பிரதிநிதித்துவங்கள் குறைந்துவிடலாமென்ற அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

நாம்பட்ட கஷ்டங்கள், துயரங்கள் போதுமானதாகிவிட்டன. இனிமேலும் அத்தகைய நிலைமை ஏற்படுவதையோ, நாம் அடிமையாக்கப்படுவதையோ விரும்பவில்லை.

எனவே, வடக்கு, கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நிறுத்தப்படவேண்டும்.

இதேவேளை, கிழக்கு மாகாணசபையால் மக்களுக்கு உருப்படியான எதுவும் கிடைக்கவில்லை. இந்த மாகாணசபையில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

இங்குள்ள மாநகரசபை, நகரசபைகள் உட்பட உள்ளூராட்சிசபைகளின் நிர்வாகங்களும் இதனைப்போலவே காணப்படுகின்றன.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல்வாதிகள் காட்டுத்தர்பார் நடத்திக்கொண்டிருக்கின்றனர். மக்கள் எதிர்பார்த்த சேவைகளை அவர்களால் வழங்க முடியவில்லை.

எனவே கிழக்கு மாகாண சபை உட்பட கிழக்கிலுள்ள சகல உள்ளூராட்சி சபைகளையும் கலைத்துவிட்டு தேர்தலை நடத்தி புதிய மக்கள் பிரதிநிதிகளிடம் நிர்வாகத்தை வழங்க ஆவன செய்யப்பட வேண்டும்.

நாடு வழமைக்குத் திரும்பியுள்ள போதிலும் இதுவரையும் உள்ளூராட்சி ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காணப்படவில்லை.

குறிப்பாக உள்ளூராட்சிசபைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கான பதவி உயர்வு விவகாரம் இன்றுவரை நீடித்து வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

இவர்கள் அடிமைகளாக்கப்பட்டு, மிக வேதனையுடன் சேவையாற்றி வருகின்றனர்.

உடனடியாக இந்த ஊழியர்களுக்கான பதவி உயர்வுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்'' - இப்படி லோகநாதன் தெரிவித்தார். (ளி)




# வேத்துச்சேனைக்கு மின்சார இணைப்பு

மட்டக்களப்பு, ஓக.11

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமமான வேத்துச்சேனைக்கு. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மின்சாரம் வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் வேண்டுகோளின் பேரில் 'நெக்கொட்' திட்டத்தின் மூலம் இக்கிராமத்திற்கு மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது.

மின்விநியோகத்தை முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆரம்பித்து வைத்தார்.

இக்கிராம மக்கள் மின்சார வசதியில்லாததால் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# நெல்லுக்கு உரியவிலை கிட்டாத விரக்தியில் அம்பாறையில் விவசாயி தீக்குளிக்க முயற்சி

கொழும்பு, ஓக.11

உற்பத்தி செய்யப்படும் நெல்லுக்கு உரிய விலை கிடைக்காத விரக்தியில் விவசாயி ஒருவர் தீக்குளிக்க முயன்ற சம்பவம் நேற்றுமுன்தினம் அம்பாறையில் இடம்பெற்றது.

விவசாயி தீக்குளிக்க முயல்வதற்கு முன்னர் அவரும் இன்னுமொரு விவசாயும் இணைந்து அம்பாறை மணிக்கூண்டுக் கோபுரத்திற்கு முன்பாக நெல்மூடைகளுக்கு தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

விவசாயி தனக்குத்தானே தீமூட்ட எத்தனித்த வேளையில் பொலிஸார் தலையிட்டு அவரைக் காப்பாற்றியுள்ளனர்.

நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்காத காரணத்தால் தாம் மிகுந்த பொருளாதாரச் சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.08.1993

- அரசாங்கம் தனது பிரசார நடவடிக்கைகளை விட்டுவிட்டு புலிகளுடன் மோதுவதற்கு முழு நாட்டையும் யுத்தத்திற்குத் தயாராக்க வேண்டும் என ஏதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.
- விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட மணலாறு - மண்கிண்டி மலை முகாம் பகுதிக்கு இராணுவத்தின் பிரதம தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா தலைமையிலான விசாரணைக்குழு விஜயம்.

02.08.1993

- தம்மை மீட்குமாறு அரசைக் கோரி உண்ணாவிரதம் இருக்கும், விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யுத்தக் கைதிகள் பலரின் உடல் நிலை மோசமடைந்திருப்பதாகத் தெரிவிப்பு.
- வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் 5 கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிப்பு.

03.08.1993

- மணலாறு மண்கிண்டிப் பகுதியை விடுதலைப் புலிகளிடமிருந்து பாதுகாக்க அரசு தவறுமானால், விரைவில் பராக்கிரமபுர, பதவியா ஆகிய இடங்களையும் விடுதலைப் புலிகள் தாக்குவார்கள் என அப்பகுதிகளில் குடியேற்றப்பட்டிருக்கும் சிங்களப் பொதுமக்கள் அச்சம் தெரிவிப்பு.
- காமினி திஸநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆளும் ஐ.தே.கட்சியுடன் இணைவது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது எனத் தெரிவிப்பு.

04.08.1993

- 10 ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் 8 எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் உள்ளடக்கி நியமிக்கப்படவிருக்கும் அரசமைப்பு மாற்றம் குறித்து ஆராயவென நியமிக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார் எனத் தெரிவிப்பு.
- கொழும்பு , பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலய வளவில் - ஆடிவேல் நிகழ்வுகளுக்கு மத்தியில் இடம் பெற்ற இரு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் சிக்கி ஆறு பொது மக்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

05.08.1993

- விடுதலைப் புலிகளின் காவலில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வரும் 33 யுத்தக் கைதிகளினதும் உடல் நிலைமை மோசமடைந்துள்ளது எனவும், அவர்களின் 12 பேர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு இருப்பதாகவும் தெரிவிப்பு.
- இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு, சர்வதேச உதவியை கோரவுள்ளதாக ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தெரிவிப்பு.

06.08.1993

- விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் யுத்தக் கைதிகளை அவர்களின் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கூட்டுப் படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் செய்தி யொன்றை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிப்பு.
- இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்தை அவசரகாலச் சட்டத்தின் கீழ் உடனடியாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய தூண்டுப் பிரசுரங்கள் கொழும்பில் பிக்குகளினால் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிப்பு.

07.08.1993

- விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள பொலிஸார் மற்றும் இராணுவச் சிப்பாயை விடுவிப்பது தொடர்பாக அரச தரப்பு தயாரித்து இருக்கும் புதிய திட்டமொன்று நேற்று விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்காக யாழ். அரச அதிபரால் கையளிப்பு.
- கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாக இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுகள் தெரிவித்துள்ளதாக ஆங்கில பத்திரிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது எனத் தெரிவிப்பு.

08.08.1993

- வடக்கு - கிழக்கு யுத்தத்தில் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது போனால் அரசு இராஜினாமாச் செய்யவேண்டும் என தெற்கில் உள்ள சிங்கள அமைப்புக்கள் அரசை வற்புறுத்தி வருவதாகத் தெரிவிப்பு.
- வடக்கு- கிழக்குப் பிரச்சினையை சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ தீர்க்க வேண்டுமானால் அதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியம். ஜனாதிபதி விஜேதுங்க, காமினி திஸநாயக்கவை அரசில் சேர்க்கும் முயற்சியின் நோக்கம் இது தான் என் "ராவய" பத்திரிகையின் ஆசிரியர் தெரிவிப்பு.

09.08.1993

- இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐ.நா சபையின் மத்தியஸ்தத்தைக் கோரவேண்டும் என உலக ஒத்துழைப்புக்கான அமைப்பு சமர்ப்பித்த யோசனையை அரசு நிராகரித்து விட்டதாகத் தெரிவிப்பு.
- திருகோணமலை சாம்பல் தீவுப் பகுதியில் விடுதலைப் புலிகளுடனான மோதல் ஒன்றின் போது 6 பொலிஸார் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

10.08.1993

- மன்னார் - வவுனியா வீதியில் இலங்கை இராணுவத்தினர் தொடர் காவல் அரண்களை நிறுவி வருவதுடன் இராணுவ வேலியையும் அமைத்துள்ளதாக இலங்கை இராணுவத் தரப்புத் தெரிவிப்பு.
- யாழ். மாவட்ட மக்களுக்கு வழங்க வேண்டிய உதவிகளை நேரில் கண்டறிவதற்காக சர்வதேச நிதி உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரிவிப்பு.

11.08.1993

- மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க ஆயுதப் படைகளின் தளபதிகளை கடுமையாக எச்சரித்து இருப்பதாகத் தெரிவிப்பு.
- மண்கிண்டி இராணுவ முகாமிலிருந்து அரச படைகள் புலிகளிடம் பறிகொடுத்த ஆயுத தளபாடங்களை ஈடு செய்வதற்காக அரசு சீனாவிலிருந்து நவீன ஆயுதங்களை இறக்குமதி செய்யவுள்ளதாகத் தெரிவிப்பு.

12.08.1993

- கிளாலிக் கடலில் இருநாள்களுக்கு முன்னர் இடம் பெற்ற படகு விபத்தில் 17 இற்கும் அதிகமான பயணிகள் கடலில் மூழ்கி உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.
- கிளாலிக் கடலில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் வைக்கப்பட்டிருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் பிரேதங்களை அடையாளம் காண்பதற்காக பெரும் தொகையான பொது மக்கள் முண்டியடிப்பதாகத் தெரிவிப்பு.

13.08.1993

- நேற்று இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது புதிய வெளியுறவு அமைச்சராக ஏ.சி.எஸ்.ஹமீது நியமிக்கப்பட்டதாக அறிவிப்பு.
- யுத்தக் கைதிகளான தமது குடும்ப உறுப்பினர்களுடன் கடந்த 54 நாள்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த உறவினர்கள் நேற்று கொழும்பு திரும்பினர். அங்கிருந்து யுத்தக் கைதிகளின் விடுதலைக்காக அரசுக்கு அழுத்தம் கொடுக்கப் போவதாக அவர்கள் தெரிவிப்பு.

14.08.1993

- யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள 32 பொலிஸாருக்கும் இராணுவச் சிப்பாய் ஒருவருக்கும் பதிலாக அரசின் காவலில் உள்ள விடுதலைப் புலிகளின் அதே எண்ணிக்கையானோரை விடுவிக்க அரசு தயாராக உள்ளதாக கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அறிவிப்பு.
- யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பிய யுத்தக் கைதிகளின் உறவினர்கள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவை சந்திக்க எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை எனத் தெரிவிப்பு.

15.08.1993

- வடக்கின் மீதான பொருளாதாரத் தடையை நீக்கமுடியாது என்ற இலங்கை அரசின் இறுதி முடிவை இராணுவத் தளபதி நேற்று வெளியிட்டதாக பி.பி.ஸி வானொலி அறிவிப்பு.
- 4 நாள்களுக்கு முன்னர் தனது அமைச்சரவை மாற்றத்தை அறிவித்த ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க, நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களின் [illegible] வசமே வைத்துக் [illegible] தெரிவிப்பு.


# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 767

சீட்டிழுப்பு திகதி 09.08.2010

எழுத்து: C

வெற்றி இலக்கங்கள்: 22 28 62 66

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 21,168,201.60 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,000/= | 11 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000/= | 317 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000/= | 639 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 100/= | 15216 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரு. 40/= | 8644 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20/= | 216768 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20/= | 33983 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,375,380.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 21,666,661.60

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கனகசபை சிவசரணம்**
(ஐயாச்சாமி)

(மண்டைதீவு 2 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல. 38A, பிறவுண் வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

அன்னை மடியில்:
19.09.1921

ஆண்டவன் திருவடியில்:
23.07.2009

திதி: 11.08.2010 துதியை

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்
பாசத்தோடு வளர்த்த ஐயாவை
பாரினிலே காணாது துடிக்கின்றோம்
உற்றார், உறவினர் ஆறுதல் கூறினாலும்
உங்கள் பிரிவை தாங்க முடியவில்லையே!
ஆண்டவன் திருவடியை அடைந்த
ஐயாவின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
இல.38A, பிறவுண் வீதி,
நீராவியடி,யாழ்ப்பாணம்.

# நீங்கா நினைவலைகள்

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

6 ஆம் மாத நினைவஞ்சலி





திதி - துதியை
பிறப்பு: 06.12.1922
இறப்பு: 14.08.2007

அமரர்
**சரவணமுத்து சதாசிவம்**
(சாண்டோ மாஸ்ரர்)

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தது - உம்
அன்பு முகத்திளை இனிக் காண்பது எப்போ- உம்
கனிவான வார்த்தையும் பிரியாத அன்பும்
எம் நெஞ்சங்களை விட்டு அகலவில்லை - என்றும்

திதி: அபரபக்க ஷஷ்டி
பிறப்பு: 28.05.1930
இறப்பு: 04.03.2010

அமரர்
**சரவணமுத்து மயில்வாகனம்**
(P.T.மயிலு மாஸ்ரர்)

மாதங்கள் ஆறு மறைந்து ஓடினும்
மறக்கவில்லை உம் ஞாபகம் எம் மனங்களை விட்டு
கவலைகள் சுமந்தபடி வாழ்கின்றோம் - இங்கே
உம் முகத்தினைக் காண்பது எப்போ

305 A.V.றோட், அரியாலை, யாழ்ப்பாணம். [101822] குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மொழிக்கு ஓர் மடல்

கல் மண் தோன்றா காலத்து
முத்த் தமிழ்மொழி
காலத்தால் அழியாத
கவின்மிகு நம் மொழி.
கொற்றவையில் உன்குரல் ஒலித்தது
கோவையில் உன் புகழ் நிலைத்தது.

ஆயகலைகளில் அபிநயம்
தந்தவள் - நீ
தூய தமிழினில் சூத்திரம்
நின்றவள் - நீ

செம்மொழி எம்மொழி
சீரிய நல் மொழி
நயம் தரும் நல்மொழி
நானிலம் போற்றும் மொழி
நிறைவான முதுமொழி
நிகரில்லா இனிமொழி.

உலகினில் உயர்ந்து
இமயமாய் நிற்கும் மொழி
குலமாய் குன்றாய்
உயர்ந்தவள் நீ....
நலமாய் நீ....
நீடூழி வாழ
நம்மொழியால்
உனை வாழ்த்துகின்றோம்
நானிலமும் போற்றிடவே...

க.நாகேஸ்வரி,



## கருங்கடலுக்கு அடியில் மெகா ஆறு கண்டுபிடிப்பு

கிழக்கு ஐரோப்பாவையும் மேற்கு ஆசியாவையும் பிரிக்கும் வகையில் ரஷ்யா, துருக்கி ஆகிய நாடுகளை ஒட்டி அமைந்துள்ளது கருங்கடல். இதைப் பற்றி லண்டன் லீட்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர்.

கருங்கடலுக்கு அடியில் அதிக வேகத்தில் ஆறு ஓடுவதை சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர். இதன் ஆழம் 115 அடி என்றும் தெரியவந்துள்ளது. பூமியின் மேற்பரப்பில் இது இருந்திருந்தால், உலகின் 6ஆவது பெரிய ஆறு என்ற பெருமையைப் பெற்றிருக்கும் என்றும் விஞ்ஞானிக்ள் தெரிவித்தனர். தேம்ஸ் நதியில் இருந்து தயாரிக்கப்படும் மின்சாரத்தை விட 350 மடங்கு அதிகமாக இந்த நீரோட்டத்தில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது என்கின்றனர். இந்த ஆறு ஓடும் மிகபிரமாண்டமான பரப்பில் ஏகப்பட்ட மேடு, பள்ளங்கள் இருப்பதால் நீர்வீழ்ச்சிகள் இருப்பதற்கும் வாய்ப்பு இருப்பதாகக் கூறுகின்றனர் ஆராய்ச்சியாளர்கள். ★






## செவ்வாய்-கிரகத்தில் ஒரு ஆஸ்திரேலியா

செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் நாசா மையம் அனுப்பிய விண்கலம் ஒன்று செவ்வாய்க் கிரகத்தை சுற்றியபடி ஆய்வு மேற்கொண்டு வருகிறது. செவ்வாயின் மேற்பகுதியைப் படம் எடுத்து தொடர்ந்து பூமிக்கு அனுப்பி வருகிறது. இதன்மூலம் கிடைத்த முக்கிய தகவல்கள் குறித்து நாசா விஞ்ஞானிகள் கூறியதாவது: பூமியில் ஆஸ்திரேலியாக் கண்டத்தின் ஒரு பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள், படிமங்கள் கிடைத்தன. அங்கு உயிரினங்கள் இருந்ததற்கான ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால், அதற்கான சாத்தியக்கூறுகள் கட்டாயம் இருக்கும் என்று நம்புகிறோம். உயிரினங்களின் படிமங்கள் கிடைக்கும் என்றும் கருதுகிறோம். விண்கலம் உதவியுடன் தொடர் ஆராய்ச்சி நடந்து வருகிறது. சுமார் 400 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் நோச்சியப் பழங்குடிகள் வாழ்ந்த காலத்தில் செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்திருக்கலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள். ★

## உட்கார்ந்து இருப்பது ஆபத்து



அதிக நேரம் உட்கார்ந்து இருந்தால் உடல் ஆரோக்கியம் கெட்டுப் போகும் என்கிறது மிகப் பிந்திய ஆராய்ச்சி.

உலகில் காலியாகக் கிடக்கும் அத்தனை நாற்காலிகளும் நமக்காகவே படைக்கப்பட்டவை என்ற எண்ணம் பலருக்கு. பஸ் தரிப்பிடத்தில் முக்கால் நிமிடம் காத்திருக்க வேண்டியிருந்தால்கூட நாற்காலியைத் தேடுவார்கள். வங்கி, பாடசாலை, அரசு அலுவலகங்களில் கேட்கவே வேண்டாம்.

உட்கார்ந்து இருக்கும் வேலை என்றாலும் ஒரு நாளுக்கு 3 மணி நேரத்துக்கு அதிகமாக உட்காரக் கூடாது. 6 மணி நேரத்துக்கும் அதிகமாக உட்கார்ந்திருப்பது ஆபத்து. இப்படி இருந்தால் ஆண்கள் இளைய வயதிலேயே இறப்பதற்கு 18 சதவீதம் அதிக வாய்ப்பு இருக்கிறது. பெண்களுக்கு இந்த வாய்ப்பு இன்னும் அதிகம். அதாவது, 37%. மற்ற நேரங்களில் உடற்பயிற்சி செய்தாலும்கூட, அதிக நேரம் உட்கார்ந்திருப்பது ஆபத்துத்தான்.

ஒரு வேலையும் செய்யாமல் எந்நேரமும் படுத்தே இருப்பது அதைவிட ஆபத்து. இந்தநிலை நீடித்தால் இளைய வயதிலேயே இறக்கும் ஆபத்து ஆண்களுக்கு 48 சதவீதமும் பெண்களுக்கு 98 சதவீதமும் அதிகம். உட்கார்ந்து இருக்க வேண்டிய வேலை என்றாலும் தொடர்ந்து உட்காராதீர்கள். இடையிடையே எழுந்து நடந்து விட்டு வாருங்கள். நின்றுகொண்டு வேலை செய்கிற வகையில் மாற்று ஏற்பாடுகள் செய்துகொள்ளுங்கள் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



உறவினர்கள், நண்பர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். ஆடம்பரச் செலவுகளை தவிர்க்க வேண்டும். சக ஊழியர்கள் திடீர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் உண்டாகும். தாய் வழியில் அன்புத் தொல்லையுண்டு.

### இடபம்



கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள். எதிர்பார்த்த பணவரவு ஒன்று வராமல் போனாலும், எதிர்பாராத பணவரவு ஒன்று வரலாம். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நோய் உபாதைகள் நீங்கி தெம்பு, உற்சாகமாகச் செயற்படுவீர்கள். பல நாள் ஆசை ஒன்று சிக்கலின்றி எளிதில் நிறைவேறும்.

### மிதுனம்



குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். திடீரென வரும் வேலை ஒன்றால், வழக்கமாகச் செய்யும் வேலை ஒன்றை மாற்றி அமைக்கலாம். சேமித்த பணம் ஒன்றை திடீரெனச் செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். பணப் பொறுப்புகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள்.

### கடகம்



எந்த விடயத்திலும் அதிக நம்பிக்கை வைப்பீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். முன்பின் யோசிக்காமல் செய்த காரியங்கள் கூட நல்ல விதமாக அமையலாம். உங்களின் அனுபவம் ஒன்றைப் பற்றி மற்றவர்களிடம் சொல்வீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்து பெருமை அடைவீர்கள்.

### சிங்கம்



மற்றவர்களின் வேலைகளுக்காக நீங்கள் அலைய நேரிடலாம். வாடகை வீட்டில் குடியிருப்போர் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். பல நாட்களாக கிடப்பில் போட்டிருந்த வேலை ஒன்றை இன்று திடீரெனச் செய்யலாம். உத்தியோகத்தர்கள், மேலதிகாரிகளின் கட்டளைகளை மறக்காமல் நிறைவேற்ற வேண்டும். பக்தி நாட்டம் கூடும்.

### கன்னி



பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் சந்திப்பு நிகழும். நடக்குமோ நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று எளிதில் நடந்து விடலாம். விலை உயர்ந்த பொருள்கள் வாங்க பணத்தை தாராளமாகச் செலவு செய்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையலாம். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். அனுகூலமான நாள்.

### துலாம்



உடல் உபாதைகள் நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். நண்பர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்து அவர்களின் மனதில் இடம் படிப்பீர்கள். அரச காரியங்கள் சிலரின் உதவியுடன் சுமூகமாக முடிவுக்கு வரலாம். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். தொழில் ரீதியாக உங்களின் செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கும்.

### விருச்சிகம்



இரண்டு நாள்களாகத் தடைப்பட்ட காரியம் ஒன்று இன்று நடக்கலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். சிலருடன் கோயில்களுக்கு சென்று வழிபாடு நடத்தலாம். தூக்கமின்மை, சோர்வால் அவதிப்படலாம். நீங்கள் பார்க்க விரும்பிய ஒருவர் உங்களைப் பார்க்க விரும்பாமல் தவிர்க்கலாம்.

### தனுசு



எளிதாக முடிந்துவிடும் என நினைத்த வேலை ஒன்றில் இழுபறி ஏற்பட்டு விடலாம். உங்களின் சொல்பேச்சு கேட்காமல் குடும்ப உறுப்பினர்கள் செயற்படுவதால் எரிச்சல் அடையலாம். வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் கடும் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். பணவரவுகள் கிடைப்பது தள்ளிப்போகலாம். வேலைப்பளு கூடும்.

### மகரம்



பழகிய சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம். முன்யோசனையுடன் செயற்படுவதன் மூலம் சில விடயங்களில் வெற்றி காண்பீர்கள். பிரியமான நண்பர்கள், தோழிகளுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். ஓய்வெடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலைகளைச் செய்ய நேரிடலாம். அனுகூலச் செய்தி கேட்கலாம்.

### கும்பம்



எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும் நாள். நாளை செய்ய நினைத்த சில வேலைகளை இன்றே செய்து முடிப்பீர்கள். உறவினர் ஒருவர் தொழில் ரீதியாக உங்களிடம் உதவி கேட்கலாம். குடும்பத்தினரின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். உதிரி வரவுகளைப் பெறலாம்.

### மீனம்



நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்கும் நாள். சங்கடம் தரும் செய்தி ஒன்றை அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். சில வழிகளில் கணிசமான செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை ஒன்று முடியாமல், அதை நீங்களே மீண்டும் செய்ய நேரிடலாம். தேக ஆரோக்கியக் குறைவு உண்டாகும்.


## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No.1 தரமான Broiler கோழிக் குஞ்சுகள் (விசேட விலையில்) 16.08.2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே: 021 222 6944

நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையத்திலும் பதிவு செய்யலாம்.
தொ.பே: 0774656377

கூட்டி பாம் வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம்.
தொ.பே: 021 321 6290

குறிப்பு: (தீவனம், மருந்து என்பன விசேட விலையில் பெற்றுக்கொள்ளலாம்)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1966இல் பிறந்த, மூலம் 3ஆம் பாதம், இலக்கினத்தில் செவ்வாய் உள்ள மணமகளுக்கு தகுந்த நற்பண்புள்ள மணமகன் தேவை. விவாகரத்துப் பெற்றவர்களும் (பிள்ளை இல்லாதவர்கள்) தொடர்பு கொள்ளலாம்.

-விளம்பர இல: 4053
மே/பா உதயன் (சி/569756)


## சவுதியில் நிர்க்கதியான நிலையில் 250 இலங்கைப் பணிப் பெண்கள்

கொழும்பு, ஒக்.11

சவுதி அரேபியாவுக்குத் தொழிலுக்காகச் சென்று பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளான 250 இக்கும் அதிகமான இலங்கைப் பணிப்பெண்கள் தற்போது அந்த நாட்டின் ஒலாயா முகாமில் தங்கி யுள்ளனர்.

தாம் சொந்த நாட்டிற்குத் திரும்பும் எதிர்பார்ப்புடனேயே இந்த முகாமில் தங்கியுள்ளார் என அவர்கள் கூறுகின்றனர்.

ஒலாயா முகமில் தங்கியிருப்பவர்களுள் 8 வருடங்களாகச் சம்பளம் வழங்கப்படாத ஒரு பணிப்பெண்ணும் உள்ளதாகத் தெரிகிறது.

இவர் தங்காலையிலிருந்து1993 ஆம் ஆண்டு சவுதி அரேபியாவிற்குத் தொழில் நிமித்தம் சென்றிருந்தார்.

சவுதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதுவரிடம் இதுபற்றிக் கேட்டபோது, இந்தப் பணிப்பெண்கள் தொடர்பாகத் தற் போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.(சி)

## மீள்குடியேறிய கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகள்

மட்டக்களப்பு,ஓக.11

மீள்குடியமர்த்தப்பட்ட கிராமங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை தமது அமைச்சு எடுத்துள்ளதாக மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட சின்ன வெட்டைக் கிராமத்திற்குப் பிரதி அமைச்சர் முரளிதரன் அண்மையில்விஜயம்செய்திருந்தார். பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இந்தக் கிராமத்திற்கு பிரதியமைச்சர் நிதி ஒதுக்கீடு செய்திருந்தார். இதன் மூலம் குடிதண்ணீர், மின்சாரம், வீதிப் புனரமைப்பு, பாடசாலைகளின் அபிவிருத்தி என்பன மேற்கொள்ளப்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1948.12.15

கர்த்தருக்குள் 2009.08.11

### வருணேஸ்வரி(டெபில்லா) இராசநாயகம்

''மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்கிறேன்
கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகா விட்டால்
தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்.

(யோவான்: 12.24)

அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 11.08.2010 புதன்கிழமை கானான் திருச்சபையினரின் ஜெப ஆரதனையுடன் அன்னாரின் இல்லத்தில் நிகழ்வுறும்.

அவ்வமயம் சபை அருட் போதகர்கள், ஊழியர்கள், அருட் சகோதரிகள், விசுவாசிகள், உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் கலந்து கொள்வதோடு, அன்றைய மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

82/16, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு, அரியாலை. (101432)

க.இராசநாயகம் (கணவர்)

## நெஞ்சை விட்டகலா நான்காம் ஆண்டு நினைவுகள்

### செல்வி மேரி அன்ரனிற்றா அன்ரனியூஸ் (தாளையடி)

(யாழ். பல்கலைக்கழக கலைப்பிரிவு மூன்றாம் வருடம்)



மலர்வு 26.09.1983

உதிர்வு 12.08.2006

மகளே! உமைப்பிரிந்து இன்று
நான்கு ஆண்டுகள் ஆனபோதும்
எம் நெஞ்சங்கள் உனை நினைத்து
கல்லாகக் கனக்கிறதே ·
உம் உருவமதை தொங்கும்
படமதிலே தினம் பார்த்து
எம் கண்களெல்லாம் கண்ணீரால் கரைகின்றனவே.

**எம் செல்வமே! எமைவிட்டு ஏன் பிரிந்தாய்?**

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (12.08.2010) வியாழக்கிழமை காலை 6 மணிக்கு யாழ். புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இல.823, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (101743)

திரு. திருமதி அன்ரனியூஸ்
(பெற்றோர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுக் குளத்தில் இருந்து இராமநாதபுரத்துக்கு நீர் வராமையால் கிணறுகள், குளங்கள் வற்றிய நிலையில்

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,ஓக.11

இரணைமடுக் குளத்தின் நீரானது இராமநாதபுரம் பகுதிக்கு வருவதற்கு வழி சமைக்க வேண்டும் என அப்பிரதேச மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரணைமடுக் குளத்தின் வலதுகரை வாய்க்கால் மூலம் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளுக்கு நீர்செல்வது வழக்கம். தற்போது வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் மக்கள் மீள் குடியேற்றப்பட்டு நான்கு மாதங்கள் கடந்த நிலையில் இவ் வாய்க்கால் மூலம் நீர் திறந்து விடப் படவில்லை.

எனினும் கடந்த மாத நடுப்பகுதியில் குளத்திற்கு அண்மையில் இருந்த வாய்க்கால் உடைப்புக்கள் கட்டப்பட்டு குறைந்தளவு நீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த நீர் வட்டக்கச்சி சந்தியடிப் பகுதிவரை வந்துள்ள போதிலும் இராமநாதபுரம் பகுதிக்குச் செல்லவில்லை.

இதற்குக் காரணம் குறைந்தளவு நீர் திறந்து விடப்பட்டுள்ளமையும், வாய்க்கால்கள் புனரமைப்புச் செய்யப்படாமையும் ஆகும் எனப் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு வாய்க்கால் நீர் வராமையால் இப்பகுதிக் கிணறுகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதுடன் பல கிணறுகள் நீரின்றி வரண்டும் காணப்படுகின்றன. இதனால் மக்கள் தமது அன்றாட தேவைகளுக்கான நீரைப்பெற அலைந்து திரிகின்றனர்.

அத்துடன் இவ்வாய்க்கால் ஊடாக வரும் நீரினாலேயே இராமநாதபுரம் பகுதியில் உள்ள இரட்டைப்பனைக்குளம், பிள்ளையார்குளம் என்பனவும் பெரிய குளமும் நீர் நிறைகின்றன. இவ்வாய்க்காலில் நீர் வராமையால் இக்குளங்களும் வரண்டு காணப்படுகின்றன. இதனால் கால்நடைகளும் நீரின்றி அலைந்து திரிகின்றன. கல்மடுக்குளமும் இன்னும் புனரமைப்புச் செய்யப்படாமையால் அக்குளத்திலும் நீரில்லாததால் கல்மடுநகர், பத்து ஏக்கர், கட்டைக்காடு, தருமபுரம் பகுதிகளும் நீரின்றி உள்ளன. இதனால் இப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாரது கண்ணிலும் படுவதாகத் தெரியவில்லை.

இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர் கொண்டு செல்வது பற்றிப் பேசுவோர் ஏன் அருகில் உள்ள இக் கிராமங்கள் நீரின்றி வரண்டு கிடப்பது பற்றி எதுவும் பேசுகின்றார்கள் இல்லை எனப் பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே இக்குளத்தின் நீர் முகாமைத்துவத்துக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் இவ் வாய்க்கால்களூடாக ஒரு சில நாள்களேனும் அதிகளவு நீரினைத் திறந்து விடுவதனூடாகவும், வாய்க்கால்களை உரிய முறைப்படி புனரமைப்பதன் ஊடாகவும் இப்பிரதேச வரட்சியைப் போக்க நடவடிக்கை எடுப்பார்களா? என பிரதேச மக்கள் கேட்கின்றனர்.

இவ்வாறான அசமந்தப் போக்குத் தொடருமானால் எதிர்வரும் காலபோக நெற் செய்கையினையும் இப்பிரதேச விவசாயிகள் மேற்கொள்ள முடியாத அவலநிலை தோன்றும். எனவே துன்பப்பட்டு , துயரப்பட்டு ஏதிலிகளாக மீள் குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும் என அவர்கள் கோருகின்றனர்.

(த-405)

# 45 ஆண்டுகளுக்குப் பின்னர் மன்னார் நெடுங்குளம் புனரமைப்பு

மன்னார்,ஓக.11

மன்னார் மூர் வீதி மக்களுக்குச் சொந்தமான 'நெடுங்குளம்' சுமார் 45 ஆண்டுகளுக்குப் பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்டது. ஊர் மக்களது ஒத்துழைப்புடன் மன்னார் கடற்படையினர் இந்த வேலைத் திட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு காலத்தில் வருட முழுவதும் வற்றாத குளமாக நகரில் நெடுங்குளம் விளங்கியது. குளத்தைச் சுற்றி அடர்ந்து வளர்ந்திருந்த 'பூவரசு' மரச் சோலையினால் என்றும் குளிர்மையாக இக்குளம் காணப்பட்டது. மிகவும் நீளமானதாகவும் ஆழமானதாகவும் காணப்பட்ட இக் குளத்தில் முதலைகள் கூட வாழ்ந்துவந்தன. மன்னார் நகர மக்களின் சகல தேவைகளுக்குமாக இக்குளம் விளங்கியது.

1964 இல் மன்னாரில் ஏற்பட்ட கொடிய சூறாவளியின் விளைவாக இக்குளம் கடல் நீரால் சூழப்பட்டுப் பல வருடங்கள் கடல் நீர் வெளியேறாமல் உப்பு நீராக மாறியது. அதன்பின் இக்குளம் பராமரிப்பின்றிப் பாழ்பட்டது.

தற்போது மக்கள் தேவை கருதி இக் குளம் புனரமைக்கப்பட்டது. எதிர்வரும் பருவமழை காலத்தில் போதிய மழை பெய்தால் நெடுங்குளம் நீர் நிரம்பி மக்கள் பாவனைக்குத் தயாராகிவிடும்.

(த-80)

# மடுமாதா ஆலயப் பெருவிழாவுக்கு பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள்

மன்னார்,ஓக.11

புனித பகுதி மடுமாதா உற்சவத்துக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து ஏராளமான பக்தர்கள் வருகை தந்த வண்ணமுள்ளனர். ஆலய உற்சவம் ஆரம்பமாகி இந்த ஐந்து தினங்களிலும் சுமார் 35 ஆயிரம் பக்தர்கள் வரையில் மடு அன்னையைத் தரிசிக்க வந்துசென்றுள்ளனர்.

இவர்களில் சுமார் 15 ஆயிரம் பேர் வரையில் ஆலயவளாகத்தில் தங்கியுள்ளனர். திட்டமிட்டபடி திருவிழா இம்மாதம் 15 ஆம் திகதி காலை திருப்பலியுடனும் திருச்சொரூபப் பவனியுடனும் முடிவடையும் என ஆலயப் பரிபாலகர் அறிவித்துள்ளார்.

இதற்கென சகல ரயில் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதன்படி கொழும்பு, களுத்துறை, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் இருந்து மதவாச்சி வரையிலான சேவைகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

இம்மாதம் 13ஆம் 14 ஆம் திகதிகளில் கொழும்பிலிருந்து காலை 7.45 மணிக்குப் புறப்படும் ரயில் மதவாச்சியிலிருந்து அன்று பகல் 1.45 மணிக்குத் திரும்பும் எனவும் மற்றைய சேவைகள் இதனுடன் இணைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-80)

# தென்னங்கன்றுகள் விநியோகம்

கிளிநொச்சி,ஓக.11

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் மீள்குடியேறிய குடும்பங்களில் 100 குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

கண்டாவளைப் பிரதேச செயலரின் ஏற்பாட்டில் கடந்த வாரம் இந்த தென்னங்கன்றுகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. தொடர்ந்து ஏனைய குடும்பங்களுக்கும் இத் தென்னங்கன்றுகள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-405)

# தருமபுரத்தில் இலவச மருத்துவ முகாம்

கிளிநொச்சி,ஓக.11

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் கிராமத்தில் கடந்த முதலாம் திகதி இலவச மருத்துவமுகாம் ஒன்று நடைபெற்றது.

தருமபுரம் மகாவித்தியாலயத்தில் மு.ப. 8.30 மணிக்கு ஆரம்பமான இம் மருத்துவ முகாம் இராணுவத்தினரின் மருத்துவக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. இதில் குழந்தைகளும், கர்ப்பிணித் தாய்மார்களுக்குமான விசேட மருத்துவ சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

இம் மருத்துவ முகாமில் மக்கள் பலர் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றுச் சென்றதைக் காண முடிந்தது.




# அறநெறிப் பாடசாலைக்கு தளபாடங்கள் வழங்கல்

கிளிநொச்சி,ஓக.11

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சம்புக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலைக்குத் தளபாடங்கள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இத் தளபாடங்கள் வழங்கப் படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

(த-405)

# கோழி வளர்ப்புக்கு பயனாளிகள் தெரிவு

கிளிநொச்சி,ஓக.11

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் கோழி வளர்ப்புக்கான 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு முதற்கட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக இவர்களுக்குக் கோழிக் கூடுகள் அமைப்பதற்கான நெற்றும், கோழித்தீவனமும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வார இறுதிக்குள் இவர்களுக்கான கோழிக்குஞ்சுகள் வழங்கப்படவுள்ளன.

மக்கள் மீள் குடியேறியுள்ள நிலையில் இவ்வாறான சுயதொழில்களுக்கான உதவிகளை வழங்குவது பயனுடையதாக அமையும் என்வும், இதனை விஸ்தரித்து அனைவரும் பெற வழி ஏற்படுத்த வேண்டும் எனவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

(த-405)

# மன்னாரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மந்தகதியில்

## எனினும் பெருந்தொகைப் பணம் செலவாகிறது

மன்னார்,ஓக.11

மன்னாரில் டெங்கு ஒழிப்புத் திட்டம் பொது மக்களின் போதிய ஆதரவு இன்மையால் மந்தகதியிலேயே நடைபெறுவதாக நலன்விரும்பிகள் கவலையடைந்துள்ளனர்.

இது பற்றி நலன்விரும்பி ஒருவர் கூறுகையில்;

அழகிய 'டிஜிற்றல்' பதாகைகளாலும் துண்டுப் பிரசுரங்களாலும் ஒலிபெருக்கிப் பிரசாரங்களினாலும் டெங்கு ஒழிப்புக் கருத்தரங்குகளினாலும் டெங்கை ஒழிக்க முடியாது. மாறாக ஒவ்வொரு பொது மகனும் வீட்டுரிமையாளரும், அரச ஊழியரும் உணர்ந்து செயற்பட்டாலே இதனை ஒழிக்க முடியும் என்றார்.

மன்னாரில் டெங்கை ஒழிக்க மாதம் ஒன்றிற்கு சுமார் 70 லட்சம் ரூபாய்கள் செலவாவதாக அறிவிக்கப்பட்டுள்ள போதும் இதில் எவ்வளவு தரகுப் பணம் பெறப்படுகின்றது என்பதை நாம் ஆராய வேண்டும்.

அதேவேளை டெங்கை வைத்துப் பலரும் பணம் வரி மாற்றம் செய்வதையும் கண்டுபிடிக்க வேண்டும். இவைகள் அனைத்தும் திட்டமிட்டபடி நடை பெற்றால் இந்த ஆட்கொல்லி டெங்கை விரைவில் அழித்து விடமுடியும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

(த-80)

# நல்மனம் படைத்தோரின் நல்ல முயற்சி; பூநகரியில் பூத்தது ஒரு கல்விக் கூடம்

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பூநகரிப் பிரதேசம் நெய்தலும், மருதமும் இணைந்த வனப்பு மிக்க பிரதேசமாகும். மொட்டைக் கறுப்பன் அரிசி என்றால் இன்றும் எல்லோரது கவனமும் பூநகரியை நோக்கித் திரும்பும். கல்வியறிவில் உச்சம் பெறாவிடினும் கூடப் புகழ்பூத்த கல்விமான்கள் பலரை உருவாக்கியதும் இந்த மண்தான். வடமாகாண ஆளுநரின் பிரதம பிரதிச் செயலாளராகப் பணியாற்றும் தி.இராஜநாயகம், பௌதீகத்துறைப் பேராசிரியர் எஸ்.கந்தசாமி, முன்னைநாள் பட்டப்படிப்புகள் பீடாதிபதி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரதியதிபராகக் கடமை புரிந்து தற்போது ஓய்வு பெற்ற பொ.ஸ்ரீஸ்கந்தராஜா, யாழ்.கல்விவலய ஆசிரிய ஆலோசகர் கா.குலசேகரம் என அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனால் நடந்து முடிந்த கோர யுத்தம் பூநகரிப் பிரதேசத்தை ஏனைய பகுதிகளிலிருந்து 10 அல்லது 20 வருடங்கள் பின்னோக்கித் தள்ளியுள்ளது. பொருளாதாரத்திலே முன்னேறிவிடவேண்டும் என்ற எண்ண[illegible] எதிர்வரும் [illegible] பயிர்ச் செய்கையுடன் மறுபடியும் நெல்லும், கரும்பும் விளைவிக்க வேண்டும் என்ற ஊக்கமும் இம் மக்களிடமும் காணப்படுகின்றது.

இது எந்தளவுக்குச் சாத்தியப்படுமோ தெரியாது. ஆனால் கந்தபுராண கலாச்சார காலம் முதல் இம்மக்கள் பேணி வந்த கல்வி சீரழிந்து கொண்டிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்நிலையிலிருந்து இம்மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆசையுடன் புலம்பெயர் மக்கள் இம் மண்ணுக்கு வந்து ஆற்றிய சேவைகள் பாராட்டப்பட வேண்டியவையேயாகும். அவ்வாறு பணி புரிவதற்காகத் திரு.திருமதி இராசலிங்கம் புவனேஸ்வரி தம்பதியர் அண்மையில் சின்னத்தம்பி கல்விக் கூடம் எனும் கல்வி நிறுவனம் அமைத்து அதன் ஆரம்ப விழாவையும் அமர்க்களமாகச் செய்து முடித்துள்ளார்கள். சமூகசேவகியான திருமதி சி.புவனேஸ்வரி (வசந்தி) இதற்காகத் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து ஓரிரு மாதங்கள் பாடுபட்டு நிறுவனத்தை உருவாக்கி இம் மக்களது கல்வி வளர்ச்சிக்குக் களம் அமைத்துக் கொடுத்துவிட்டு மறுபடியும் ஜேர்மனிக்குச் சென்றுள்ளார். தற்போது திறம்படக் கற்றல், கற்பித்தல் பணிகள் நடைபெற்றுவரும் இந்நிறுவனத்தில் மாணவர்கள் இலவசமாகக் கற்கின்றனர். எனினும் ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்காகப் புலம் பெயர் மக்களின் உதவியுடன் சமூக சேவகி வசந்தி ஓர் நிதியத்தையும் ஏற்படுத்தியுள்ளார். இதன் மூலம் படித்த பலரது வேலையில்லாப் பிரச்சினையும் ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் தொடக்க விழாவுக்கு வடமாகாண ஆளுநரின் பிரதம பிரதிச் செயலாளர் தி. இராஜநாயகம் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக பொலிஸ் அத்தியட்சகர் தொரதெனிய, இராணுவ அதிகாரி புத்திக ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கல்விப் பணி சிறக்கக் கட்டப்பட்ட சின்னத்தம்பி கல்விக் கூடம். சின்னத் தம்பிகளுக்கும், தங்கைகளுக்கும் அறிவுக்குத் தீனியூட்டும் அன்னையாக விளங்கும் என நம்பலாம்.

*நாக. தமிழிந்திரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 29.07.1929 உதிர்வு 12.07.2010

### திருமதி செல்லையா அன்னபூரணம்

பாசமிகு அம்மாவே உம்
பாசமலர்களைப் பிரிந்ததேனோ?
இறைபதம் அடைந்த
அன்பு அம்மாவின் வீட்டுக்கிருத்திய
நிகழ்வுகள் இன்று (11.08.2010)
புதன்கிழமை அன்னாரின்
இல்லத்தில் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
நேசமிகு உறவுகளைக் கலந்துகொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

"கமலகிரி",
சங்குவேலி, மானிப்பாய். (110814)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி அ.இந்துமதி — திருமதி கி.சிவகெங்கா

| | | |
|---|---|---|
| 05.05.1968 | தோற்றம் | 11.04.1950 |
| 25.07.1998 | மறைவு | 25.07.1998 |

திதி:- (11.08.2010)

நீருக்குள் நீராக நீர் சென்று ஈராறு ஆண்டுகள் இன்றோடு ஆனதம்மா
பாருக்குள் உம்மைப் போல் யாரெமக்கு உள்ளனரோ
கார்கொண்ட மேகம்போல் கண்ணீராலே நனைகின்றோம்
காலமெலாம் உம்நினைவோடு ஞானமதில் வாழ்ந்திடுவோம்.

தங்கள் பிரிவால் துயர் மூழ்கும்
ஆ.கி.அருணகிரிராசாவும்
குடும்பத்தினரும்.

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (101689)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 05.11.1941
உதிர்வு: 10.08.2002

### அமரர் செல்லையா வேலாயுதபிள்ளை

(ஓய்வுபெற்ற F.A., உதவி அரச அதிபர் பணிமனை- சாவகச்சேரி)

திதி: 11.08.2010 பூர்வபக்கத் துதிகை

விழிகசிந்து நாமிருக்க விண் நோக்கிச் சென்றதேனோ அப்பா?
பதை பதைத்து நாம் கதற பார்க்காமலே போனதேனோ?
ஆறுமோ எம் மனம்? உங்கள் ஆறாத நினைவில் நின்று
பிரார்த்திக்கின்றோம் நாங்கள்
உங்களது ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம். (101818)

வைத்தியசாலை வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கிறீஸ்துதாஸ் யோகராஜா



C.P.M. லேன், நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாவும் கொழும்பு மட்டக்குளியை வதிவிடமாகவும் கொண்ட கிறீஸ்துதாஸ் யோகராஜா 07.08.2010 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறீஸ்துதாஸ்-இராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், புத்திரிபாயின் அன்புக் கணவரும் ரமேஸ் (U.K), சுவீற்றி (டென்மார்க்), சுரேஸ் (இத்தாலி) மற்றும் பிரகாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயரஜனி, றொபேட் டானியல், சர்மினி ஆகியோரின் அன்புமிகு மாமனாரும் ஏஞ்சலி சுவேத்தா, அல்வின் கிஷோன், மோனிஷா, சரோனா மிசேல் மெலிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் தேவரத்தினம், ஜெயசிங்கம் காலஞ்சென்ற ஜீவவதனா மற்றும் தேவவதனா ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (12.08.2010) வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் மட்டக்குளியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதம்பிட்டிய கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27/8.A,Sri Kalyani Ganga Rama
Mawatha Mattakuliya
Colombo-15. 0113134292

தகவல்:
கி.தேவரத்தினம் (சகோதரர்)
, பாடசாலை வீதி,
சங்கரத்தை , வட்டுக்கோட்டை



## புறொயிலர் விற்பனைக்கு

உடன் சுத்தம் செய்யப்படும் புறொயிலர் கிலோ 480/= மட்டும். திங்கள், புதன், சனி, ஞாயிறு பகல் 1மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
குமரன் பாம்,227, பிறவுண் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

## வேலையாள் தேவை

பகல், இரவு வேலை செய்வதற்கு உதவியாளர்கள் (Room boys) தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

முகாமையாளர்.
Kumaran Tourist Inn
No.67, Stanley Road, Jaffna.
T.P: 0212224531
(101827)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.11

கொக்குவில் கிழக்கு, பொற்பதி அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும், 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும், 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.11

மண்கும்பான் முத்துமாரியம்மன் ஆலயத்தில் ருதுசோபன விழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் முற்பகல் 10 மணிக்கு அபிஷேகம், விசேட பூசை என்பன நடைபெறும்.

## செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஆன்மீக நிகழ்வுகள்

வடமராட்சி,ஓக.11

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கொடியேற்ற தினமான நேற்று செவ்வாய்க்கிழமை முதல் விசேட ஆன்மீக நிகழ்வுகள்நடைபெற்று வருகின்றன.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வு 12ஆம் திருவிழாவான எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை வரை இடம்பெறும்.

ஆன்மீக நிகழ்வுத் தொடரில் இன்று 11ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ''அடியார் பூசையும் அரன்பூசை நேசமும்'' என்னும் தலைப்பில் சைவப் புலவர் ஆசிரியர் ஏ.அனுஷாந்தனும், நாளை 12ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ''பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' என்னும் தலைப்பில் சைவப் புலவர் ஆசிரிய ஆலோசகர் செ.கந்தசத்தியதாசனும் நாளை மறுதினம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ''நலம் தரும் நம்பிக்கை'' என்ற தலைப்பில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் கீழ்கரவை நவரத்தினமும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள். (த-236)

### குமார் பொன்னம்பலத்தின் நினைவு நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஓக.11

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவு நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (த-204)

### வரலக்ஷ்மி விரத நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.11

அகிலஇலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீட மாதரணியினர் நடத்தும் வரலக்ஷ்மி விரத நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை கொழும்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (த)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 28.04.1947

உதிர்வு: 27.07.2006

திதி: 11.08.2010

### அமரர் கந்தையா சித்திரவடிவேல் (நடனி)

(சுப்பர்மடம், பருத்தித்துறை)

நாலாண்டு சென்றாலும் தீராது
உங்கள் நினைவுகள்
சித்திரம் என்ற சொல்லுக்கு -தீராது
உங்கள் கனவுகள்
இலட்சியம் நிறைவேற -நீர்
எமக்கு இலக்கணமானீர்கள்

தற்காலிக முகவரி:
சுப்பர்மடம்
பருத்தித்துறை. (சி/569767)

அமிர்தலிங்கம்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவு



மண்ணில் 1914.01.02 மனங்களில் 2010.07.11

### அமரர் கதிரன் கணபதி

(சின்னக்கண்டு-அப்பா பிரபல மிருக வைத்தியர்)

முகம் தந்தீர் முகவரி தந்தீர்
நிகரிலா மிருக வைத்திய சேவையால்
குறைவிலா புண்ணியங்கள் பலதேடி
அளவிலா ஆனந்த வாழ்வு நாம்காண
நிறைவான முதுசங்கள் தேடித் தந்தீர்
வாழும் காலங்கள் யாவும்
நீளும் நினைவுகள் எம்முடன்........ (சி/569749)

நவபுரம், கைதடி. குடும்பத்தினர்.

## பிறந்த நாள் நினைவு

தாய்க்கு அவமகளானது
11.8.1956



தாய்மையை நாம் இழந்தது
17.11.2009

### திருமதி இராசமலர் தணிகாசலபதி

| | |
|---|---|
| நாம் உணவருந்தப் பிந்தினால் | நீ பதைபதைத்தாய் |
| நாம் நோயால் தவித்தால் | நீ பத்தியம் காத்தாய் |
| நாம் மனச்சோர்வு கண்டால் | நீ விதிர்விதிர்த்தாய் |
| நாம் கல்வியில் மேன்மை காண ஆன மட்டும் | நீ ஊக்குவித்தாய் |
| நாம் செழிப்புடன் வாழ்வதற்கு தேவையானதை | நீ பூர்த்தி செய்தாய் |
| நாம் சபைதனிலே நிமிர்ந்து நிற்க நல்லதெல்லாம் | நீ போதித்தாய் |
| நாம் பெற்ற நன்மை பாராது விட்டு ஏன் நீ பிரிந்தாய் | நீ பிரிந்தாய் |
| நாம் உன்னை மட்டுமே இறுதிவரை மறவாதிருக்க | நீ வைத்தாய் |

தாய்க்கு மகளாகி 54 வருடங்கள்
தாயைவிட்டுத் தாரமாகி 32 வருடங்கள்
தாயாகி எம்மை பெற்று 30 வருடங்கள்
தாய்மையை நாம் இழந்து 09 மாதங்கள்

தாய்மைக்கு இராசமலர்

மாரிசிட்டி, அளவெட்டி (101801)

அப்பாவுடன் சேர்ந்து,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் வீட்டுப் பிள்ளை



குழந்தைகளைக் கொஞ்சி வளர்க்க வேண்டும். அதே சமயத்தில் செல்லம் கொடுத்து குட்டிச் சுவராக்கக் கூடாது என்று ஒரு வார்த்தை உண்டு. குழந்தையின் மீது அன்பு காட்டுவது ரொம்ப முக்கியம். அதேசமயம் கண்டிப்பாகவும் இருக்க வேண்டும்.

பள்ளிக்கூடம் முடிந்து பையன் வீட்டிற்கு வந்து கொண்டிருக்கிறான் வரும் வழியில் மழை வந்து விடுகிறது. உடனே அந்தப் பையன் தன்னுடைய கணக்கு நோட்டை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு நனையாமல் வீட்டிற்கு வந்தவுடன் அவனுடைய அப்பா உட்கார்ந்திருக்கிறார். பையன் கணக்கு நோட்டைத் தலையில் வைத்துக்கொண்டு வருவதைப் பார்த்து விட்டு மகனை அடிக்கிறார். மழை நின்றபின் வரக்கூடாதா என்று அடிக்கிறார்.

அம்மா சமையலறையில் இருக்கிறார். பையன் அப்பா அடித்தவுடன் அழுது கொண்டு அம்மாவிடம் செல்கிறான். மழையாக இருந்ததே எப்படி வந்தாய் மற்ற நோட்டுக்களாலும் கைகளை மறைத்துக் கொண்டு வந்திருந்தால் கைகளும் நனையாமல் வந்திருக்கலாமே என்றார். இது தான் அம்மா அன்பு வழியாகவும் அப்பா அறிவு வழியாகவும் சிந்திக்கும் மனோபாவம்.

கனடாவில் ஒரு பையனை அப்பா அடித்து விட்டார். அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து அங்கு சென்றிருந்தனர். உடனே அப்பாவைப் பற்றி புகார் பண்ணி பத்து வருடம் சிறையில் தள்ளிவிட்டான்.

குழந்தைகளுக்கு வாழ்க்கையைப் புரிய வைக்க வேண்டும். பணத்தின் அருமையைப் புரிய வைக்க வேண்டும். இதை விடுத்து கண் மூடித்தனமாக பிள்ளைகள் மீது பாசம் வைப்பது என்பது அவர்களது எதிர்காலத்தைத்தான் பாதிக்கும்.

துரியோதனன் சூதாட்டத்திற்குத் தர்மனை அழைத்தான். தர்மன் வந்தால் உன்னைக் கொன்று விடுவான் என்று எவ்வளவோ எடுத்துச் சொல்கிறார். திருதராஸ்ஷிரன் உடனே துரியோதனன் அப்பாவிடம் நீ சொல்லவில்லையென்றால் தூக்குப் போட்டுச் செத்து விடுவேன் என்றான். உடனே அவர் பயந்து தனது முடிவை மாற்றிக் கொண்டார். அதனால் என்ன ஆனது வாழ்க்கையே பெரிய துன்பத்திற்கு உள்ளாகி துரியோதனன் உட்பட எல்லோரும் கஷ்டப்பட்டார்கள்.

சுகி.சிவம்.

# விதியோடு ஒரு விளையாட்டு

''விதியோடு வெல்லமுடியுமா?'' ஒரு பெரியவரைப் பார்த்து இப்படி ஒரு கேள்வியை ஒருவன் கேட்டான். இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். அதுக்கு முன்னாடி ஒரு கதை சொல்கிறேன் கேளு என்றார். அவரும் கதை சொல்ல ஆரம்பித்தார். இதே மாதிரி ஒரு கேள்வியை ஒரு சோதிடனைப் பார்த்துக் கேட்டானாம் ஒருத்தன். ''விதியை வெல்வது கஷ்டம் என்றார் அவர். அதற்கு நான் ஜெயிச்சுக் காட்டுறேன் பாருங்க'' என்று சவால் விட்டான். அந்தச் சோதிடர் மனசுக்குள்ளே ஏதோ கணக்குப் போட்ட பின் சொன்னார்.

இதோ பாரு உன் விதிப்படி நாளை பாற்பாயாசம் சாப்பிட வேண்டும். அந்த விதியை உன்னால் வெல்ல முடியுமா? மனசு வைத்தால் முடியும். நாளைக்குப் பாருங்க விதியை ஜெயிச்சுட்டு அதுக்கப்புறம் உங்களை வந்து சந்திக்கிறேன் என்று சொல்லி எழுந்து சென்றான்.

மறு நாள் காலையிலே எழுந்து வீட்டில் இருந்தாத்தானே எதையும் சாப்பிட வேண்டும் பேசாம புறப்பட்டுக் காட்டுக்குப் போய் உட்கார்ந்து பிறகு வருவோம் என முடிவு பண்ணினான். அதே மாதிரி காட்டுக்குப் போய் மிருகங்களுக்குப் பயத்திலே ஒரு மரத்திலே ஏறி உட்கார்ந்தான். அந்தச் சமயத்திலே திடீரென ஒரு சுற்றுலாப் பிரயாணிகள் வந்து ஒரு அடுப்பை உண்டாக்கி சமைக்க ஆரம்பித்தனர். ஒரு கட்டத்திலே எட்டிப் பார்த்தால் அவங்க பால்ப்பாயசம் தயார் பண்ணினாங்க. அந்த சமயத்திலே ஒரு கொள்ளைக் கூட்டம் அந்தப் பக்கமாக வர எல்லோரும் அப்படியே விட்டு விட்டு காரில் ஏறி ஓடிவிட்டார்கள். திருடர்களுக்கு வசதியாய்ப் போனது. நமக்காக ஏதோ சமைத்து வைத்து விட்டுப் போயிருங்காங்க. வாங்கடா போய்ச் சாப்பிடுவம் என்று கூறி சுற்றி அமர்ந்தார்கள்.

அதில் ஒருத்தன் இதில் ஏதேனும் நஞ்சு கலந்து விட்டுப் போனால் எதுக்கும் ஜாக்கிரதை. இப்ப என்ன செய்யலாம் காக்கா, குருவிக்கு கொடுத்து விட்டுச் சாப்பிடலாம். காக்கா குருவி ஏதேனும் மரத்தில் இருக்கிறதா பார். அதோ ஒரு ஆள் மரத்திலே உட்கார்ந்து இருக்கிறான். அவனைப் பிடித்து வாங்கடா? கொண்டு வந்த உடனே இந்தப் பாயசத்தை முதலிலே நீ உண் என்றார்கள். முடியாது என்றான். ஏன்? ''நான் அதை சாப்பிட்டா.... விதி என்னை ஜெயிச்சுடும்!''

சந்தேகம் அதிகரிக்க ஒருத்தன் கையைப் பிடிக்க இன்னொருவன் காலைப் பிடிக்க ஒருவன் வலுக்கட்டாயமாக அவன் வாயைத் திறக்க அடுத்தவன் பாயசத்தை வாயில் ஊற்றினான். அவனும் வேறு வழியில்லாமல் பாயசத்தை உண்டு விட்டு பரிதாபமாக அவர்களைப் பார்த்தான். கொள்ளையர்களுக்கு ஆச்சரியம். உனக்கு ஒன்றும் ஆகவில்லையா? ஒன்றும் ஆகாது இதில் நஞ்சு கலக்கவில்லை. விதியை வெல்ல சோதிடரிடம் சபதம் போட்டேன். என்று நடந்ததைச் சொன்னான். இது ஒரு வேடிக்கைக் கதை. இந்தக் கதையை பெரியவர் சொல்லி முடித்தார்.

அப்படின்னா விதியை வெல்ல முடியாதுங்களா? என்றான் கேள்வி கேட்டவன். பெரியவர் சொன்னார். அப்படி இல்லை சில சமயம் விதியை மதி வென்று விடுகிறது! இது தான் யதார்த்தமான உண்மை. ஆகவே மனிதன் விழிப்போடு இருக்க வேண்டும் சந்தர்ப்பங்களைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் வெற்றியின் ரகசியம் அங்கே தான் இருக்கிறது!

கோ.சுவாமிநாதன்.

# பொன் மொழிகள்

★ பிறரிடமிருந்து எதையாவது எதிர்பார்க்கிற வன் என்றைக்குமே ஏழை. கொடுக்கும் மனமே செல்வந் தரின் அடையாளம்.

-ஓஷோ-

★ அழுவதற்கு உனக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கின்றன. என்றாலும் சிரிப்பதற்கு லட்சம் கார ணங்கள் இருக்கின்றன. புரிந்து கொள்.

-அறிஞன்-

★ வாழ வேண்டும் என்கிற வெறியில் இன்னொரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு சைக்கி ளில் வர உங்களுக்குத் துணிச்சல் உண்டா?

-எஸ்.எஸ்.வாசன்-

★ முடியாது என்பது மூடத்தனம். முடியும் என் பதே மூலதனம்.

★ 'பிச்சை எடுப்போரை இறைவன் விரும்ப வில்லை. நம் முயற்சிக்குத் தக்க பலனை இறை வன் அருளுகிறான் என்பதை மறந்து விடாதே'.

-நபிகள் நாயகம்-

★ 'பிறகு படித்துக் கொள்ளலாம்... அப்புறம் வேலை பார்க்கலாம். கடைசியாக செய்து விடலாம்' என்று பேசுகிறவர்கள்... நினைக்கிறவர்கள்... சுயதுரோகி கள்.. சொந்த விரோதிகள்.

-உங்களில் ஒருவன்-

★ சம்பாதிப்பதால் மட்டுமே பணக்காரன் ஆகிவிட முடியாது. சேமித்து வைப்பதே முக்கி யம்.

-கன்பூஷியஸ்-

★ உயர்திணை மனிதரை அஃறிணை போல நடத்தும் கொடியவர்கள் மனிதரே அல்லர். உயர் திணை விலங்குகள் அஃறிணை பொருள்களை யும் உயர்திணை உணர்வுடன் கௌரவித்தலே வளரும் வழி. உயரும் நெறி.

-ஓர் அறிஞன்-

★ கால் இருந்தும் நடக்காதவர்கள், கண் ணிருந்தும் படிக்காதவர்கள், உடல் இருந்தும் உழைக்காதவர்கள், கையிருந்தும் ஈயா தவர்கள், மனம் இருந்தும் இரங்காதவர்கள், மூளை இருந் தும் பயன்படுத்தாதவர்கள் இவர்களது ஊனமே ஊனம்.

-லால்பகதூர் சாஸ்திரி-

★ யோசிக்கவும் வேண்டும். செயலில் இறங் கவும் வேண்டும். இப்படி இரண்டு எதிர்எதிரான குதிரைகளை ஒரே வண்டியில் பூட்டும் அதிசய ஆற்றல் இருந்தால் தான் வாழ்க்கை வசப்படும்.

-அப்துல்கலாம்-

தொகுப்பு: பு.தட்சிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

## ஆடிப்பூர அன்னதானம்

அம்பிகை அடியார்களே!

நாளை (12.08.2010) வியாழக்கிழமை நடைபெற இருக்கும் ஆடிப்பூர விழாவை முன்னிட்டு அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களுக்கு வழமைபோல் எமது சபையில் அன்னதானம் வழங்குவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். எனவே, அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்கள் தங்கள் தரிசனத்தை முடித்து அன்னதான சபைக்கு வருகைதந்து அன்னதானத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நிர்வாகம், அமுதசுரபி அன்னதான சபை.



# ஊழியர் சேமலாப நிதிச் செயற்பாடுகள் இலங்கையை எதிர் விளைவுகளுக்குள் தள்ளிவிடும்

### ஐ.தே.க.எம்.பியும், பொருளியல் நிபுணருமாகிய ஹர்ஷா டி சில்வா

கொழும்பு,ஓக.11

ஊழியர் சேமலாப நிதியை கொழும்புப் பங்குச் சந்தையிலும், ஏனைய முதலீடுகளிலும் ஈடுபடுத்துவது இலங்கையைப் பாரிய எதிர் விளை வுகளுக் குள் தள்ளி விடும் - இவ்வாறு எச்சரிக்கை விடுத் திருக்கின்றார் ஐ. தே.க.எம்.பி.யும், பொருளியல் நிபுண ருமாகிய கலாநிதி ஹர்ஷா டி சில்வா.

சில நிறுவனங் களின் பங்கு விலைகள் மோசமான சரிவைச் சந்தித்திருந்த நிலையில் அவை சடுதியாக 300 வீதம் வரையான உயர்வைக் காட்டுகின்றன. இதற்குச் சட்டத்துக்குப் புறம்பான முதலீடுகளே காரணமாகும். மேலும் அரசாங்கம் அறிமுகப் படுத்தியுள்ள 10 வீத அளவென்பது சிறிய முதலீட்டாளர்கள் தமது பங்குகளை விற்றுவிட்டு பங் குச் சந்தையை விட் டகல்வதற்கு வழி கோலும்.

கொழும்பு பங் குச் சந்தை மற்றொரு சூதாட்ட இடமாக மாறியுள்ளது என்று கூறிய அவர் இன்னு மொரு அதிர்ச்சித் தகவலையும் வெளி யிட்டார். மத்திய வங்கியின் கட்டுப் பாட்டினுள்ள ஊழி யர் சேமலாப நிதியானது இந்த வங்கியின் வழிகாட்டுதல் களை உதாசீனம் செய்த பல தனியார் வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு தவறான செயலாகுமென்றும் அவர் மேலும் கூறினார். (க)


## Patrician Institute

ஆரம்பம் - 12.08.2010

எமது நிறுவனத்தில் விடுமுறைக்கால பயிற்சியாக மாணவர்களின் நன்மைகருதி G.Tec நிறுவனத்தின் ஆதரவுடன் M.S.Office & Internet & E-Mail - 1600/= மிகவும் குறைந்த கட்டணத்தில் காலம் 1 மாதத்தில் கற்பிக்கப் படுகின்றது. அத்துடன் எமது ஏனைய பயிற்சிகளும் ஆரம்ப மாகின்றன.

*விவரங்களுக்கு:* பதிவாளர்

61,St.Patricks Rd

Jaffna. T.P. 222 6148 (சி/569771)


## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்- வ.து
## 127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

### களஞ்சிய வேலைகளுக்கு வகுப்பு தொழிலாளர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

★ களஞ்சிய வேலைகளுக்காக பொருத்தமான வகுப்பு தொழிலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

★ வேலை செய்யும் நாள் ஒன்றுக்கு மொத்தச் சம்பளமாக ரூபா 400/= வழங்கப்படும்.

★ தகுதியான விண்ணப்பத்தாரிகள் (2010-08- 11 ஆம் திகதி புதன்கிழமை) இன்று மு.ப. 10 மணிக்கு நேரில் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்திற்குச் சமுகமளிக் குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

★ தெரிவு செய்யப்படும் வகுப்புத் தொழிலாளர்கள் அண்மையில் பெற்ற 2 நற்சான்றிதழ் பத்திரம் மற் றும் கிராம சேவையாளரின் வதிவிடச் சான்றிதழ் என்பனவற்றை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

க.தேவேந்திரன்,
தலைவர்.

*11.08.2010*





சீட்டிழுப்பு இலக்கம் 671 திகதி 09-08-2010

வெற்றி எண்கள்

07 21 33 42 V (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 30,768,010/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 30,768,010/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 2,000/= | 28,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 414 | 1,000/= | 414,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 722 | 1,000/= | 722,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 17156 | 60/= | 1,029,360/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8186 | 40/= | 327,440/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 202677 | 20/= | 4,053,540/= |
| | | மொத்தம் | ரூ. 7,374,340/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 600278753-8-08 |
| கொழும்பு | 600274428-8-28 |
| மாத்தறை | 600261550-6-06 |
| மாத்தளை | 600263245-3-03 |
| மட்டக்களப்பு | 600270313-2-02 |
| நுவரேலியா | 600265423-7-07 |
| யாழ்ப்பாணம் | 600263180-4-14 |
| இரத்தினபுரி | 600263027-8-18 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,774,340/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 31,316,920/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2010 ஒகஸ்ட் 12 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 2333546/7


## டெங்கு கட்டுப்பாட்டு கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஓக.11

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு பிரதேச மட்ட டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நல்லூர் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.


இக்கூட்டத்தில் சுகாதார திணைக்களம், கல்வித்திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், பிரதேசசபை, மாநகர சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் கலந்து கொள்வார்கள். (த-310-313)


## German Swiss மொழி வகுப்புகள்

தமிழ்மொழி பெயர்ப்புடன் A1 புத்தகம் மற்றும் CD விளக்கத் துடனும் நடைபெறுகின்றது.

தொடர்புகளுக்கு:
**German Institute,**
*10 Palaly road, Jaffna.
T.P. 077 6089823
Kajenthini* (1018)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி-நவிலலும்



மலர்வு: 23.04.1947 உதிர்வு: 08.07.2010

### அமரர் வேலாயுதபிள்ளை அம்பிகைபாகன்

கடந்த 08.07.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (11.08.2010) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறி, அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி, பத்திரிகையூடாக அனுதாபச்செய்திகள் அனுப்பியோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மேலும் பல வழிகளில் எமக்கு உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முத்தட்டுலேன்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் இந்துவின் வீரர்கள் அதிரடி; பூப்பந்தாட்ட கிண்ணத்தைக் கைப்பற்றினர்

வலி.வடக்கு,ஒக.11

மானிப்பாய் இந்துக் கல்லூரி 3:1 எனும் செற் கணக்கில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை வெற்றிகொண்டு வடமாகாண பூப்பந்தாட்டச் சம்பியனானது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வீரர்கள் மோதிக்கொண்டனர்.

முதலில் இடம்பெற்ற தனிநபர்களுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜெட் திரோவும் மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சிவனேசனும் மோதிக்கொண்டதில் சிவனே சன் 21.:15 , 21:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றார்.

இரண்டாம் தனிநபர் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த செலாமன் ராஜராமும் மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆஞ்சலினும் மோதிக்கொண்டதில் ஆஞ்சலின் 21:15, 21.19 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது தனிநபர் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஏரனும் மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த றொகானும் மோதிக்கொண்டதில் ஏரன் 21:13, 21:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றார்.

நான்காவது சுற்றில் நடைபெற்ற இரட்டையர் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஏரன் சொலமனும் மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆஞ்சலின் றொசானும் இணைந்து விளையாடியதில் ஆஞ்சலின் றொசான் அணியினர் 21:06, 21:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றனர்.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் நான்கு சுற்றுக்கள் விளையாடியதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 03:01 சுற்று என்ற அடிப்படையில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை வெற்றிபெற்று வடமாகாண சம்பியனாகத் தெரிவானது. (6-86)

## கயிறிழுத்தல் போட்டி: குமரன் வி.க. முதலிடம்

கைதடி,ஒக11

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் நடத்திய கயிறிழுத்தல் போட்டியில் கைதடி மேற்கு குமரன் விளையாட்டுக் கழகம் முதலிடத்தைப் பெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் கைதடி முச்சக்கரவண்டிச் சங்கத்தை எதிர்கொண்ட குமரன் விளையாட்டுக் கழகம் 2:0 எனும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றியைத் தனதாக்கியது. மூன்றாம் இடத்தை கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகம் பெற்றது. (6-288)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக.11


கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கைதடி, நாவற்குழி பிரதேசத்திற்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் 12 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பிற்பகல் 2.30 மணி கைதடி குமரன் (பி) விளையாட்டுக் கழகம் எதிர் கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம்.

மாலை 3.45 மணி கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம் எதிர் நாவற்குழி விக்பூட் விளையாட்டுக் கழகம். (6-23)

* * *

அகில இலங்கை பாடசாலை துடுப்பாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட 17 வயது பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது சுற்றுப் போட்டி ஆட்டம் இன்று புதன்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து கிரண்பாஸ் சென்.ஜோசப் கல்லூரி அணி மோதவுள்ளது. (6-23)




## ஜனாதிபதி தங்கக் கிண்ண கரபந்தாட்டம்; நாளை துரையப்பா அரங்கில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக11

ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான மாபெரும் கரபந்தாட்டப் போட்டி நாளை வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் நடைபெறும் இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ்.பிரதேச செயலகம், கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 40இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொள்கின்றன.

நாளை வியாக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

இந்த நிகழ்வில் இலங்கை கரபந்தாட்ட சம்மேளனத் தலைவரும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் பிரதியமைச்சருமான டிலான் பெரேரா, ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவும் கலந்துகொள்கின்றனர். (6-23)

## படையினர் - பொதுமக்கள் நல்லுறவு 'ருவென்ரி-20' பல்கலைக்கழக அணியை வென்றது பற்றீசியன் வி.க.

யாழ்ப்பாணம், ஒக11

பற்றீஸியன் விளையாட்டுக் கழக அணி 19 ஓட்டங்களால் யாழ்.பல்கலைக் கழக அணியை வெற்றிகொண்டது.

பாதுகாப்புப் படைத் தலைமையகமும் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கமும் இணைந்து நடத்தும் படையினர் - பொது மக்கள் நல்லுறவு வெற்றிக் கிண்ணத்திற்கான 'ருவென்ரி- 20' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் விளையாட்டுக்கழக அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது.

சஜீவன் 35 ஓட்டங்களையும் ரஞ்சித் 23 ஓட்டங்களையும் லோறிற், நவதீசன் தலா 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.பல்கலைக்கழக அணி வீரர்களான ஜெயறூபன் 4 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் ஜனார்த்தனன் 4 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

117 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனக் களம் இறங்கிய பல்கலைக்கழக அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சயந்தன், சஞ்சீவன் ஆகியோர் முறையே 11,13 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பற்றீஸியன் விளையாட்டுக் கழக அணி வீரர்களான லவதீசன் நான்கு ஓவர்கள் பந்துவீசி, 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் முகுந்தன் 4 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் றஞ்சித், 3 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் சுஜீவன் 2.3 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார். (6-23)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாலை புங்கடி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகை ஆலய

# இரதோற்சவ சிறப்பு மலர் - 11.08.2010



### மகோற்சவக் குருக்களின் ஆசிச் செய்தி

சிவபூமி எனப்பட்ட ஈழமணித்திரு நாட்டின் வடபால் பல பிரசித்தி பெற்ற கோயில்களைக் கொண்டு யாழ்.குடா நாட்டில் புண்ணிய பதியும் பழமை வாய்ந்த ஏழு கோயில்களை கொண்டு விளங்குகின்ற ஏழாலையில் புங்கடி பதியில் அடியார்களுக்கு எல்லாம் அன்னையாகவும் புவனங்களுக்கு எல்லாம் தலைவியாகவும் விளங்குகின்ற புவனேஸ்வரி அம்பிகை வீற்றிருந்து இடர்களைந்து அருள் புரிகிறாள். அம்பிகைக்கு ஆடிப்பூர நன்னாளை இறுதியாகக் கொண்டு 'சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம்'' என்ற பஞ்சகிருத்தியங்களை உள்ளடக்கி நடைபெறுகின்ற பிரமோற்சவத்தில் அடியார்களின் மலபந்தங்களை நீக்கி அவர்களுக்கு அருள்வழங்குவதற்காக ''சங்காரம்'' எனப்படும் அழித்தல் தொழிலை புரிவதற்காக அம்பிகை இன்று இரதமேறவுள்ளார். இத்திருநாள் முதல் நாட்டின் துன்ப துயரமற்ற மகிழ்வான வாழ்வு கிடைக்க அம்பிகையை கரங்குவித்து அனைவருக்கும் எமது ஆசிகளை வழங்குகின்றோம்.

''அம்பிகையை சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்''


மகோற்சவ குரு - சிவாகம கிரியாதத்துவநிதி சிவஸ்ரீ இராமபாலச்சந்திரக் குருக்கள்
ஆதீன குரு, ஆனைவிழுந்தான் விநாயகர் தேவஸ்தானம், இளவாலை.

### தேவஸ்தான குருவின் ஆசிச்செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பழம்பதியாம் ஏழாலையில் கருணா மூர்த்தியாய் காட்சி தருபவள் அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி. எங்கும் நிறைந்து இன்ப அருள் சுரக்கும் எமதன்னைக்கு இன்றைய தினம் இரதோற்சவம். இந்த அருமையான தினத்தில் அன்னைஅருளாலே அவள்தாள் பணிந்து அனைவருக்கும் தெய்வ ஆசி வேண்டி நாட்டில் சாமதானமும் சுபீட்சமும் நிலவ பிரார்த்தித்து அமைகிறேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

பிம்மஸ்ரீ சோ.குகனேஸ்வரசர்மா
(புன்னாலைக்கட்டுவன்)



## இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்


**லது**
டிஜிற்றல் வீடியோ & போட்டோ
LATHU DIGITAL VIDEO& PHOTO
கே.கே.எஸ் வீதி, இணுவில்.
0777111009 ,
021 222 7643

**Thurkah Motors & Communication**
68, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.
T.P: 021 224 0317

**ஜெயகிருஷ்ணா**
20, காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

**நாதன் சகோதரர்**
*NATHAN BROTHER'S*
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்

**ஹப்பி எலெக்றிக்கல்ஸ்**
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.
T.P: 021 320 6795

*ABIRAMEE FASHION HOUSE*
அபிராமி பெஷன் ஹவுஸ்
5, K.K.S Road,
Chunnakam.


## 'கேற்வே' கணனித் தராதர சான்றிதழ்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஒக.11

யாழ்ப்பாணம் ''கேற்வே'' மொழி தகவல் தொடர்பாடல் நிலையத்தில் ஆசிரியர்களுக்கான சர்வதேச கணனித் தராதரச் சான்றிதழ் (ஐ.சி.டி.எல்) பயிற்சிநெறியில் கடந்த மாத இறுதிவரை பயின்ற 80 ஆசிரியர்களுக்கான ஐ.சி.டி.எல் தராதரப் பத்திரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தராதரப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்ற ஆசிரியர்களின் விவரங்களை இல.347, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என பரீட்சை நிலைய முகாமையாளர் அறிவித்துள்ளார். (த-319)

## மரண அறிவித்தல்

### குணரத்தினம் குகவதி



துன்னாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் குகவதி 09.08.2010 திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் குணரத்தினத்தின் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர், கிளிநொச்சி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணேசன் (துன்னாலை) மற்றும் மகேசன் (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்), செல்வநாயகம் (சோதிடர், வவுனியா), குணவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, கிளிநொச்சி), விமலாவதி (கொழும்பு), கதிரவேலு (ஓய்வுபெற்ற சித்திர ஆசிரியர், உரும்பிராய்), கமலாதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணசீலன் (ஜேர்மனி), அனுரா (கனடா), குகநேசன் (கனடா), கௌசலா (ஆசிரியை, கொழும்பு), லக்ஸ்மணஸ்ரீ (பொறியியலாளர், ஓமான்), ரமணன் (செலிங்கோ இன்சூரன்ஸ், சுன்னாகம்), ஜீவிதா (வெளிவாரி மாணவி, யாழ்.பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும் சற்குணதாஸ் (கனடா), வனிதா (கனடா), உமாசங்கர் (உயிரியல் ஆசிரியர், கொழும்பு), அகல்யா (மேம்படுத்தல் உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), சுகந்தினி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், நெல்லியடி பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமியும் அனுசா, நிரோசன், ஜெனிசா (கனடா), சாரங்கன், தாரகா, ராதிகா (கனடா), சாம்பவி, அபிலாசா (கொழும்பு), அகர்சன், அத்மிகா (மட்டுவில்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.08.2010) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/66, வைத்தியசாலை முன் வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0779773002 (101832)

தகவல்:
குடும்பத்தினர்.

## அன்னை தெரேசாவுக்கு இந்தியாவில் நாணயம்

கொழும்புத்துறை, ஒக.11

இந்தியாவில் ஏழைகள், நோயாளிகளின் துயர்துடைப்புப் பணியில் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்ட அருட்பணியாளர் சபையை ஸ்தாபித்த அன்னை தெராசாவை கௌரவிக்கும் வகையில் இந்திய மத்திய அரசு நாணயத்தை வெளியிடவுள்ளது.

அன்னை தெரசா பிறப்பின் நூறாவது ஆண்டு நிறைவு தினமான ஆகஸ்ட் 26 ஆம் திகதி அன்னையின் உருவம் பொறித்த நாணய வெளியீடு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நாணய வெளியீடு கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.அன்னை தெரேசா இறந்து சில வருடங்களில் மறைந்த பாப்பரசர் 6ஆம் அருள் சின்னப்பரால் முத்திப்பேறு நிலைக்கு உயர்த்தப்பட்டார். தற்போது புனிதர் நிலைக்கு உயர்த்தும் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-135)


**Vacancy**

கொம்பியூட்டர் ஹாட்வெயர் தெரிந்தவர்கள் உடன் தேவை.
நேரில் வரவும்.
ஸ்ரீடியா எலக்ரோனாட்
1-I, 1-H ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 4566

**தவறிவிட்டன**

ரவிந்திரராஜா செல்வக்குமாரி என்பவரது தே.அ.அட்டை (715564840V), விசேட அ.அட்டை, சிறு தங்க ஆபரணம் என்பன அங்கிய பேர்ஸ் பூநாறி மரத்தடிக்கும் நாச்சிமார் கோயிலடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே: 0774927361 பூநாறி லேன், கொக்குவில் மேற்கு.

**வேலையாள் தேவை**

அப்பம், றொட்டி தயாரிக்கத் தெரிந்தவர்கள் தேவை.
தொடர்பு:- 0774821956 சாவகச்சேரி.

**விற்பனைக்கு**

LB-7047 Lorry, Lumala சிறிய Bike, Washing Machine என்பன உடன் விற்பனைக்கு.
குண்டு. தொடர்பு:- 0776360149, 0714856550


## அறிவித்தல்

ஒட்டுசுட்டான் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது நிரந்தர முகவரியான கற்சிலைமடு, ஒட்டுசுட்டானில் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது. வன்னி இடப்பெயர்வுக்கு முற்பட்ட காலப்பகுதியில் சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்ட அங்கத்தவர்கள், தனியார், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் குறித்த சங்கத்துடன் தொடர்புகொண்டு 20.08.2010இற்கு முன்பதாக மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பொதுமுகாமையாளர்,
ஒட்சுட்டான்
ப.தெ.வ.அ.கூ.ச.

(101836)

கணக்காளர்,
ஒட்டுசுட்டான்
ப.தெ.வ.அ.கூ.ச.

## நெஞ்சைவிட்டகலா நீங்கா நினைவுகளுடன்

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 22 - 11 - 1947



உதிர்வு 14 - 05 - 2010

**அமரர் கலைமான் சங்கரப்பிள்ளை கந்தசாமி**
(முன்னாள் முகாமையாளர், எரிபொருள் நிரப்பு நிலையம்.கைதடி)

திதி: 11.08.2010

அன்புடனும் பண்புடனும் அரவணைத்த அப்பாவே
அகிலத்தில் எம்மை தலைநிமிர வைத்தீர்கள் அப்பாவே
நீங்கள் விண்ணுலகம்சென்று தொண்ணூறு நாள்கள் கடந்ததுவே- அப்பா
ஆனால் நீங்கள் எம்முடன் இருப்பது போல் நாங்கள் நினைக்கின்றோம் அப்பா
ஆலமரம்போல தளிர்த்து நிழல் தந்தீர்கள் அப்பா
அந்த ஆலமரத்தின் கிளைகள் போல நாம் வாழ்ந்து வந்தோம் அப்பா
அந்த ஆலமரம் என் அப்பா திடீரென சாய்ந்தது அந்த கொடிய நோயினால்தான் அப்பா
உங்கள் நினைவாகவே நாம் என்றும் வாழ்ந்து வருகின்றோம் அப்பா


''குககிரி''
கைதடி கிழக்கு, கைதடி.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

(101830)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. நூலைக் கொண்டு A யில் காட்டப்பட்ட உருவைச் செய்ய 45 cm நூல் தேவையாயின் B யினால் காட்டப்பட்டுள்ள உருவைச் செய்ய எத்தனை cm நூல் தேவை,
1) 150cm
2) 180cm
3) 135cm





30. திருத்தமான அமைப்பில் எழுதப்பட்ட வாக்கியத்தை தெரிவுசெய்க.
1) வேட்டை நாய் கவ்விப் படித்தது குஞ்சுக்கோழியை.
2) கோழிக் குஞ்சை கவ்விப் படித்தது வேட்டை நாய்.
3) வேட்டை நாய் குஞ்சுக் கோழியைக் கவ்விப் பிடித்தது.

* 31ம், 32ம் வினாக்களில் உள்ள உருக்களிலிருந்து உருவாக்கக்கூடிய ஆகக் கூடிய செவ்வகங்களின் எண்ணிக்கையை எழுதுக.

31. 

..............................

32. 

..............................


* வாக்கியத்தில் உள்ள சொற்களுக்கான சரியான குறியீட்டுத் தொடர்பை இனங் கண்டு கீழ்வரும் உருவிற்கான சரியான விடையின் கீழ் கீறிடுக.

கோழி சோறு உண்டது
சாவற் கோழி கூவியது
கோழி இறைச்சி உண்டது



33. என்பதனை காட்டும் சொல் எது?
1) உண்டது. 2) இறைச்சி. 3) கோழி.

* கீழுள்ள பெரிய சதுரமுகியானது சிறிய சதுரமுகிக் கட்டைகளை அடுக்கி ஆக்கப் பட்டுள்ளது. இப் பெரிய சதுரமுகியைச் சுற்றிவர நிறம் பூசப்பட்டுள்ளதாக கருதிக் கொள்க. இவற்றை அவதானித்து 34 - 36 வரையான வினாக்களுக்கான சரியான விடையை எழுதுக.



34. இங்கு அடுக்கப்பட்டுள்ள சிறிய சதுரமுகிக் கட்டைகள் எத்தனை?

..............................


35. இதனைப்பிரித்தெடுக்கும் போது 3 பக்கத்திற்கு மாத்திரம் நிறம் தெரியக்கூடிய சிறிய சதுரமுகிக்கட்டைகள் எத்தனை?

..............................


36. இதனைப்பிரித்தெடுக்கும்போது ஒரு பக்கத்திற்கேனும் நிறம் பட்டிராதசிறிய சதுர முகிகள் எத்தனை?

..............................

* 37ஆம், 38ஆம் வினாக்களின் எண் கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை தெரிவுசெய்து கீறிடுக.

37. 


1) 6
2) 8
3) 26

38. 


1) 8
2) 25
3) 64

* 39ஆம், 40ஆம் வினாக்களின் கவிதையைபபூர்த்தி செய்ய புள்ளிக்கோட்டில் அமையவேண்டிய பொருத்தமான சொற்களை முறையாகக் காட்டும் விடையின் கீழ்க் கீறிடுக.

39. தென்னையின் .................. (பாழை, பாலை, பாளை)
வளர வேண்டும்.............. (மூழை, மூலை, மூளை)
சுண்ணாம்புச் .................. (சூழை, சூலை, சூளை)

40. பொய்கையில் ................ ( வண்ணம், அன்னம், அண்ணம்)
குழந்னையின் ............... ( கண்ணம், கன்னம், கண்னம்)
தேர்தலின் ................ (சிண்ணம், சின்னம், சிண்ணம்)

-முற்றும்-

## வினாத்தாள் II

## 1 மணி 15 நிமிடங்கள்

சுட்டெண் | புள்ளிகள்

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

* பின்வரும் பந்தியைக் கவனமாக வாசிக்குக.

அது அடர்த்தியான காடு. எம்மைப் பிரிந்து சென்ற நண்பன் அக் காட்டிற்குள் இருக்கக்கூடும் என்ற எண்ணத்தில் காட்டிற்குள் சென்றோம். பருகுவதற்கு நீர் நிலைகளும் இல்லை. குளங்கள் கூட வற்றி வரண்டு காணப்பட்டன. பல வகை விலங்குகளின் சத்தங்கள் வெவ்வேறு இடங்களில் கேட்டன.

கரடிகள் உறுமின. கழுதைகள் கத்தின. நரிகள் ஊளையிட்டன. தொலைவில் மயில்கள் அகவும் சத்தமும் கேட்டது. எல்லோர் மனதிலும் பீதி ஆட்கொண்டிருந்தது. எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. தூரத்தில் சத்தமொன்று எதிரொலித்தது. திரும்பிப் பார்த்தோம். நண்பன் ஓடி வந்துகொண்டிருந்தான். நண்பனைக் கண்டதும் எங்கள் எல்லோரினதும் முகம் மலர்ந்தது.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) முகம் மலர்தல் என்பதன் கருத்து யாது?

..............................

2) 'பீதி' என்பதற்குச் சமமான வேறொரு சொல்லை எழுதுக.

..............................

3) சத்தம் என்பதன் எதிர்ச்சொல் யாது?

..............................

4) பந்தியில் வந்துள்ள இணைமொழி ஒன்றை எழுதுக.

..............................

5) குளங்கள் என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக.

..............................

6) எல்லோர் மனதிலும் பீதி ஆட்கொண்டது ஏன்?

..............................

7) நரி ஊளையிடுவது போன்று எருமை ..............................

8) ''அடர்த்தியான காடு'' என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?

..............................

9) பந்தியில் வந்துள்ள உயர்திணை, பலர்பால், இறந்தகால வினைமுற்று ஒன்றை எழுதுக.

..............................

10) நண்பன் என்பதன் பலர்பாற் சொல்லை எழுதுக.

..............................

02. அடைப்பில் தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமானதைத் தெரிவுசெய்து வாக்கியத்தில் உள்ள இடைவெளிகளைப் பூர்த்திசெய்க.
( ஏரி, ஏறி, மலை, மழை )
1) ........................ நாட்டில் ........................ அதிகம்.
2) நான் மலைக்குன்றில் ................. நின்று .................. யைப் பார்த்தேன்.

03. கீழுள்ள பழமொழிகளின் உட்கருத்தினை எழுதுக.
1) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

..............................

2) எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு.

..............................

04. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
1) I am watering the plants ..............................
2) I want to pluck flowers ..............................

05. ''அ(ப்)பி செல்லம் கறமு'' என்பதன் கருத்தினைத் தமிழில் எழுதுக.

..............................

06. ''புத்தகம் தாருங்கள்'' என்பதற்குச் சமமான சிங்களச்சொல்லைத் தமிழில் எழுதுக.

..............................

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 4 விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.

1) விசேட காலங்களில் பூத்துக் காய்க்கும் தாவரம்,
1) தென்னை. 2) வாழை.
3) மரமுந்திரிகை. 4) முருங்கை.

2) இருள் சூழ்ந்து வரும்போது சத்தமிடும் பிராணி,
1) மின்மினிப்பூச்சி. 2) தவளை.
3) காகம். 4) சில்வண்டு.

3) இரும்புச்சத்துக் குறைபாட்டால் ஏற்படும் ஒரு நோய்,
1) குருதிச்சோகை 2) கண்டக்கழலை.
3) மலேரியா. 4) மாலைக்கண்.

4) தேசப்படங்களில் புகையிரதப் பாதைகள் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் நிறம்,
1) நீலம். 2) சிவப்பு. 3) மஞ்சள். 4) கறுப்பு.

5) எண்ணெய் தயாரிக்கப் பயன்படும் ஒரு வித்து,
1) இறப்பர். 2) எள்ளு.
3) புளி. 4) கறிவேப்பிலை.

6) மாலையில் மலரும் ஒரு பூ,
1) சூரியகாந்தி. 2) தாமரை.
3) நந்தியாவட்டை. 4) நான்குமணிப்பூ.

7) ஊதா நிறத்தைப் பெற்றுக்கொள்ள கலக்கவேண்டிய இரு நிறங்கள்,
1) நீலம் - கறுப்பு. 2) சிவப்பு - நீலம்.
3) சிவப்பு - கறுப்பு. 4) நீலம் - மஞ்சள்.

8) அருகிலுள்ள வித்தின் பெயர் யாது?
1) வேங்கை.
2) கடல் மாங்காய்.
3) அச்சு.
4) எண்ணெய்.



9) வலைப்பந்தாட்டப் போட்டியில் ஒரு குழுவில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை,
1) 6 பேர். 2) 11 பேர். 3) 5 பேர். 4) 7 பேர்.

10) தனது குட்டிகளைத் தன் வயிற்றில் ஏந்திச்செல்லும் பிராணி,
1) யானை. 2) பூனை. 3) குரங்கு. 4) முயல்.

11) கலாவாவியைக் கட்டுவித்த மன்னன்,
1) மகாசேனன். 2) பண்டுகாபயன்.
3) தாதுசேனன். 4) பராக்கிமபாகு.

12) அருகிலுள்ள உடுக்கோலம்,
1) கலப்பை.
2) விருச்சிகம்.
3) ஓராயன்.
4) தென்சிலுவை.



13) சிறுவர் உதவிச்சேவையைப் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டிய தொலை பேசி எண்,
1) 1919 2) 119 3) 1929 4) 118


14) இலங்கை மக்களுக்கு இலவசமாகக் கிடைக்கும் சேவை,
1) போக்குவரத்து. 2) தொடர்பாடல்.
3) சுகாதாரம். 4) தபால்.

15) கிழங்குப் பயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தும் பிராணி,
1) எலி. 2) நத்தை.
3) பனிப்பூச்சி. 4) அழுக்கணவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


16) முட்களைக் கொண்ட ஒரு பழம்,
1) பனை. 2) பூசணி.
3) றம்புட்டான். 4) தூரியன்.

17) மின்னஞ்சல் (E-mail) எனப்படுவது,
1) தந்தி ஒன்றை அனுப்புதல்.
2) பதிவுத் தபால் மூலம் கடிதங்களை அனுப்புதல்.
3) தொலைபேசியில் உரையாடுவது.
4) கணினியின் மூலம் தகவல்களைப் பரிமாறுவது.

18) இவ் இலச்சினை எந்த அமைப்பினுடையது?

1) இலங்கை மின்சார சபை.
2) தபாற் திணைக்களம்.
3) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
4) இலங்கை நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை.

19) அடிப்படை நிறங்களைக் காட்டும் தொகுதி,
1) மஞ்சள் - பச்சை - நீலம். 2) சிவப்பு - மஞ்சள் - பச்சை.
3) நீலம் - சிவப்பு - மஞ்சள். 4) வெள்ளை - கறுப்பு - மஞ்சள்.

20) தபால் அட்டை ஒன்றின் தற்போதைய பெறுமதி,
1) ரூ. 3.00 2) ரூ. 3.50 3) ரூ. 4.00 4) ரூ. 4.50

08. கீழே காணப்படும் உபகரணத்தொகுதிகளின் பெயர்களை எழுதுக.
1)  ..........................
2)  ..........................

09. இக்குறியீடுகள் உணர்த்தும் கருத்தை எழுதுக.
1)  ..........................
2)  ..........................

10. சில பிராணிகளின் நடைகள் கீழே காட்டப்பட்டுள்ளன. பின்வரும் பிராணிகளின் நடைகளைக் காட்டும் படங்களின் எழுத்துக்களை எழுதுக.

A B C D E
1) அட்டைபோல் நடத்தல் ..........................
2) குரங்குபோல் நடத்தல் ..........................
3) தேள்போல் நடத்தல் ..........................

11. ஓர் உலர்மின்கலம், ஒரு மின்குமிழ், இரண்டு வயர்த்துண்டுகள், என்பனவற்றைப் பயன்படுத்தி எளிய மின்சுற்றை அமைக்கக்கூடிய இரண்டு சந்தர்ப்பங்களை வரைந்துகாட்டுக.

12. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
1) அறுபத்தையாயிரம் எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.
..........................

2) அருகிலுள்ள உருவில் 1/4 பங்கை நிறந்தீட்டிக் காட்டுக.

..........................


3) 1Kg சின்ன வெங்காயம் ரூபா 36 எனின், 1Kg 750g சின்னவெங்காயம் வாங்கச் செலவாகும் பணம் எவ்வளவு?
..........................

4) ரூபா 12 இற்கு நான்கு எலுமிச்சம்பழங்கள் வாங்கலாம். எனின், 10 எலுமிச்சம் பழங்கள் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?
..........................

05. இக்கடிகாரம் காட்டும் நேரத்தைச் சாதாரண நேரமாகத் தருக.



..........................

06. கூட்டுக. 1/4 + 1/3 = ..........................

07. பெரிய பாத்திரத்தை முற்றாக நீரினால் நிரப்புவதற்கு சிறிய பாத்திரத்தால் எத்தனை முறை நீரள்ளி ஊற்ற வேண்டும்?



..........................

08. 413 இனிப்புக்களை ஒருவருக்கு 4 வீதம் சமனாகப் பகிர்ந்து கொடுத்தபோது ஒன்று மீதியாக இருந்தது. எனின், எத்தனைபேருக்கு இனிப்புக்கள் கொடுக்கப் பட்டன?
..........................

09. இதனை மடிப்புக்கோடுகள் வழியே மடிப்பதன் மூலமாக செய்யக்கூடிய திண்ம உரு என்ன?

..........................

10. சிறிய சதுரம் ஒன்றின் நீளம், அகலம் முறையே 1cm எனின், உரு A யின் பரப்பளவு உரு B யின் பரப்பளவை விட எத்தனை சதுர சென்ரிமீற்றர் கூடியது?


..........................

13. கீழுள்ள நிரல்வரைபு பழக்கடை ஒன்றில் திங்கட்கிழமை விற்பனை செய்யப் பட்ட பழங்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது.


1) அன்றைய தினம் விற்பனை செய்யப்பட்ட அப்பிள் பழங்களினதும், அன்னாசிப் பழங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?
..........................
2) அப்பிள் பழம் ஒன்றின் விலை ரூபா 30.00 எனின் அன்றைய தினம் அப்பிள் பழ விற்பனையால் கிடைத்த தொகை எவ்வளவு?
..........................
3) அன்றைய தினம் அன்னாசிப்பழம் விற்றதால் கிடைத்த பணம் ரூபா 1500.00 எனின், அன்னாசிப்பழம் ஒன்றின் விலை யாது?
..........................

14. அன்று திங்கட்கிழமை ஆகும். நான் வழமைபோன்று பாடசாலை விட்டு நடந்து வந்துகொண்டிருந்தேன். வழியில் ஓர் இடத்தில் அதிகமான மனிதர்கள் கூடி நின்றுகொண்டிருந்தனர். நானும் கூட்டத்தினரை விலக்கிக்கொண்டு அவ்விடத்திற்குச் சென்றேன். ..............
(மேலுள்ளதை முற்பகுதியாகக் கொண்டு அதனுடன் தொடர்புபட்ட திருத்தமான ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் குறைந்தது 5 சொற்களேனும் இருத்தல் அவசியமாகும்)

-முற்றும்-

## விடை விளக்கக் குறிப்புக்கள்: தொடர்-02, வினாத்தாள்-I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-3 | 02-2 | 03-4 | 04-3 | 05-2 | 06-1 | 07-3 | 08-3 | 09-2 | 10-2 |
| 11-2 | 12-1 | 13-1 | 14-2 | 15-2 | 16-1 | 17-2 | 18-2 | 19-3 | 20-2 |
| 21-2 | 22-2 | 23-1 | 24-3 | 25-2 | 26-3 | 27-2 | 28-2 | 29-2 | 30-2 |
| 31-2 | 32-2 | 33-3 | | | | | | | |
| 34-3 | 35-2 | 36-1 | 37-2 | 38-2 | 39-3 | 40-2 | | | |

கடினமான சில வினாக்களுக்குரிய விளக்கக்குறிப்புகள்:

08. மாத்தறை புகையிரதம் வந்தடைந்த நேரத்தை 8.00 எனக்கொள்க.

வவுனியா 8.12
15 நிமிடம் முன் ↓ 12 நிமிடம் முன் ↓
மாத்தறை 8.00
கண்டி 7.57 ↓ 15 நிமிடம் முன்
புத்தளம் 7.45

விடை + மாத்தறை (3)

09. 8ஆவது விடையின்படி புத்தளம், கண்டிப் புகையிரதங்கள் நிலையத்தை அடைந்த வேறுபாடு புத்தளத்தை விட கண்டி 12 நிமிடம் பிந்தி வந்துள்ளது. (7.57 - 7.45)
எனவே, புத்தளம் 9.10 எனின்,
கண்டி 12
விடை 9.22

* 4ஆம், 15ஆம் வினாவில் 1Kg சீனி 60.00 எனின், இவ்விலையைப் பிரதியீடு செய்தால்,
250 g பருப்பு 30/- = 500 g சீனி 30/-
750g சீனி 45/- = 500g கடலை 45/-
5Kg கடலை 450/- = 2 பால்மா பைக்கற் 450/-

14.
| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 kg சீனி | 120.00 | $1^3/_4$ kg சீனி | 105.00 | 1 kg கடலை | 90.00 |
| 2 kg கடலை | 180.00 | 1 பால்மா | 225.00 | 1 பால்மா | 225.00 |
| A | 300.00 | B | 330.00 | C | 315.00 |

விடை 330.00 (2)
15. 2 பால்மா 450.00 எனின், 1 பால்மா 225.00. விடை 225.00 (2)
16. 2012 - லீப்வருடம் (4ஆல் வகுத்தால் மீதி 0)
எனவே, பெப்ரவரி -29 நாள், பெப்ரவரி மாதம் - 9 நாள், மார்ச் மாதம் - 8 நாள்
விடை - 17 நாள் (1)
17. ஓகஸ்ட் 31 நாள் புதன், ஓகஸ்ட் 7, வியாழன், ஓகஸ்ட் 8, 15, 22, 29, 5, 12, 19, 26
விடை - 8 வியாழன் (2)
18. A யின் உயரம் 240 - 120 = 120 cm, B யின் உயரம் 200 - 60 = 140 cm
C யின் உயரம் 200 - 80 = 120 cm, D யின் உயரம் 120 - 20 = 100 cm இதன்படி
விடை B (2) 19. A,C (120 cm)
20. 2000 இன் 1/2 = 1000 இன் 1/4 = 250.

## வினாத்தாள்-II

01. 1-பத்திரிகை, 2-பார்/பூமி....., 3-நித்திரை/உறக்கம்..., 4-கெட்ட, 5-வீழ்ச்சி, 6-கதிர்+ஒளி, 7-ஊர்களினை, 8-பிறந்த, 9-ஒன்றன்பால், 10-நீ.
02. 1-அறிவியல் முன்னேற்றம் தகவல் தொடர்பில் பல சாதனைகளை ஏற்படுத்தி உள்ளது.
2-மண்ணரிப்பினால் நிலத்தின் வளம் தேய்வடைந்து செல்கிறது.
03. 1-டயானா அதிகாலையில் எழுந்து பல் துலக்கி முகம் கழுவினாள்.
2-1) கீர்த்திகா விடாமுயற்சியுடன் படித்தாள்.
2) கீர்த்திகா உயர்ந்த புள்ளிகளைப் பெற்றாள்.
04. 1-இல்லாததை பெற முயலுதல், 2-பிறர் பிழைப்பைக் கெடுத்தல்.
05. 1-அகதி, 2-தேசத்துரோகி.
06. 1-முன்மாதிரியாக நடத்தல், 2-திருப்திப்படாத மனம்.
07. 1-நண்பி, என்னுடன் வீடுவரை வருவாயா?
2-''வகுப்பறையில் சத்தம் போடாதீர்கள்'' என்றார் ஆசிரியர்.
08. 1-நிழல், 2-பறித்தனர்.
09. 1-1-School, 2-Class Room, 3-Black Board.
2-1-நான் வகுப்புகளுக்கு வந்துகொண்டிருக்கிறேன், 2-நீங்கள் யார்?
10. நான் விளையாடுகிறேன்
11. 3 12. 4 13. 2 14. 1 15. 2 16. 2 17. 3 18. 1 19. 3 20. 2
21. 2 22. 2 23. 3 24. 3 25. 3 26. 1 27. 4 28. 4 29. 3
30. முள்ளங்கி. 31-துளசிச் செடி. 32-மிளகுக் கொடி. 33. கற்றாளை.
34. இங்கே குப்பை போடவும். 35. இங்கே அழுத்தவும்.
36. ஒருவழிப் பயணம். 37. புகைத்தல் தடை. 38. 54cm
39. 35.5kg 40. 161km 41. $40cm^2$ 42. 67l300ml
43. 1-நிமற்படுத்தல், 2-31, 3-31, 4-945, 5-3, 6-16
44. ரூ.300.00 45. 15:50 46. 1/6 47. 1-5,2-8 48. 0.25
49. பொருத்தமான எழுவாய், பயனிலைகளுடன் எழுதுதல் வேண்டும்.

கருத்தரங்குக் குறிப்பு:
நேற்றைய வினாத்தாள்களுக்கு மாணவர்கள் அளித்த விடைகளை இன்றைய தினம் வெளிவந்துள்ள விடை விளக்கக்குறிப்புக்களுடன் ஒப்பிட்டு விளக்கமின்மை, தெளிவின்மைகள் என்பவற்றை 077-6660749 என்ற தொலைபேசியூடாக S.தீபன்ஆசிரியரிடம் இன்றைய தினம் இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக் கொள்ளமுடியும். (பிரபல ஆசிரியர்கள் ஒதுக்கிய அரிய நேரத்தை பயன்படுத்த தவறாதீர்கள்)''



### நாளைய கருத்தரங்குத் தொடரில்

கல்விச்சுடர் ஆரம்பித்த காலம் முதல் எமக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கிவருவதுடன் அதிகளவான வினாத்தாள்களையும் எமக்கு வழங்கி கல்விசார் வெளியீடுகளில் இலங்கையில் சுடர் ஒளியை முதல்நிலைக்குக் கொண்டுவருவதற்கு உறுதுணையாக இருந்துவரும் இலங்கையின் மூத்த இணையாசிரியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளப் பாதிப்புக்குள்ளான பாகிஸ்தானுக்கு உலக நாடுகள் நிதியுதவி வழங்க வேண்டும்

## ஐ.நா. செயலாளர் நாயகம் வேண்டுகோள்



நியூயோர்க், ஓக. 11

எண்பது வருடகால வரலாற்றில் இப்போது படுமோசமாக பாதிப்புக்குள்ளாகியுள்ள பாகிஸ்தானுக்கு உதவி புரியுமாறு நன் கொடையாளர்களுக்கு ஐ.நா. செயலா ளர் நாயகம் பான் கீ-மூன் அவசர வேண்டு கோளொன்றை விடுத்துள்ளார்.

பாகிஸ்தானில் வெள்ள அனர்த்தங்களால் ஒரு கோடியே 40 இலட்சம் பேர் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். இந்த எண்ணிக்கை 2004 ஆம் வருட ஆழிப்பேரலை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கையை எட்டுவதாக உள்ளது என ஐ.நா. அதிகாரி யொருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் செய்தியாளர் மாநாடொன்றில் பேசுகையில், ''பாகிஸ்தான் வெள்ள அனர்த்தங்களால் வரலாறு காணாத அளவுக்குப் பாதிப்படைந்துள்ளது. அதன் தவிர்க்க முடியாத அவசர தேவைகளை நிறைவு செய்ய பல நூறு இலட்ச டொலர்கள் தேவை'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''2004ஆம் வருட ஆழிப்பேரலை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களைவிட அதிகமானோர் பாகிஸ்தானில் பாதிக்கப்பட்டுள்ளனர். 2005ஆம் வருடம் பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்துக்கோ, ஜனவரியில் ஹெய்ட்டியில் ஏற்பட்ட பூகம்பத்துக்கோ இந்த அளவில் மக்கள் பாதிக்கப்படவில்லை'' என மரிசியோ கியுலி யானோ, ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குக் குறிப்பிட்டுள்ளார்.

இவர் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா. இணைப்பகத்தின் பேச்சாளராவார்.

பாகிஸ்தானில் கடந்த பல நாட்களாகப் பெய்துவரும் பலத்த மழையால் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. கண்ணுக்கு எட்டிய தூரமெல்லாம் வெள்ளக் காடாய் காட்சியளிக்கிறது. இதுவரை வெள்ளத்துக்கு 60 இலட்சத்துக்கு மேலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் வெள்ளத்தால் சுமார் ஒரு கோடியே 40 இலட்சம் பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது. இந்நிலையில், வெள்ளத்தால் சுமார் 60 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

பல கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன. இலட்சக்கணக்கான மக்கள் உடைமைகளை இழந்துள்ளனர். மோசமான காலநிலை நிலவுவதால் ஹெலிக்கொப்டர் பறக்க முடியவில்லை. இதனால் நிவாரணப் பணி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் வரலாற்றில் இது போன்ற வெள்ளப்பெருக்கு எப்போதும் ஏற்பட்டதில்லை. வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பும் கடுமையாக உள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைக்க அந்நாட்டுக்கு கோடிக்கணக்கான நிதி தேவைப்படுகிறது என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

# ஆப்கானில் கர்ப்பிணிப் பெண் குரூரமாகச் சுட்டுக்கொலை!

காபூல், ஓக. 11

ஆப்கானிஸ்தானில் கர்ப்பிணி விதவையை தலிபான்கள் கொடூரமாக சுட்டுக் கொன்று தண்டனை நிறைவேற்றியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் பட்ஹிஸ் மாகாணத்தைச் சேர்ந்த பிவீ சானுபா (வயது - 35) என்ற பெண் இளம் வயதிலேயே கணவனை இழந்துவிட்டார்.

விதவையாக இருந்தபோது தவறான வழியில் சென்றதால் கர்ப்பம் அடைந்தார். இதனால் அந்த பெண்ணுக்குத் தலிபான் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

அதன்படி தலிபான்கள் பிவீ சானுபாவை பொதுமக்கள் முன்னால் பின்புறமாகக் கைகளைக் கட்டி, தலையில் துப்பாக்கியால் கொடூரமாகச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

# நாகசாகியில் 65 ஆண்டுகளாகியும் தீராத அணுகுண்டு வீச்சின் சோகம்

டோக்கியோ, ஓக. 11

ஜப்பானின் நாகசாகி நகரில் 65 ஆண்டுகளுக்குப் பின்னரும் அணுகுண்டு வீச்சின் சோகம் தொடர்வது நினைவுகூரப்பட்டது. அணு ஆயுதம் இல்லாத உலகம் உருவாகவேண்டும் என்பதற்கு இந்நகரே சாட்சி.

இரண்டாம் உலகப் போரின்போது ஹிரோஷிமாவில் முதலாவது அணுகுண்டு வீசப்பட்டது. இதற்குப் பின்னர் மூன்று நாட்கள் இடைவெளியில் நாகசாகியில் குண்டு வீசப்பட்டது. அணுகுண்டு வீச்சின் தாக்குதலுக்கு இரண்டு முறை இலக்கான ஒரே நாடு ஜப்பான்தான்.



ஜப்பான், நாகசாகியில் இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்காவால் அணு ஆயுதத்தால் தாக்கப்பட்டது. இதன் 65 ஆவது நினைவு தினத்தில் பிரதமர் நாட்டோ கன் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துகிறார்.

முதல் முறையாக ஹிரோஷிமா நகரில் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் பங்கேற்றார்.

அணு ஆயுத வல்லரசாகக் கருதப்படும் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளும் ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்ட 65ஆம் ஆண்டு நினைவு தினத்தில் பங்கேற்க தனது பிரதிநிதிகளை முதல் முறையாக அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்களிருவருடன் இஸ்ரேல் தூதரும் நாகசாகி நினைவுக் கூட்டத்தில் பங்கேற்றார். ஆனால், இம்முறை அமெரிக்க தரப்பிலிருந்து பிரதிநிதிகள் எவரும் இவ்விரு நினைவுக் கூட்டங்களிலும் பங்கேற்கவில்லை.

1945ஆம் ஆண்டு 6 ஓகஸ்ட் 9ஆம் திகதி காலை 7.32 மணியளவில் நாகசாகியில் குண்டு வீசப்பட்டது. குண்டு மனிதன் (ஃபேட் மேன்) என்ற பெயரிலான குண்டு இங்கு வீசப்பட்டது. புளூட்டோனியம் கதிர்வீச்சைக் கக்கிய இந்த குண்டு வீச்சுக்கு 70 ஆயிரம் பேர் பலியாயினர். ஹிரோஷிமாவில் சின்ன பையன் (லிட்டில் போய்) என்ற பெயரிலான யுரேனியம் கதிர்வீச்சை கக்கும் குண்டு வீசப்பட்டது. இதில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

குண்டு வீச்சுக்குப் பின்னர் ஓகஸ்ட் 15ஆம் திகதி ஜப்பான் சரணடைந்தது. ஆனால், அணுகுண்டு வீசப்பட்டதற்காக ஜப்பானிடம் அமெரிக்கா இதுவரை ஒருமுறைகூட மன்னிப்புக் கோரவில்லை. அமெரிக்காவின் இத்தகைய போக்கானது, அதன் சர்வாதிகார போக்கையே காட்டுகிறது என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

# சேற்றில் புதையுண்ட 1,300 பேரை மீட்கும் பணியில் சீன இராணுவம்

பீஜிங், ஓக. 11

சீனாவில் காங்சு மாகாணத்தில் பலத்த மழையால் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் சிக்கி, 127 பேர் பலியாகியுள்ளனர். சேற்றில் புதைந்த, ஆயிரத்து 300 பேரைத் தேடும் பணி தொடர்கிறது.

சீனாவில் திபெத் பகுதியையொட்டியுள்ள காங்சு மாகாணத்தில் பலத்த மழை பெய்துவருகிறது. இங்குள்ள சோகு மாவட்டத்தின் பல பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலச்சரிவில் புதையுண்டு, 127 பேர் பலியாயினர். இப்பகுதியில் வசித்த ஆயிரத்து 300 பேரைக் காணவில்லை. இவர்கள் சேற்றில் புதையுண்டு இருக்கலாம் என்பதால், 4 ஆயிரத்து 500 இராணுவச் சிப்பாய்கள், அவர்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இம்மாவட்டத்திலுள்ள பெய்லாங் நதியின் கரை உடைந்து ஊருக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால், தெருக்களில் ஆறு மாடி அளவுக்கு தண்ணீர் தேங்கி நிற்கிறது.

ஆற்றில் அடித்து வரப்பட்ட குப்பைகள், தண்ணீர் வேகமாக செல்லாதவாறு குடியிருப்புப் பகுதிகளில் அடைத்துள்ளன. அதனால் தண்ணீர் அளவு உயர்ந்து வருகிறது.

எனவே, இராணுவச் சிப்பாய்கள் வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்து அடைப்புகளை அகற்றி தண்ணீரை வெளியேற்றுகின்றனர். இங்குள்ள 45 ஆயிரம் மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

சீனாவின் பல்வேறு பகுதிகளில் பெய்யும் பலத்த மழையால், ஒன்றரை கோடி பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

நிலச்சரிவுகள் ஏற்பட்ட பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துகளும் தடைப்பட்டுள்ளன. உணவு கிடைக்காததாலும் மக்கள் அவதிக்கு உள்ளாகியுள்ளனர். சீன பிரதமர் வென்ஜியா பாவோ, நிலச்சரிவுகள் ஏற்பட்ட பகுதிகளைச் சுற்றி பார்த்தார். உறவினர்களை இழந்த மக்களை சந்தித்து அவர் ஆறுதல் கூறினார்.

உலக அரங்கில்

# பிரிட்டிஷ் தம்பதிக்கு இன்ப அதிர்ச்சி: சீட்டிழுப்பில் ரூபா 80 கோடி பரிசு!

லண்டன், ஓக. 11

லொட்டரி சீட்டில் ரூபா 80 கோடி பரிசு விழுந்ததை அடுத்து பிரிட்டிஷ் தம்பதியினர் இன்ப அதிர்ச்சியில் மூழ்கியுள்ளனர்.

பிரிட்டனின் மான்செஸ்டரைச் சேர்ந்தவர்கள் பீட்டர் ரெடிகின் (வயது - 50) மற்றும் ஜாக்குலின் (வயது-48). இவர்கள் இருவரும் தம்பதிகளாவர். இவர்களுக்கு திருமணமாகி 29 ஆண்டுகள் ஆகின்றன. இந்தத் தம்பதியருக்கு 2 புதல்வர்கள் உள்ளனர்.

பீட்டர் வேலை இல்லாமல் இருந்து வந்தார். அவரது மனைவி தொலைபேசி நிலையம் ஒன்றில் பணிபுரிந்துவந்தார். இவர்கள் இருவருக்கும் அடிக்கடி லொட்டரிச் சீட்டு வாங்கும் பழக்கம் உண்டு. சமீபத்தில் இருவரும் இணைந்து லொட்டரிச் சீட்டு ஒன்றை வாங்கினார்கள்.

அதன் முதல் பரிசு 1 கோடியே 10 இலட்சம் பவுண்களாகும். இதன் இந்திய மதிப்பு சுமார் ரூபா 80 கோடியாகும்.

குலுக்கலில் முதல் பரிசு அவர்கள் இருவருக்கும் விழுந்தது. 2008ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிரிட்டனில் லொட்டரிச் சீட்டில் இவ்வளவு அதிக தொகை கிடைத்தது இதுவே முதல் முறை.

இதுகுறித்து பீட்டர் ரெடிகின் குறிப்பிடுகையில், ''என் மனைவியை அலுவலகத்தில் விட்டுவிட்டு லொட்டரி முடிவுகளைப் பார்த்தேன். 6 இலக்க லொட்டரியான இந்த பரிசுச் சீட்டில் முதல் பரிசுத் தொகைக்கான எண்ணில் என்னுடைய எண் இருந்ததைப் பார்த்து திகைத்துப் போனேன்'' என்றார்.

''இன்ப அதிர்ச்சியில் என் மனைவியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு விவரத்தைக் கூறினேன். முதலில் என் மனைவி நான் கூறியதை நம்பவில்லை. பின்னர்தான் அவர் நம்பினார். நாங்கள் இருவரும் இன்ப அதிர்ச்சியிலிருந்து இன்னமும் மீளவில்லை'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''புதிய மொடல் கார் ஒன்று வாங்க வேண்டும் என்பது என்னுடைய நீண்ட நாள் ஆசை. இதுவரை அது நிறைவேறாமல் இருந்தது. இப்போது என் ஆசை நிறைவேறப் போகிறது. மேலும் இந்தப் பணத்தை குடும்ப முன்னேற்றத்துக்காகவே பயன்படுத்தப் போகிறேன்'' என்றும் ரெட்கின் தெரிவித்துக்கொண்டார்.

# இந்தோனேசிய படகு விபத்தில் 10 பேர் பலி; 16 பேர் மீட்பு!

கிழக்கு இந்தோனேசியாவில் திங்கட்கிழமை நடந்த படகு விபத்தில் 10 பேர் பலியாயினர். கிழக்கு நுசாதெங்காரா மாகாணத்திலுள்ள தீவுகளுக்கு 50 பேருடன் சென்ற இப்படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் 10 பேர் பலியாயினர். சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புப் படையினர் தண்ணீரில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த 16 பேரை மீட்டனர். மற்றவர்களை தேடும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

# 10 கண் வைத்தியர்கள் ஆப்கானில் சுட்டுக்கொலை

பஸ்ரா, ஓக. 11

ஆப்கானிஸ்தானில் கிராமப்புற மக்களுக்கு இலவச கண் சிகிச்சை அளித்துவிட்டு வாகனங்களில் திரும்பிக்கொண்டிருந்த 10 வைத்தியர்கள் தலிபான்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

தலிபான்கள் இக்குழுவினரை சுட்டுக் கொன்றுள்ளனர். பலியானவர்களில் 6 பேர் அமெரிக்க வைத்தியர்கள். மற்ற 4 பேரில் ஜேர்மானியர் ஒருவரும், ஆங்கிலேயர் ஒருவரும், ஆப்கானிஸ்தானியர்கள் 2 பேரும் அடங்குவர்.

நாங்கள்தான் அவர்களைக் கொன்றோம். அவர்கள் அமெரிக்காவுக்கு உளவு பார்ப்பவர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தாலும், கிறிஸ்தவ மதத்தை பரப்புபவர்களாக இருக்கலாம் என்று நினைத்ததாலும் நாங்கள் கொன்றோம் என்று தலிபான் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பொருளாதார வளர்ச்சியில் ஜப்பானை முந்தியது சீனா!

பீஜிங், ஓக. 11

சர்வதேச அளவில் பொருளாதாரம் வளர்ச்சியடைந்த நாடுகளின் பட்டியலில் ஜப்பானை பின்னுக்குத் தள்ளி, சீனா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், சர்வதேச அளவில் வல்லரசாக அமெரிக்கா திகழ்கிறது. அசைக்க முடியாத வளர்ச்சியுடன் பல ஆண்டுகளாக அமெரிக்கா தொடர்ந்து முதலாம் இடத்தில் உள்ளது.

பொருளாதார ரீதியாக செல்வாக்குடைய நாடுகளின் பட்டியலில் கடந்தாண்டு வரை ஜப்பான் இரண்டாம் இடத்தில் இருந்தது. ஆனால், கடந்த சில மாதங்களாக சீனாவில் ஏற்பட்டுள்ள அபார பொருளாதார வளர்ச்சி காரணமாக, ஜப்பானை பின்னுக்குத் தள்ளி, சீனாஇரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

கடந்தாண்டே, பொருளாதார வளர்ச்சியில் ஜப்பானுக்குச் சமமாக சீனா வளர்ச்சி அடைந்திருந்தது. இருந்தாலும், இரண்டாம் இடத்தைப் பெறமுடியவில்லை. இந்தாண்டு அதை சாதித்துக் காட்டியுள்ளது.

சீனாவின் தலைமை நிதிக் கண்காணிப்பாளர் யி காங், இதைத் தெரிவித்தார். உலக வங்கி வெளியிட்டுள்ள மதிப்பீட்டின்படி, ''பொருளாதார வளர்ச்சியில் இதே வேகத்தில் சென்றால், 2025இல் அமெரிக்காவை முந்தி, சீனா முதலிடத்தைப் பிடித்து விடும்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியாக செல்வாக்குப் பெற்ற நாடுகளின் வரிசையில், 2005இல் பிரிட்டனையும், பிரான்ஸையும் சீனா பின்னுக்குத் தள்ளியது. 2007இல் ஜேர்மனியை முந்தியது. அதேபோல், சர்வதேச அளவிலான பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும், 'ஜி-20' நாடுகளின் பட்டியலில் சீனா முக்கிய பங்கு வகிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் பிரச்சினை தீரும்வரை நடிகைகளே, இலங்கை போகாதீர்!

## நடிகர் சத்தியராஜ் வேண்டுகோள்



சென்னை, ஓக. 11

ஈழத் தமிழர்கள் பிரச்சினை தீரும்வரை - அவர்களின் வாழ்க்கையில் அமைதி திரும்பும்வரை இலங்கைக்கு யாரும் செல்ல வேண்டாம் - என்று தமிழ் நடிகைகளுக்கு நடிகர் சத்தியராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நம்முடைய இந்தக் கோரிக்கையை ஏற்று அமிதாப்பச்சன் இலங்கைக்கு போகவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சத்தியராஜ் - சாந்தனு இணைந்து நடித்துள்ள 'ஆயிரம் விளக்கு' படத்தின் பாடல்கள் அடங்கிய குறுந்தகடு வெளியீட்டு விழா, சென்னை சத்தியம் திரையரங்கில் நேற்றுமுன்தினம் காலை நடந்தது.

விழாவில் கலந்துகொண்டு பேசிய போதே சத்தியராஜ் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழ்ப் பட கதாநாயகிகள் ஹிந்திப் படங்களில் நடிக்கப் போனாலும் பரவாயில்லை. இலங்கைக்கு மட்டும் போக வேண்டாம்.

அங்கே தமிழர்கள் பிரச்சினை தீரும் வரை - தமிழர்களின் வாழ்க்கையில் அமைதி திரும்பும்வரை இலங்கைக்கு யாரும் செல்ல வேண்டாம். நம்முடைய இந்த கோரிக்கையை ஏற்று அமிதாப்பச்சன் இலங்கைக்கு போகவில்லை.

இலங்கையைப் போலவே ஈராக்கிலும் இனப்படுகொலைகளும், போராட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், ஹொலிவுட் நடிகை ஜெனிபர் லோபஸ் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்க ஈராக் செல்வதாக இருந்தார். அதற்கு பாதிக்கப்பட்ட சைப்ரஸ் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு ஜெனிபர் லோபஸுக்கு பேசப்பட்ட தொகை ரூபா 14 கோடி. சைப்ரஸ் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால், 14 கோடியை தியாகம் செய்து ஜெனிபர் லோபஸ் அந்த நிகழ்ச்சியை ரத்து செய்துவிட்டார். அந்த உணர்வு நம் நடிகைகளுக்கும் வேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# படுகொலையை நிறுத்திப் பேச்சுக்கு வருக; நக்ஸல்களுக்கு அமைச்சர் மம்தா அழைப்பு



படுகொலைகளை நிறுத்தி உடனடியாக பேச்சுக்கு வாருங்கள் - என்று நக்ஸலைட்டுகளுக்கு மத்திய ரயில்வே அமைச்சரும், திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவருமான மம்தா பானர்ஜி அழைப்பு விடுத்தார்.

மேற்கு வங்கம், மிட்னாபூரிலிருந்து லால்கர் நகரம்வரை மம்தா கட்சியின் சார்பில் நேற்றுமுன்தினம் 'தீவிரவாத எதிர்ப்புப் பேரணி' நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்ட அழைப்பை விடுத்தார்.

மேலும் அவர் பேசியவை வருமாறு -

வன்முறையையும், படுகொலைகளையும் உடனடியாக நிறுத்தும்படி மாவோயிஸ்ட்டுகளை கேட்டுக் கொள்கிறேன். அரசுடன் உடனடியாக பேச்சுக்கு வரும்படி அழைப்பு விடுக்கிறேன். இன்றே அதற்கான நடவடிக்கைகளை தொடங்குங்கள்.

என்னுடன் பேச்சு நடத்துவதில் உங்களுக்கு ஏதாவது பிரச்சினை என்றால், சமூக ஆர்வலர் மேதாபட்கரும், சுவாமி அக்னிவேஷும் பேச்சை முன்னின்று நடத்துவார்கள். ஆனால் பேச்சுக்கான நடவடிக்கைகளை இப்போதே தொடங்கியாகவேண்டும். பேச்சுக்கு நீங்கள் ஒத்துக் கொண்டால், அதற்கான நடவடிக்கையை இப்போதே தொடங்குங்கள். அதற்கு வசதியாக மாவோயிஸ்ட்டுகளை வேட்டையாடும் கூட்டு நடவடிக்கையை அரசு உடனடியாக நிறுத்தியாக வேண்டும். எங்கே? எப்போது பேச்சைத் தொடங்கலாம் என்று உடனே தெரிவியுங்கள்.

வன்முறை இல்லாத இந்தியாவாக நாடு திகழ, ஜனநாயகம் மலர, அமைதி பேச்சை உடனே தொடங்க வேண்டும் என்று விரும்புகிறோம். வன்முறை மூலம் மார்க் சிஸ்ட் கட்சிதான் ஆதாயம் அடைந்து வரு கிறது. ஆகவே, அரசியலுக்காக படு கொலை கள் நடத்துவதை நிறுத்தும்படி உங்களை கையெடுத்து கும்பிடுகிறேன். பலியானவர்களின் சமாதிகளின் மேல் அரசியல் நடத்த நான் விரும்பவில்லை. நீங்கள் வன்முறையை - படுகொலைகளை நிறுத்த நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்.

- இப்படி அவர் பேசினார்.

**இந்தியச் செய்திகள்**

# தமிழினம் பற்றி சிறையில் சீமான் எழுதும் புத்தகம்!

வேலூர், ஓக. 11

வேலூர் சிறையில் இருக்கும் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தமிழினம் பற்றிய புத்தகம் எழுதுகிறார்.

இலங்கைக் கடற்படையினரால் நாகை மீனவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசினார் என தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சீமான் கைதுசெய்யப்பட்டார்.

வேலூர் சிறையில் இருக்கும் சீமான், தன்னை தண்டனையில் இருந்து விடுவிக்க கோரி சென்னை உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார். இந்த மனு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், நாம் தமிழர் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சீமானுக்கு தமிழினம் தொடர்பாக புத்தகம் எழுதும் திட்டம் இருந்தது. ஆனால் ஓய்வு இல்லாததால் எழுதமுடியவில்லை. தற்போது சிறையில் பல்வேறு நூல்களை படிப்பதிலும், குறிப்பு எடுப்பதிலும் முழுக் கவனம் செலுத்தி வருகிறார். புத்தகம் ஒன்றையும் எழுதத் தொடங்கியுள்ளார்.

தமிழ்த் தேசியத்துக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு, தமிழினம் ஏன் ஒடுக்கப்பட்டது? தமிழர்கள் எப்படி தங்கள் இனத்தை மறந்தார்கள் என்பது போன்ற வரலாற்றுச் செய்திகளுடன் இந்த நூலை எழுதுகிறார். அவர் சிறையில் இருந்து வெளியே வந்த பின்னர் புத்தகம் வெளியிடப்படும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீபெரும்புதூரிலிருந்து டில்லிக்கு ராஜீவ் நினைவு ஜோதி யாத்திரை

ஸ்ரீபெரும்புதூர், ஓக.11

ஸ்ரீபெரும்புதூர் நினைவிடத்தில் இருந்து ராஜீவ் காந்தி நினைவு ஜோதி யாத்திரை டில்லிக்கு புறப்பட்டது.

ராஜீவ்காந்தியின் பிறந்த நாளையொட்டி ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அவரது நினைவிடத் தில் இருந்து டில்லிக்கு நினைவு ஜோதி எடுத்து



செல்லப்படுவது வழக்கம். அதன்படி ராஜீவ்காந்தியின் 66 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்தில் இருந்து காங்கிரஸார் ராஜீவ் ஜோதி யாத்திரையைத் தொடங்கினார்கள்.

இந்த ஆண்டு கர்நாடக தொழிலாளர் பிரிவு தலைவர் எஸ்.எஸ்.பிரகாசம் தலைமையில் ராஜீவ் ஜோதி எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த ஜோதி யாத்திரையை தமிழக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, புதுச்சேரி முதல்வர் வைத்திலிங்கம் ஆகியோர் தொடக்கி வைத்தார்கள்.

இந்த ஜோதி தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, ஒரிஸா, பீஹார், உத்தரபிரதேசம், அரியானா ஆகிய மாநிலங்களின் வழியாக எதிர்வரும் 19 ஆம் திகதியன்று டில்லியைச் சென்றடைகிறது. தொடர்ந்து 20 ஆம் திகதி டில்லி வீர் பூமியில் நடைபெறும் நிகழ்ச்சியின் போது காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியிடம் ஒப்படைக்கப்படும்.

இந்த யாத்திரையில் 250 இற்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டு ஜோதியை எடுத்துச் செல்கிறார்கள்.

# மும்பைக் கடலில் கப்பல்கள் மோதி விபத்து; விஷப்பொருள் நீரில் கலப்பதால் பேராபத்து!

## நிலைமையைக் கட்டுப்படுத்த வெளிநாட்டு நிபுணர்கள் வருகை

மும்பை, ஓக. 11

மும்பை அருகே கப்பல்கள் மோதிய விபத்தினால், கச்சா எண்ணெயுடன் இரசாயன விஷப்பொருட்கள் கடலில் கலப்பதால் பயங்கர ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக வெளிநாட்டு நிபுணர்கள் மும்பை வந்து தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பனாமா நாட்டைச்சேர்ந்த எம்.எஸ்.சி. சித்ரா என்ற சரக்கு கப்பலும், எம்.வி. கலிஜியா என்ற மற்றொரு சரக்கு கப்பலும் மும்பைக் கடலில் கடந்த சனிக்கிழமையன்று பயங்கரமாக மோதிக்கொண்டன. இந்த விபத்தில் எம்.எஸ்.சி. சித்ரா கப்பல் பலத்த சேதமடைந்து இடது பக்கமாகச் சாயத்தொடங்கியது. கப்பலிலிருந்த இந்தியக் கப்டன் உட்பட 33 சிப்பந்திகள் கடலோரக் காவல் படையினரால் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

அந்தக் கப்பலில் 1,200 சரக்கு பெட்டகங்கள் இருந்தன. 2600 தொன்னுக்கும் மேற்பட்ட டீசல் மற்றும் எண்ணெய்யும் இருந்தன. 31 கொன்டெய்னர்களில், விஷத்தன்மை வாய்ந்த பொஸ்பரஸ், சோடியம் ஹைடிரோ குளோரைட்டு மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் இருந்தன.



மோதிய வேகத்தில் எம்.எஸ்.சி. சரக்கு கப்பலில் எண்ணெய் கசிந்து கடலுக்குள் கலக்கத் தொடங்கியது. அதேநேரம் கப்பல் ஒருபக்கமாக சரிந்ததால் சரக்கு பெட்டகங்கள் ஒவ்வொன்றாக கடலில் விழுந்து வருகின்றன. நேற்றுமுன்தினம் மதியம் வரை 300 பெட்டகங்கள் கடலில் விழுந்தன.

விஷத்தன்மை கொண்ட இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளும் கடலில் கலந்து வருவதால், 200 இற்கும் மேற்பட்ட கடல்வாழ் உயிரினங்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் பயங்கர ஆபத்து உருவாகும் நிலை ஏற்பட்டு உள்ளது.

இதன் காரணமாக, கப்பல் மோதிய பகுதியில் மீனவர்கள் யாரும் மீன்பிடிக்க வேண்டாம் என்று மும்பைத் துறைமுகம் சார்பில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. மேலும் மும்பையில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி மையத்தில் குளிர்விக்கும் பணிக்காக கடல் பகுதியில் இருந்து தண்ணீர் எடுக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்தியக் கப்பல் படை மற்றும் கடலோரக் காவல்படை சார்பில் கடலில் கலந்து வரும் எண்ணெய் படலங்கள் மற்றும் விஷப்பொருட்களை தடுக்கும் பணி நேற்றுமுன்தினம் 3 ஆவது நாளாக நடைபெற்றது. 6 கடலோரக் காவல் படைக் கப்பல்களும், ஒரு ஹெலி கொப்டரும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

அத்துடன் எண்ணெய் மாசு படலத்தை அகற்றுவதில் நிபுணத்துவம் வாய்ந்த நெதர்லாந்து நாட்டின் 'ஸ்மித் சால்வேஜ்' என்ற நிறுவனமும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது.

# சாதி மாறிக் காதலித்ததால் மானபங்கம் பெண்ணை நிர்வாணமாக்கி ஊர்வலம்!

## விடியோக் காட்சி செல்போனில் வெளியானதால் அம்பலம்

கொல்கத்தா, ஓக.11

வேறு சாதி இளைஞரைக் காதலித்ததால் ஆதிவாசி இளம் பெண்ணை நிர்வாணப்படுத்தி 8 கிலோ மீற்றர் தூரம் ஓட ஓட விரட்டித் தாக்கி மானபங்கப்படுத்திய - அதிர்ச்சியூட்டும் கொடூரச் சம்பவம் மேற்கு வங்கமாநிலத்தில் நடந்துள்ளது.

மேற்கு வங்க மாநிலம் சூரி பகுதியிலுள்ள செல்போன்களில், 'ஆதிவாசி பெண்' என்ற தலைப்பில் பரவிய நிர்வாண மானபங்க காட்சி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 17 வயதுள்ள அந்த ஆதி வாசிப் பெண், வேறு சாதி இளைஞரைக் காதலித்ததால், கிராம மக்கள் ஒன்றுகூடி இந்தக் கொடூரக் காட்சியை அரங்கேற்றியுள்ளனர்.

ஏறத்தாழ 100 ஆதிவாசிகள் டிரம்ஸ் போன்ற வாத்தியங்களை முழங்கியபடி பின்னால் ஆர்ப்பரித்து வர, ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக்கப்பட்ட அந்த அபலைப் பெண் தன் இரு கைகளால் தனது அங்கங்களை மறைத்தபடி தட்டுத் தடுமாறி ஓடிக்கொண்டு இருந்தாள். பின்னால் கூச்சலிட்டபடி வந்த ஆண்கள் சிலர், கைகளால் மானத்தை மறைக்கவிடாதபடி, கைகளில் தடியால் தாக்கியபடி வந்தனர். பின்னால் வந்தவர்கள் அதைப் பார்த்து சிரித்தபடி அந்தப் பெண்ணை விரட்டி வந்தனர்.

சில சிறுவர்கள் அந்தப் பெண்ணை கற்களால் தாக்கினார்கள். அருகில் உள்ள 3 கிராமங்கள் வழியாக ஏறத்தாழ 8 கிலோ மீற்றர் தூரத்துக்கு இந்த அராஜகம் நடைபெற்றது. ஓடிக்களைத்த அந்த பெண், நடக்க முடியாமல் நின்றபோதெல்லாம் தாக்கி மானபங்கம் செய்தபடி விரட்டினார்கள். 11 நிமிடங்கள் ஓடும் வகையில் இந்தக் கோரக்காட்சி செல்போனில் படம் பிடிக்கப்பட்டு வெளியாகி இருந்தது.

4 மாதங்களுக்கு முன்பு, கடந்த ஏப்ரல் மாத சுட்டெரிக்கும் வெயிலில் கொடூரமான முறையில் கிராமத்தினர் சார்பில் இந்தச் சம்பவம் அரங்கேற்றப்பட்டு இருந்தாலும், தற்போது செல்போனில் பரவிய பின்னர்தான் அதுபற்றி தகவல் வெளியே தெரியவந்துள்ளது.

இதையடுத்து பொலிஸார் தாங்களே முன்வந்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தத் தொடங்கினர்.

# அழைப்பிதழ்களில் பிரபாவின் படம்!

சென்னை, ஓக. 11

புதுக்கோட்டை மாவட்டத்தில் மொய் விருந்து மற்றும் காதணி விழா அழைப்பிதழ்களில் பிரபாகரன், முத்துக்குமார் மற்றும் புலிப் படம் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டப் பகுதிகளில் விடுதலைப் புலித் தலைவர் பிரபாகரன் படங்களை கட்-அவுட்களாக வைக்கவும், போஸ்டர் அடித்து ஒட்டவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சமீப காலங்களாக வடகாடு, கொத்தமங்களம், கீரமங்களம் பகுதிகளில் நடக்கும் மொய்விருந்து மற்றும் காதணி திருவிழா கட் - அவுட்களில் பிரபாகரன் மற்றும் விடுதலைப் புலிகளின் சின்னம் இடம்பெற்றிருந்தது. இதைப் பொலிஸார் அகற்றிவிட்டனர்.

இதனால் சீமான் மற்றும் புலிப்படங்கள் மட்டுமே இடபெற்றுவந்தன.

இந்நிலையில் பிரபாகரன் படம் கட்-அவுட், போஸ்டர்களாக மட்டும்தானே வைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று சில நாள்களாக மொய் விருந்து மற்றும் காதணி விழா அழைப்பிதழ்களில் பிரபாகரன், முத்துக்குமார் மற்றும் புலிப்படம் ஆகியவை இடம்பெறத்தொடங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தரப்பு கிரிக்கெட் நேற்று ஆரம்பம் முதல் ஆட்டத்தில் இந்தியா படுதோல்வி

தம்புள்ள, ஒக. 113

இலங்கை, இந்தியா, நியூஸிலாந்து அணிகள் பங்குபற்றும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டி தம்புள்ள, ரன்கிரி சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நேற்றுப் பகல் - இரவு ஆட்டமாக நடைபெற்றது.

இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான நேற்றைய போட்டியில் இந்திய அணியை நியூஸிலாந்து அணி 200 ஓட்டங்களால் தோற்கடித்தது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் நியூஸிலாந்து அணிக்கு 5 புள்ளிகள் கிடைத்துள்ளன. இந்திய அணிக்கு புள்ளிகள் எதுவும் கிடைக்கவில்லை.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. அதன் படி களமிறங்கிய நியூஸிலாந்து அணி 48.5 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 288 ஓட்டங்களை எடுத்தது. நியூஸிலாந்து அணியின் துடுப்பாட்டவீரர்களான ரெய்லர் 95 ஓட்டங்கள், ஸ்ரைறிஸ் 89 ஓட்டங்கள் என அரைச் சதம் கடந்து நியூஸிலாந்து அணியின் ஓட்டஎண்ணிக்கையை உயர்த்தினர்.

இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள் வரிசையில் பிரவீன் குமார் 9 ஓவர்கள் பந்துவீசி 3 விக்கெட்டுக்களையும், நேஹ்ரா 9.5 ஓவர்கள் பந்துவீசி 4 விக்கெட்டுக்களையும், ஓஜா 10 ஓவர்கள் பந்துவீசி 1 விக்கெட்டையும், யுவராஜ் சிங் 4 ஓவர்கள் பந்து வீசி 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

289 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற பெரிய இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் விழுந்தன. ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய கார்த்திக் 14 ஓட்டங்களுடனும், ஷேவாக் 19 ஓட்டங்களுடனும் வெளியேறினர். இவர்களைத் தொடர்ந்து இந்திய அணியின் விக்கெட்டுக்கள் மளமளவெனச் சரியத் தொடங்கியது இந்திய அணி வீரர்கள் வரிசையில் ஜடைஜா மாத்திரமே 20 ஓட்டங்களை அடித்தார். ஏனைய வீரர்கள் அனைவரும் வந்த வேகத்திலேயே பெவிலியன் திரும்பினர்.

இதனால் இந்திய அணிக்கு மிகப் பெரிய தோல்வி காத்திருந்தது. 29.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 88 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. நியூஸிலாந்து அணி இந்திய அணியை 200 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தேற்கடித்து மிகப் பெரிய வெற்றியை தன்வசப்படுத்தியது.

நியூஸிலாந்து பந்துவீச்சாளர்கள் வரிசையில் மில்ஸ் 6.3 ஓவர்கள் பந்துவீசி 2 விக்கெட்டுக்களையும், ரவ்பி 8 ஓவர்கள் பந்துவீசி 3 விக்கெட்டுக்களையும், ஓறம் 6 ஓவர்கள் பந்துவீசி 2 விக்கெட்டுக்களையும், மக்கே, வில்லியம்சன் ஆகியயோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றி நியூஸிலாந்து அணியின் வெற்றிக்குப் பெரிதும் உதவினர்.

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக் கிடையிலான அடுத்த போட்டி நாளை மறுதினம் நடைபெறும்.

## சாரதி லைசென்ஸ்; எழுத்துப் பரீட்சை 31 இல் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ். செயலகத்தில் நாளை நடைபெறவிருந்த சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையே இடம்பெறும் என்று யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாளை வியாழக்கிழமை நடைபெறவிருந்த அதேநேரம் ஒழுங்கின்படி 31 ஆம் திகதி காலை 9 மணிக்கும், பிற்பகல் 1.30 மணிக்கும் 2.30 மணிக்கும் எழுத்துப் பரீட்சைகள் இடம்பெறும். (ஒ-323)

## பெரும் பக்தர் கூட்டத்தின் மத்தியில் சந்நிதி முருகனின் கொடியேற்றம் நேற்று

வடமராட்சி, ஒக். 11

பக்தர்களின் அரோகரா கோஷம் வானைப் பிளக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகனின் கொடியேற்றம் நேற்று பக்தி பூர்வமாக ஆரம்பமானது.

நேற்றுக் மு.ப. 10 மணிக்கு கொடியேறி, முருகப்பெருமான் வீதியுலா வந்தார்.

கொடியேற்றத்திருவிழாவில் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர் என்றும் பக்தர்களின் வசதிகருதி விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருந்தன என்றும் எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து கோயில் சூழலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமம் உள்ளிட்ட பல மடங்களில் அன்னதானம் வழங்கப்பட்டது. (ஒ-236)

## இன்று நடக்கும் உதைபந்தாட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக.11

மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 17ஆவது ஆண்டு நிறைவையொட்டி அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன் கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகள் வருமாறு:

✱ பிற்பகல் 3 மணிக்கு - கொற்றாவத்தை சிவானந்தா வி.க. எதிர் இளவாளை யங் ஹென்றீஸ் வி.க.,

✱ பி.ப. 4 மணிக்கு - மணற்காடு சென். அன்ரனிஸ் வி.க. எதிர் குருநகர் பாடுமீன் வி.க. (ஒ-23)

## கிளிநொச்சி கனகபுரத்தில் கிணற்றில் இருந்து ஆணின் சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஒக். 11

கிளிநொச்சி, கனகபுரம் கோழிப்பண்ணைப் பகுதியில் வீட்டுக்கிணற்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்று நண்பகல் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பாலசுப்பிரமணியம் நிமலன் (வயது 50) என்பவரது சடலமே மீட்கப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:-

கனகபுரம் கோழிப்பண்ணையில் மீள் குடியமர்ந்த இந்த நபர் தனிமையில் வசித்து வந்தார். கடந்த சில தினங்களாக இவரைக் காணாத நிலையில் நேற்றைய தினம் கிணற்றில் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தை மீட்ட பொலிஸார் மரண விசாரணைகளுக்காக வவுனியா மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-10-405)

30 வருடங்களாகத் தடை விதிக்கப்பட்டிருந்த

## வயாவிளான் ஞானவைரவர் ஆலயத்துக்கு நாளை செல்வதற்குப் படையினர் அனுமதி

அச்சுவேலி, ஒக. 11

30 வருடங்களின் பின்னர் வயாவிளான் ஞானவைரவர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

ஆடிப்பூர உற்சவத்தில் கலந்துகொண்டு வழிபட மற்றும் அயலில் குடியிருப்போர் தமது வீடுகளைப் பார்வையிட விரும்பின் அன்று காலை 9 மணிக்கு வடக்கு புன்னாலைக்கட்டுவன் சந்தியில் ஒன்றுகூடுமாறும் ஆலயத்துக்கு அழைத் துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஆலய பரிபாலன சபை யின் தலைவர் மூ.விநாயகமூர்ததி அறிவித்துள்ளார்.

கடந்த 30 வருடங்களாகப் பாதுகாப்பு காரணங்களுக்காக குறித்த ஆலயப்பகுதிக்கு மக்கள் செல்லாது தடைசெய்யப்பட்டிருந்தது.

எனினும் தற்போது வயாவிளான் ஞானவைரவர் ஆலயத்தில் பூசை வழிபாடு செய்வதற்கும் ஆடிப்பூரத்திருவிழாவை சிறப்பாக நடத்துவதற்கும் பாதுகாப்புத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது.

நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஆடிப்பூர உற்சவத்துடன் ஆலய பரிபாலன சபையின் பொதுக்கூட்டமும் புதுவருடநிர்வாகிகள் தெரிவும் நடைபெறவுள்ளன.

மேற்படி நிகழ்வுகளில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஈ.பி.டி.பி. பிரமுகர்கள், வலி. வடக்கு பிரதேச செயலர் சு.முரளிதரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-11)

## இணைப்பில் பணிபுரியும் கிளிநொச்சி வலய ஆசிரியர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக. 11

யாழ்.மாவட்டத்தில் இணைப்பில் கடமையாற்றும் கிளிநொச்சி வலயப் பாடசாலை ஆசிரியர்கள் ஆவணி மாதச் சம்பளக் கொடுப்பனவுப் பட்டியலில் கையொப்பமிட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் முற்பகல் 10 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை கையொப்பமிட ஏற்பாடாகியுள்ளது என்று கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார்.

சம்பளப்பட்டியலில் கையொப்பமிட செல்லும் போது தாங்கள் இறுதியாகப் பெற்ற இணைப்புக் கடிதத்தினையும் அக் கடிதத்திற்கமைய கடமையேற்ற கடிதத்தினையும் எடுத்துச்செல்லுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (323)

## ஊர்காவற்றுறை விபத்தில் நேற்றிரவு குடும்பஸ்தர் பலி!

யாழ்ப்பாணம், ஒக. 11

ஊர்காவற்றுறை, சரவணைச் சந்தியில் நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்ற ஓட்டோ - ஹன்ரர் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார். மற்றொருவர் காயமடைந்தார்.

ஓட்டோவில் பயணித்த ஊர்காவற்றுறை, கரம்பன் வீதியைச் சேர்ந்த ஜெ.செபஸ்தியாம்பிள்ளை (வயது 40) என்பவரே மரணமானவர் ஆவார். ஜே.செதிசன் (வயது - 30) காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-ஐ)

## யாழ்.நகர வர்த்தக நிலையங்களில் நேற்று டெங்கு ஒழிப்புச் சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஒக11

யாழ்.நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தைப் பகுதியில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் நேற்று இடம்பெற்றன.

காலையில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டதும் வர்த்தகர்கள் தமது நிலையங்களை கூட்டித் துப்புரவு செய்ததோடு கடைகளுக்குள் இருந்த கழிவுப் பொருள்களை வீதியோரங்களில் பொதி செய்து வைத்தனர்.

பின்னர் இக்கழிவுகளை மாநகர சபையின் தொழிலாளர்கள் தமது வாகனங்களில் எடுத்துச் சென்றனர்.

அத்துடன் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகச் செல்லும் வடிகால்களும் துப்புரவு செய்யப்பட்டன.

சிரமதானம் மற்றும் துப்புரவுப் பணிகள் ஒருபுறம் நடக்க மறுபுறத்தில் வியாபார நடவடிக்கைகள் வழமை போன்று நடைபெற்றன. (த-26)

## தமிழரசுக் கட்சியின் கோப்பாய் கிளையின் செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 11

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆவரங்காலில் உள்ள கோப்பாய் தொகுதிக் கிளையின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சி.திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெறும்.

இந்தக் கூட்டத்தில் அமரர் கோப்பாய் கோமகன் கு.வன்னியசிங்கத்தின் நினைவு தினம் மற்றும் நூற்றாண்டு விழா வைக் கொண்டாடுவது பற்றியும் அன்னா ரின் பெயரில் சமூக மறுமலர்ச்சி மன்றம் உருவாக்குவது பற்றியும் கலந்துரையாடப்படும் என்று கிளைச் செயலாளர் அ.பரஞ்சோதி அறிவித்துள்ளார். (ஒ-323)

## வீதிகளில் பந்தல்களை அமைக்க மாநகர சபையின் அனுமதி தேவை

யாழ்ப்பாணம்,ஒக11

மாநகரசபை எல்லைக்குள் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் வீதிகளில் பந்தல்கள் அமைக்க முன்கூட்டி அனுமதி பெறவேண்டும்.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ. பற்குணராஜா மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

மாநகரசபை எல்லைக்குள் குறிப்பாக மக்கள் செறிவாக வாழும் பகுதிகளான குருநகர், பாஷையூர் மற்றும் நாவாந்துறை போன்ற பகுதிகளில் இடம்பெறும் மங்கள நிகழ்வுகளின் போது அங்கீகாரமற்ற முறையில் வீதிகளில் பந்தல்கள் அமைக்கப் படுவதனால் வாகனப்போக்குவரத்துக்கும், பாதசாரிகளுக்கும் நெருக்கடிகளையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தாத வகையில் அவற்றை அமைப்பதற்கான அனுமதியினை முன்கூட்டியே மாநகர சபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இதனடிப்படையில் வாடகைப் பந்தல் உரிமையாளர்கள் தாம் பந்தல்களை அமைப்பதற்கு முன்னர் மாநகரசபையிடம் உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவது அவசியமாகும் - என்றுள்ளது. (ஒ-ஐ)

## மஹிந்த - ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இரு நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசு தம் பக்கம் இழுத்துக் கொண்டதை அடுத்து அரசுடனான பேச்சுக்களை முறித்துக் கொள்வதாக ஐ.தே.க. அறிவித்திருந்தது தெரிந்ததே.

பேச்சுக்களில் கலந்துகொள்ளாது அடம் பிடித்தால் ஐ.தே.கவில் இருந்து மேலும் சிலரை உருவி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வோம் என அரச தரப்பு பதிலுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்றுத் திடீர் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே அரசமைப்புத் திருத்தங்கள் குறித்து தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவதற்கு இரு தரப்பினரும் இணங்கிக் கொண்டனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

**ஐக்கிய தேசியக் கட்சியின் குழு ஜனாதிபதியைச் சந்திக்கும்**

அரசமைப்புத் திருத்தம் குறித்த அரசின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளும் வகையில் ஐ.தே.க. குழு ஒன்று அடுத்த சில தினங்களில் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடும் என்று கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான கபீர் காசிம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தி யாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் அரசமைப்புத் திருத்தம் தொடர்பான அரசின் நிலைப்பாடு என்ன என்பதை அறிந்த பின்னரே இருதரப்புப் பேச்சுக்களில் ஐ.தே.க. பங்குபற்றுவதா இல்லையா என்பது குறித்து முடிவு எடுக்கப்படும் எனவும் கபீர் காசிம் தெரிவித்தார்.

**பேச்சு வேண்டாம் என்கின்றனர் ஒருசாரார்**

ஆனால் ஜனாதிபதியுடனான சந்திப்பில் தொடர்ந்து பேசுவதற்கான இணக்கத்தை ரணில் தெரிவித்திருக்கிறார் என்றும் இன்று நடக்க இருக்கும் கட்சிச் செயற்குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் பூதாகாரமாக உருவெடுக்கும் என்றும் ஐ.தே.க. உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசுடன் இணைத்துக் கொள்வதில்லை என அண்மையில் கட்சித் தவிசாளர் காமினி ஜயவிக்கிரம பெரேராவுக்கு வழங்கிய வாக்குறுதியை மீறி பிரபா கணேசன் மற்றும் திகாம்பரம் ஆகியோரை ஜனாதிபதி அரசில் இணைத்துக் கொண்டதால் ஐ.தே.கவின் ஒரு பகுதியினர் அரசு மீது கடும் கோபத்தில் உள்ளனர்.

இதனால் மீண்டும் அரசுடன் பேச்சுக்களில் ஈடுபடக்கூடாது என அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்



ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக்காலை அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார். அலரி மாளிகைக்கு வருகைதந்த ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வரவேற்று அழைத்துச் செல்கிறார்...

## பிரதியமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்ச்சைக்குரிய சம்பவங்களுடன் தொடர்பு பட்டிருந்த மேர்வின்சில்வா ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாகவும் அவருக்கு பல முறை எச்சரிக்கை விடுவிக்கப்பட்டபோதும் அவற்றை அவர் அலட்சியம் செய்ததாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமுர்த்தி உத்தியோகத்தரை மரத்தில் கட்டிவைத்த சம்பவம் தொடர்பாக பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று மாலை அறிவித்தது.

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்துக்கு வருகை தரவில்லை என்ற காரணத்தால் களனி பிரதேச சபைக்கு முன்னால் கடந்த 3ஆம் திகதி சமுர்த்தி முகவர் ஒருவரை அமைச்சர் மேர்வின் சில்வா மரத்தில் கட்டி வைத்து விநோத தண்டனை வழங்கியது தெரிந்ததே.

இதனால் சமுர்த்தி உத்தியோகத்தர் உட்பட அரச ஊழியர்கள் கொதித்தெழுந்து பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தனர்.

இந்த நிலையில் இன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சமுர்த்தி தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார். இந்தச் சந்திப்பின்போது அரசின் முக்கிய அமைச்சர்களும் பங்குகொள்ளவுள்ளனர். (ஒ-சி-10)

## இலங்கைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய பாரம்பரிய மீனவர் சங்க தலைவர் ரூபேஷ் குமார், இன்னொரு முறை தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்டால், எங்களது போராட்டம் பெரியளவில் இருக்கும்.

இலங்கைக் கடற்படையின் அத்துமீறலுக்கு எதிராக மத்திய மாநில அரசுகளின் நடவடிக்கை திருப்தியளிக்கவில்லை. உடனடியாக இதற்குத் தீர்வு ஏற்படுத்தித் தர வேண்டும்.

நொச்சிவாக்கத்தில் இருந்து கொட்டிவாக்கம் வரையில் மேம்பாலம் வர இருக்கிறது. இந்த மேம்பாலம் மீனவர்களின் வாழ்வுரிமையைப் பாதிக்கும். இந்த மேம்பாலம் மீனவர்களுக்குத் தேவையில்லை - என்று கூறினார். (அ-சி)

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமர்வுகள் நடைபெறவுள்ளன.

நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு சகல பிரஜைகளையும் இதற்கு ஒத்துழைக்குமாறும், பொது இலக்கை அடைவதற்கான உதவிகளையும், தகவல்களையும் தந்துதவுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழு 2002 பெப்ரவரி 21ஆம் திகதிக்கும், 2009 மே மாதம் 19ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி விசாரணை நடத்தவுள்ளது.

பொது மக்களுள் எவரேனும் தமது முறைப்பாட்டை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க விரும்பினால், அவ்வாறு செய்வதற்கான திகதியையும், நேரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக 0112673408 என்கிற தொலைபேசி இலக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கம் ஊடாக ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்ள வேண்டும் அல்லது மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு எழுதவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட ஆசன வசதிகளே உள்ளதால் பொதுமக்கள் நேர காலத்துடன் சமுகமளிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். (ஒ-சி)

## ஐ.தே.கவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை கடற்படைத் தலைமையகத்தில் இராணுவ நீதிமன்றத்தில் இடம்பெற்றது. ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான மூன்றாவது சாட்சியாளராக நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரத்ன மன்றுக்குச் சமுகமளித்திருந்தார். ஜெனரலுக்கு எதிராக அவர் சாட்சியளித்தார் என்று இராணுவ ஊடகப் பிரிவு அதிகாரி குறிப்பிட்டார்.

மேஜர் ஜெனரல் எச்.எல்.வீரதுங்கவின் தலைமையிலான நீதிபதிகள் முன்னால் வழக்குத் தொடுநர் மூன்றாவது சாட்சியாளரை அழைத்து விசாரித்த நிலையில், குறித்த விசாரணைகள் நாளை வியாழக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டன என்றும் இராணுவ ஊடகப் பிரிவு அதிகாரி தெரிவித்தார்.

தொடர்ந்து இரண்டு நாள்களாக ஜெனரல் சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி, சமுகமளிக்காத நிலையிலும் நாளை காலை 9 மணிக்கு இராணுவ நீதிமன்றம் விசாரணையைத் தொடரும் என அவர் கூறினார்.

இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்த போது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக முதலாவது இராணுவ நீதிமன்றம் நிறுவப்பட்டது.

இதன் நீதிபதிகளாக மேஜர் ஜெனரல் எச்.எல்.வீரதுங்க, மேஜர் ஜெனரல் ஏ.எல்.ஆர்.விஜேதுங்க மற்றும் மேஜர் ஜெனரல் டீ.ஆர்.பீ.ஜயதிலக்க ஆகியோர் செயற்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சன் - சீ கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படும் இந்தக் கப்பலில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களும் இருக்கின்றனர் என அறியக் கிடக்கின்றன என்றும் தெரிவித்தார்.

எனினும், அந்தக் கப்பலில் உள்ளவர்கள் யார்? எந்தக் காரணத்திற்காக அவர்கள் கனடா நோக்கிப் பயணத்தை மேற்கொள்கின்றனர் என்பதை அறிய தாம் கரிசனை கொண்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கைப் போர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

லேபர் கட்சியின் சில எம்.பிக்கள் ஈழத் தமிழர்கள் மீது அனுதாபம் கொண்டுள்ளார்கள். ஆனால் ஈழத் தமிழர்களின் பேரவலங்களை விளங்கிக் கொள்வதற்கு லேபர் கட்சி போதுமான முயற்சிகளை எடுக்கவே இல்லை. ஆகவேதான் இலங்கை அரசு தமிழருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் இன ஒழிப்பு நடவடிக்கைகளை ஆஸி. அரசினால் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது.

ஆகவேதான் ஆஸ்திரேலியாவுக்கு அரசியல் தஞ்சம் கோரி வரும் ஈழ அகதிகள் விடயத்தில் ஆஸி. அரசு கடும் போக்கைக் கைக்கொள்கின்றது. இது அக்கட்சியின் தலைமைத்துவ மாற்றத்தால் சரிவரப் போகின்ற விடயம் அல்ல.

இலங்கை அரசினால் யுத்தத்தின் இறுதி நாள்களில் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்கள் குறித்து சர்வதேச மட்டத்தில் விசாரணை நடத்த சர்வதேச சமூகத்துடன் சேர்ந்து 'ஆஸ்திரேலியா உரத்துக் குரல் கொடுக்க வேண்டும்.

அத்துடன் இலங்கையில் முட்கம்பி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று இலங்கை அரசுக்கு காத்திரமான நெருக்குவாரங்களைக் கொடுக்க வேண்டும்.

இவையே ஈழத் தமிழர்கள் இலங்கையில் அவர்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புகின்றமைக்கு உதவிகளாக அமையும். இலங்கையில் சமாதானம் கிடைக்க வேண்டுமானால் தமிழர்களுக்கு முதலில் நீதி கிடைக்க வேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

MAG NET ACADEMY (PVT)LTD
Your guide in Knowledge Development

PROGRAMMING LANGUAGE COURSES
(CERTIFICATE PROGRAMMES )
Commence on 21.08.2010 ( Saturday )

C & OOP ( Object Oriented Programming) using C++ with UNIX / LINUX
Duration : 85 Hours.

COMPUTER GRAPHICS using C with Project
Duration : 70 Hours.

JAVA
Duration : 35 Hours.

ADVANCE JAVA & J2EE with Project.
Duration : 50 Hours.

SIAT ACADEMY
ANIMATION COURSES
HURRY UP
To Register for SEPTEMBER In Take.

HURRY UP FOR REGISTRATION :-
COURSE CO-ORDINATOR, MAG NET ACADEMY (PVT) LTD
NO :19, 3RD FLOOR, N.THANARAJAH BUILDING,
STANLEY ROAD,JAFFNA
CONTACT NO'S :-, 0777 497186, 021 222 1864, 021 321 4756.

BIT தேவையான பாடங்களை MIS மட்டும் எடுக்கலாம்
1st semester ஆரம்பம் சனிக்கிழமை காலை 6.30
Call me:0776577359 R.Kumaran-B.Sc.

BEACON - யாழ்நகர்
★ A/L 2011 - புலங்கள் (வியாழன், வெள்ளி 5 - 6 p.m)
★ A/L 2012 - நீர்நிலையியல் (புதன், வியாழன் 4 - 5 p.m)
ஆரம்பம் : 11.08.2010
By :- N.Edison (B.Bc)

வெற்றிப் பயணம்
தரம் 1, 2, 3, 4, 5 மாணவர்களுக்குரிய "வெற்றிப் பயணம்" பயிற்சி வினாத்தாள்கள் புத்தகசாலைகளில் கேட்டு வாங்குங்கள்.
ஸ்ரீலங்காவின் No : 1 வெளியீடு

கற்சுமி வெளியீடு
தரம் - 5 மாணவர்களுக்குரிய
ஓகஸ்ட் - செப்ரெம்பர் மாத இதழ் "தேடல்"
பரீட்சையை முன்னிட்டு
வெளிவந்துவிட்டது
உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்
கற்சுமி, நாவலர் வீதி, யாழ்.

பதவி வெற்றிடம்
எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. Clerk (full time)
2. Instructor (MSO, DTP) full time
14.08.2010 ற்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்
Softview Computer College
43,Thaddatheru Junction, Jaffna.

வேலையாள்கள் தேவை
யாழ். நகரில் இயங்கிவரும் எமது ஸ்தாபனத்துக்கு வேலையாள்கள் (பெண்கள்) தேவை.
நேரில் வரவும்
அன்னை புத்தகசாலை,
யாழ்ப்பாணம். 222-9881

காணி விற்பனைக்கு
நவாலி அரசடி வீதியில்
கிணறு, மலசலகூடம்,
மின்சார வசதி,
பயன்தருமரங்கள் நிறைந்த,
நான்கு பக்கமும்
அறுக்கைபண்ணப்பட்ட
4 பரப்பு காணி விற்பனைக்கு
தொடர்புக்கு
T.P: 0772106194, 0728035559

யாழ்மண்ணில் 3வது அகவையில்
யாழில் கொழும்பு பிறின்டேர்ஸ்
666, கே.கே.எஸ் வீதி, யாழ்.
அகவை 3ல் எமது நிறுவனம் வழங்கும் மற்றுமோர் அதிரடி விலைக்கழிவு
மலர் வெளியீடுகளுக்கு 30% விலைக்கழிவு வழங்கப்படும்.
சகல விதமான அச்சுப்பதிப்பும் யாழில் கொழும்பு விலையில் பதிப்பு செய்யப்படும்
இம்பிறசன் சார்ஜ் (அடி கூலி)
A4 - 30/= (100ற்கு மேற்பட)
A4 - 40/= (100ற்கு உட்பட)
A3 - 60/= (100ற்கு மேற்பட)
A3 - 80/= (100ற்கு உட்பட)
அழைப்பிதழுக்கான பிறிண்டிங் சார்ஜ் 200/= மட்டுமே
வியாபார ஸ்தாபனங்களிற்கான வில்,லேபல் வகைகளுக்கு 9% விலைக்கழிவு
தொடர்ந்து 3வது ஆண்டில் நியாயவிலையில் உயர் தொழில் நுட்பத்தில் எமது நிறுவனம் யாழ்மண்ணில் பதிப்பு செய்வதற்கு ஆதரவு தந்து உதவிய வாடிக்கையாளர் மற்றும் வெளியீட்டாளர், நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் ... எண்ணம் போல் வண்ணம் அமைத்திட யாழ் மண்ணில் நாம்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.